படைப்பு

ஊற்று-5 | நதி-7 | நவம்பர் - 2022 | திங்களிதழ்
ISSN : 2582-4015

தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com

இந்த நூற்றாண்டின் கவி முகம் என்பது பன்முகம் கொண்டதாக இருக்கட்டுமே!

கவிஞர்
வெய்யிலுடனான
நேர்காணல்

- ஷோபா சக்தியின் நாவல்கள்

- தினேஷ் கண்ணன்

- கவிதை நடையில் ஒரு கலகக்காவியம்

- அரும்பாவூர் இதாஹிர் பாட்சா

- உயிர் கருகும் குருதி வாசம்

- கவிஜி

படைப்பு
தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-5 | நதி-7 | நவம்பர் 2022

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

ஆசிரியர் :
ஆசியாதாரா

நிர்வாகக் குழு :
சகா(சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

தலைமை நிருபர் :
வலங்கைமான் நூர்தீன்

நிருபர்கள் குழு :
முனைவர் கோ.நித்தியா
க.சோ.திருமாவளவன்
கலிங்கப்பட்டி க.கருப்பசாமி

முதன்மை வடிவமைப்பாளர் :
கமல் காளிதாஸ்

வடிவமைப்பு :
ப.முகம்மது புலவர் மீரான்

ஓவியக் கலைஞர்கள் :
அழ.ரஜினிகாந்தன்
அன்பழகன்

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

உள்ளே...

- **தலையங்கம்** -பக். 04
- **இந்த நூற்றாண்டின் கவி முகம் என்பது பன்முகம் கொண்டதாக இருக்கட்டுமே!**
  - கவிஞர் வெய்யிலுடனான நேர்காணல் -பக். 05
- **படைப்புச் சங்கமம் - ஏழாம் ஆண்டு விழா** -பக். 18
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  - மு.முருகேஷ் -பக். 29
- **ஷோபா சக்தியின் நாவல்கள்**
  - தினேஷ் கண்ணன் -பக். 35
- **கவிதை நடையில் ஒரு கலகக்காவியம்**
  - அரும்பாவூர் இ.தாஹிர் பாட்சா -பக். 42
- **பெண்ணிய நோக்கில் எஸ்.ராவின் உறுபசி நாவல்**
  - த.விஜயலட்சுமி -பக். 44
- **உயிர் கருகும் குருதி வாசம்**
  - கவிஜி -பக். 47
- **காதலை ஏந்தும் தமிழின் முதல் தன்முனைக் கவிதைத் தொகுப்பு**
  - செ.புனிதஜோதி -பக். 51
- **உசுர அறுத்துப் போட்டுப் போற...**
  - கவிஞர் ஏகாதசி -பக். 59

சிறுகதைகள்

- நகரச் சக்கரம்
  – எஸ்தர் ராணி -பக். 39

- ஆளுக்கொரு நியதி
  – இரெத்தினபிரகா. கா -பக். 53

கவிதைகள்

- க.ராஜகுமாரன் -பக். 16
- கே.பாலன் வடக்கத்தியான் பட்டி -பக். 16
- நேசன் மகதி -பக். 16
- அ.சீனிவாசன் -பக். 17
- பூங்கோதை கனகராஜன் -பக். 17
- மு.முபாரக் -பக். 17
- கா.ரஹ்மத்துல்லாஹ் -பக். 17
- கலைச்செல்வி -பக். 17
- பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 26
  – ஜின்னா அஸ்மி -பக். 50
- காயத்ரி ராஜசேகர் -பக். 63
- மா. காளிதாஸ் -பக். 63

தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' ஐம்பத்தைந்தாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

இறைவனைத் துதிக்கும் பாடல்களில் உருகிஉருகி உள்ளார்ந்த உணர்ச்சிகள் வெளிப்பட்டால் அது இதயத்தை இனிமையாய்த் தைக்கும், அவ்இறைவனிடம் மனதைத் தோய்க்கும். இம்மதம் அம்மதம் என்றில்லை. எம்மதத்திற்கும் பொது உணர்வு இது. சமணத்துடனும் பௌத்தத்துடனும் கடும் போட்டியிட்ட சைவமும் வைணவமும் அதிகமாய்த் தமிழில் உருகின. கால மாற்றத்தில் மதங்கள் வேறுவேறு உள் நுழைந்தாலும் தமிழ் அவர்களைத் தாங்கிப் பிடித்தது. பிற மதச் சாடல்கள் இன்றி எத்தனையோ நூல்கள் தமிழில் எழுந்தன. கண்ணதாசன் இயேசு காவியம் எழுதினார். சீறாப்புராணத்தில் எத்தனை தமிழ் மரபுகள். எந்த மதக் காப்பியமெனினும் தமிழின் இனிமை அதனையும் இனிமையாக்கும். தமிழுக்கேது தனி மதம்.. அது அனைவரையும் அணைக்கும் அம்மா. யாதும் ஊரே யாவரும் கேளிர்தானே நமக்கு.

சமீபத்தில் வரலாற்றுப் புனைவுகளைக் கண்மூடி நம்பும் ஒரு போக்கு பார்க்க முடிகிறது. கற்பனையை உண்மையென விவாதிக்கும் சூழலும் இருக்கிறது. வரலாற்றுப் புதினத்தில் எழுதப்படும் அத்தனையும் வரலாறு அல்ல. ஒரு வரி வரலாற்றுத் தகவலை வைத்துக்கொண்டு நூற்றுக்கணக்கான பக்கங்களை உருவாக்கும் எழுத்தாளனுக்குப் படைப்புத் திறன் அதிகம். படைப்பின் சுகம் லயிக்கச் செய்தால் அது படைப்பின் சிறப்பு. அவ்வளவுதான். புனைவின்பத்திற்காக எழுத்தாளன் உருவாக்கிய கற்பனைப் பாத்திரங்கள், கற்பனை நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்வதில் கவனம் வேண்டும். கதைப்போக்கிற்காகக் கூறப்படுவதைக் கொண்டு உண்மையான கதாபாத்திரங்களைத் தவறாகப் புரிந்துகொள்வதோ சித்தரிக்கப்பட்ட கதாபாத்திரங்களை உண்மையென நம்புவதோ அடுத்த தலைமுறைக்குத் தவறான தகவல்களைக் கடத்துவதாக முடிந்துவிடும். வரலாற்றுப் புனைவுகள் முழு வரலாறுகள் அல்ல என்ற தெளிவை வாசிப்போர் பெற வேண்டும்.

இம்மாத இதழில் படைப்பு ஏழாம் ஆண்டு விழாவின் கட்டுரைத் தொடர்ச்சி வெளிவந்துள்ளது. ஈழத் தமிழ் இலக்கியம் தொடர்பாக ஷோபா சக்தி, வ.ஐ.ச.ஜெயபாலன் இருவரது நூல்கள் குறித்த வாசிப்பனுபவங்கள் கட்டுரைகளாக உள்ளன. போரின் வலியைச் சொல்லும் ஜெர்மன் மொழித் திரைப்படத்தின் கதைக்களன் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. பெண்ணிய நோக்கில் உறுபசி நாவலை ஆராய்ந்த திறனாய்வுக் கட்டுரையின் இறுதிப்பகுதி வெளியாகியுள்ளது. கவிஞர் ஆரூர் தமிழ்நாடன் நூல் குறித்த விமர்சனம், கவிஞர் பாலா குறித்த விரிவான கட்டுரை ஆகியன இவ்இதழில் இடம்பெற்றுள்ளன.

இந்த மாதத் தகவின் நேர்காணல், கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், தொடர்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

ஆசிரியர். ■

கார்த்திக் திலகன்
ஒருங்கிணைப்பு : அம்மு ராகவ்

இந்த நூற்றாண்டின் கவி முகம் என்பது பன்முகம் கொண்டதாக இருக்கட்டுமே!

கவிஞர் வெய்யிலுடனான நேர்காணல்

சமகால நவீனத் தமிழ்க் கவிச்சூழலில் காத்திரமான தனித்துவமிக்க கவிதைகளை எழுதிவருபவர் கவிஞர் வெய்யில். நாட்டார் வாழ்வியல், சங்க இலக்கிய அழகியல், நவீன வாழ்வின் நெருக்கடி நிலை, கீழ்த்தட்டு மக்களின் அரசியல் எனக் கலவையான பண்பில் இயங்கக்கூடியவை இவரது கவிதைகள். கொம்பு சிற்றிதழின் ஆசிரியராகவும் பதிப்பாளராகவும் செயல்பட்டுவருபவரும் தற்போது விகடன் குழும இதழின் ஆசிரியராகப் பணியாற்றிவருபவருமான கவிஞர் வெய்யில் அவர்களுடன் படைப்பு தகவு இதழுக்கான நேர்காணல்...

வடிவமைதி கொண்டிருக்கும் கவிதைகள் தொடர்ந்து எழுதப்பட்டு வந்த காலத்தில், எழுத்துப் பயணத்தைத் தொடங்கிய நீங்கள், திமிறிப் பாயும் கவிதைகளைத் தொடர்ந்து எழுதிவருகிறீர்கள். இந்த திமிறலை நீங்கள் மொழிக்குள் அடைந்ததன் பின்புலம் என்ன?

வடிவரீதியாக மட்டும் திமிறுகிறவை அல்ல என் கவிதைகள். நீங்கள் குறிப்பிடும் 'வடிவமைதி கொண்டிருக்கும் கவிதைகள்' என்கிற வகைமைகள் எப்படி எல்லாக் காலத்திலும் இருக்கின்றனவோ அதேபோலத் திமிறிப் பாயும் கவிதைகள் என்கிற வகைமையும் எல்லாக் காலகட்டத்திலும் இருந்துவருகின்றன. மேலும் அப்படியான கவிதைகளை எழுதுவதற்கான வாழ்வியல் சூழலும், அதற்கான மனோநிலையும், அரசியல் பொருளாதாரச் சூழலும்கூட ரொம்ப முக்கியமென்று நினைக்கிறேன். என்னுடைய வாழ்வு, என் தன்னிலை இரண்டையும் எடுத்துக்கொள்ளும்போது நிச்சயமாக வடிவமைதி, பொருளமைதி, தொனியமைதி கொண்டிருக்கும் கவிதைகளை என்னால் எழுதச் சாத்தியம் இல்லாமலிருந்தது. மேலும் என்னுடைய கவிதைகள் என்பவை ஒரு உக்கிரமான நிலத்தை, மனிதர்களை, வாழ்க்கையை, சூழலைப் பேசுகிறவை. எனவே அவை அமைதியோடு அமைய வாய்ப்பில்லை.

வடிவமைதி என்பதேகூட ஒரு வகையான புரிதல்தான். அதற்கு நிலையான ஒரு இலக்கணம் இல்லை. ஒவ்வொருவருக்கும் அமைதியின் இலக்கணமும் திமிறியொலித்தலின் இலக்கணமும் மாறுபடும். வண்ணதாசன் கவிதைகள் மிக மென்மையானவை போல அமைதியானவை போலத் தோன்றும். அதிலும்கூட திமிறிப் பாய்கிற உணர்வுகளும் தொனியும் உண்டு. என்.டி.ராஜ்குமார், ரமேஷ் பிரேதனின் கவிதைகள் திமிறிப் பாய்கிற கவிதைகளைப் போலிருக்கும். ஆனால் அதற்குள்ளும் அமைதி உண்டு. ஆணுக்குள்ளிருக்கும் பெண் போல, பெண்ணுக்குள்ளிருக்கும் ஆண்போலத் தொழிற்படுகிறவை இவை.

'அக்காளின் எலும்புகள்' என்கிற உங்களது தொகுப்பு மிகவும் பேசப்பட்டுக்கொண்டிருக்கிற தொகுப்பு. எல்லா அம்மாக்களையும் ஒன்றிணைத்து ஒரே உருவமாக மாற்றினால் அது மகா சக்தி என்னும் வடிவத்தில் போய் முடியும். அதுபோல எல்லா அக்காக்களையும் ஒன்றிணைத்து ஒரே வடிவமாக மாற்றுகின்ற முயற்சி என்று இந்தத் தொகுப்பினைச் சொல்லலாமா?

'மகாசக்தி' எனும் சொல் ஒரு மதவயப்பட்ட சொல்லாக அல்லது ஆன்மீக உலகின் சொல்லாக இருக்கிறது. அதனால், அந்த வார்த்தையிடமிருந்து கவனமாகக் கொஞ்சம் விலகுகிறேன். தொகுப்பின் கவிதைகளுக்குள் ஒரு அக்காள் திரும்பத் திரும்ப வந்தாலும், அக்குரல் பல்வேறு அக்காக்களுடையவை. தொகுப்பில், குறிப்பாகப் பெண்களின் வாழ்க்கையில் முக்கியமான அம்சமாகக் கருதக்கூடிய மணவாழ்க்கைத் தேர்வு, பாலியல் சுதந்திரமற்ற தன்மை, பாலியல் சார்ந்த ஒடுக்குமுறைகள், இறுக்கமான கட்டுப்பாடுகள், ஆணவக்கொலைகள், அங்கீகரிக்கப்படாத பெண் உணர்வுகள் என அந்த உலகை நான் பேச விரும்பினேன்.

மேலும் அக்காக்களுடைய தனிமையை, ஏக்கத்தை, காமத்தை எழுதுகிற இடத்தில், கொஞ்சம் பிசகினாலும் தவறான தொனி வந்துவிடக்கூடும். எனவே அந்தக் கவிதைகளை மிகக் கவனமாக, ஒரு வெகுளித்தனமான அறியாமையில் இருக்கக்கூடிய சிறார் பருவத்தைத் தாண்டாத ஒரு தம்பியின் குரலில் எழுதினேன். தமிழ் நிலத்தின், ஒருங்கிணைக்கப்பட்ட பல அக்காக்களினுடைய ஓலமும், சந்தோசக் குலவையும், முனகலும், பெருமூச்சும் என அக்கவிதைகளைச் சொல்லலாம்.

"கவிஞர்கள் தங்கள் சுய அனுபவங்களைப் பொதுவெளியில் வெட்கமில்லாமல் கொண்டாடுகிறார்கள். இது அவர்களுக்கு அவர்களே செய்துகொள்ளும் துரோகம்" என்று

பிரடெரிக் நீட்சே குறிப்பிடுகிறார். இந்த கருத்தை நீங்கள் எவ்விதம் எதிர்கொள்கிறீர்கள்?

நீட்சேவின் பல கருத்துக்களில் எனக்கு முரண்பாடுகள் உண்டு. அவரது சில முன்வைப்புகள் மீது வியப்புண்டு. ஆனாலும், நான் அவரை முழுமையாக ஏற்றுக்கொள்கிறவன் அல்ல. இது எப்போது என்ன சூழலில் அவரால் சொல்லப்பட்ட கருத்து என்று தெரியவில்லை. ஆனாலும், அவருடைய இந்தக் கருத்திலும் எனக்கு முழு உடன்பாடு கிடையாது. ஒரு கவிஞன் தன்னுடைய சுய அனுபவங்களைப் பொதுவில் வைத்துக் கொண்டாடுவதும் விமர்சிப்பதும் இகழ்வதும் கவிதைக்குள் அனுமதிக்கப்படுகிற விஷயம்தான். பாவனைதான் கலைகளின் பிரதான குணம் என்றாலும், ஒரு கலைஞன் தன்னுடைய சுய அனுபவங்களின் மூலம்தான் இந்த வாழ்க்கையை இன்னும் தீவிரமாகப் புரிந்துகொள்ள முடியும். அந்தப் புரிதலின் வழியேதான் தீவிரமான கருத்துக்களை, தீவிரமான உணர்ச்சிகளைப் பற்றிப் பேச முடியும். ஆகையால் ஒரு கலைஞனுக்குச் சுயஅனுபவம் மிக முக்கியமெனக் கருதுகிறேன். அதைப் பொதுவெளியில் வைப்பதற்கு ஒரு தைரியம் தேவை.

அதேசமயம், சுயஅனுபவங்களைப் பொதுவெளியில் வைக்கும்போது, அவன் அவனுக்கே துரோகம் செய்துகொள்கிறான் என்பதில் ஒரு சின்ன உண்மை இருக்கத்தான் செய்கிறது. எந்த ஒரு கலைஞனுக்கும் அவனுடைய வாழ்வின் சொந்த அனுபவங்களைப் பொதுவெளிக்குக் கொண்டுவருவதில் இருக்கக்கூடிய பின்விளைவுகள் என்பது கொஞ்சம் சிக்கலானதுதான். அது அவனுக்கே எதிராக என்றைக்கும் மாறக்கூடிய ஒன்றுதான். எனவே, அந்த ஒரு இடத்தை *consider* பண்ணலாம். அதேசமயம், தலித் கவிதைகள், பெண்ணியக் கவிதைகளில் சுய அனுபவம் ரொம்பவே முக்கியம். அவற்றை முன்வைக்காமல் எழுதவே முடியாது. ஆக, இது சர்ச்சைக்குரிய, விமர்சனத்துக்குரிய, கொஞ்சம் உண்மையும் இருக்கக்கூடிய ஒரு ஸ்டேட்மெண்ட். கலைஞன் தன் முழு அனுபவ ரகசியங்களையும் கலையில் வெளியேற்றிவிடுவது அவனுக்குள் ஒரு *Dryness* ஐக் கொண்டுவரலாம்.

ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மொழியிலும் அந்த நூற்றாண்டின் பிரதிநிதியாக ஒரு கவிஞன் தோன்றுவான் என்று சொல்வார்கள். இந்த நூற்றாண்டின் கவிஞன் பிறந்து வளர்ந்து எழுதத் தொடங்கிவிட்டானா? அல்லது இனிதான் பிறக்க வேண்டுமா?

குறிப்பிட்ட அமைப்புகளுக்கு அப்படி ஒரு ஐகானை உருவாக்க வேண்டிய தேவையிருக்கிறது. ஒரு நூற்றாண்டின் கவிஞன் இவன்தான்/இவள்தான் என்று நிறுவி, அந்த அடையாளத்தில் அல்லது பிம்பத்தின் பின்புலத்தில் அரசியல் செய்ய வேண்டிய நிர்பந்தங்கள் இருக்கின்றன. ஆனால் ஒரு கவிஞனாக, இந்த நூற்றாண்டின் கவிஞன் இவர்தான் என்று முத்திரையிடுவது, நிறுவுவது கவிஞனின் வேலை அல்ல. அந்தக் கட்டாயம் ஒரு கவிஞனுக்கு இல்லை. நாம் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அதற்கு நிறைய பேர் இருக்கிறார்கள். இந்த நூற்றாண்டின் கவி முகம் என்பது பன்முகம் கொண்டதாக இருக்கட்டுமே!

ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கவிதை என்ன செய்யும் என்ற அங்கிருந்த அனைவருக்குமான கேள்விக்கு, 'திருக்குறள் என்னைத் தொந்தரவு செய்கிறது' என்று பதில் சொல்லியிருந்தீர்கள். அனைவருக்குமான பொதுமறையாக உள்ள திருக்குறள் கவிஞனுக்குத் தருகின்ற பிரத்தியேகமான தொந்தரவு என்ன?

திருக்குறளில் நிறைய வரிகள் என் அன்றாடத்தில் குறிக்கிடுகிறவையாக இருக்கின்றன. உதாரணமாக

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்

உயிர்நீப்பர் மானம் வரின்"

என்ற குறளோடு நான் நித்தமும் போராடுகிறேன். ஊழ் பற்றிய அதிகாரம் எனக்கு ரொம்பப் பிடித்தமானது.

அனைத்துக்கும் மேலாக "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வரி இந்தச் சமூகத்திற்கு தரக்கூடிய செய்தி, நீதி, புரிதல் மிக முக்கியமானது. திருக்குறள் எப்போதும் என்னை ஆச்சர்யப்படுத்திக்கொண்டே இருக்கக்கூடிய ஒரு இலக்கிய வகைமை. அதன் மொழிச்சுவை ரொம்பவே பிரத்யேகமானது. என் விமர்சகர்களில் நண்பர்களில் முக்கியமானவர் வள்ளுவர். காமத்துப்பால் ஒவ்வொரு கவிஞனும் கவனமாகப் பயில வேண்டிய பகுதி. அதைப் பயிலும் ஒருவர் கவிஞராக மாறும் வாய்ப்பு உண்டு.

உங்கள் கவிதைகளில் காணப்படும் தீவிரமான அரசியல் பண்புகளுக்காகவும் அதை நீங்கள் சொல்கிற அழுத்தமான தொனிக்காகவும் உங்களது கவிதைகள் மிகவும் கவனிக்கப்படுகின்றன. எனினும் தமிழில் அரசியல் நீக்கம் பெற்ற கவிதைகளே பெரும்பாலும் தொடர்ந்து



வெளிவந்துகொண்டிருக்கின்றன. அத்தகைய கவிதைகளின் தேவையும் நோக்கமும் என்னவாக இருக்கும் என்று கருதுகிறீர்கள்?

உங்கள் அவதானிப்பு சரியானது என்றே நினைக்கிறேன். தமிழில் அரசியல் நீக்கம் பெற்ற கவிதைகளே பெரும்பாலும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அரசியல் கவிதை என்றால் என்ன என்பதே பெரிய *Topic*. உளவியல்ரீதியாக ஒரு கவிஞர் தன் பாடுபொருளை, குரலை, வெளிப்பாட்டு வெளியைச் சுய தணிக்கை செய்துகொள்வதின் அரசியல் குறித்த புரிதல் நிறைய்ய பேருக்கு இல்லை. எழுத்தே மொழியே, பொருளே, அனுபவமே, கருதுகோளே, அழகியலே அரசியல் எனும்போது, கவிதை அரசியலிலிருந்து எப்படித் தப்பிக்க முடியும்?

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' போலவே எல்லாக் கவிதைகளும் அரசியல் குறித்தனவேதான். ஆனால் கவிதையில் தொனிக்கும் அந்த அரசியலை, ஒரு கவிஞன் தெரிந்து செய்கிறானா, இயல்பில் நிகழ்கிறதா, அல்லது அறியாமையினால் அதை அனுமதிக்கிறானா என்பது முக்கியம். ஒரு கவிஞனின் அறியாமையால் கவிதைக்குள் அரசியல் தொழிற்படுவது அபத்தம். ஆனால், நிறைய கவிதைகளில், தங்களையறியாமல் அப்படியான அரசியலை அனுமதித்துக்கொண்டிருக்கிறார்கள் பலர். ஒரு எளிய உதாரணம். 'ஆன்மா' எனும் சொல்லை எல்லோரும் தமிழில் கவிதையில் பயன்படுத்துகிறார்கள். ஆனால் ஆன்மா என்பதின் கருத்தியல் பின்புலம் குறித்த தெளிவான புரிதலோடுதான் அதைப் பயன்படுத்துகிறார்களா என்றால் இல்லை. ஆன்மா என்பது இந்தியத் தத்துவவியலில், தமிழ்த் தத்துவவியலில் பெரிய விவாதப் பொருள். ஆனால் அந்த வார்த்தை குறித்த எந்தப் புரிதலும் இல்லாமல், கவிதையில் சகட்டுமேனிக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இதைப்போல நிறைய சொற்களைப் பயன்படுத்தித் தன்னையறியாமல் ஒரு கருத்துக்கு... அக்கருத்து அதிகாரம் பெறும் அரசியலுக்குச் சார்பெடுத்து நிற்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், தன் முன்னோடியாகக் கருதக்கூடியவர்களைப் பின்பற்றுவதன் வாயிலாகச் சில சொற்றொடர்களை, சில நம்பிக்கைகளை இவர்கள் திரும்பப் பயன்படுத்துகிறார்கள். அதன் வாயிலாக தன்னையறியாமல் ஒரு அரசியலை அவர்கள் எழுதுகிறார்கள், அது ரொம்ப பரிதாபகரமானது.

பொதுவாக அரசியல் கருத்துக்களுக்கு மாற்றுத்தரப்பு என்ற ஒன்று இருக்கும். அரசியல் கவிதைகள் ஒரு தரப்பினுடைய நியாயத்தை வலுப்படுத்துவதாக எழுதப்படும்போது மற்ற தரப்பினர்கள் அருவருப்பும் வெறுப்பும் கொள்ளவேண்டிய நிலை ஏற்படலாம். உண்மையில் கவிதைகளில் அரசியல் தன்மை என்பதற்கு ஏதேனும் பொதுவான தரக்கட்டுப்பாட்டு விதிகள் உள்ளனவா?

அரசியல் கவிதைகள் எழுதும்போது இன்னொரு தரப்பு காயப்படாமல் அல்லது இன்னொரு தரப்பு கோவப்படாமல், ஆதங்கப்படாமல் இருக்கும்படி எழுதுவதென்பது முதலில் தேவையற்றது என்பேன். அப்படியெல்லாம் பார்க்க வேண்டியதில்லை. ஒரு அரசியல் கவிதை எழுதுகிறீர்களென்றால், யாரோ ஒரு பாதிக்கப்பட்ட நபர் பக்கம் நின்றுதான் எழுத முடியும். அது இன்னொரு தரப்பைக் கோபப்படுத்தத்தான் செய்யும். தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு பற்றிய ஒரு கவிதையைக் காவல்துறையையும் பாராட்டி, போராட்டக்காரர்களையும் விதந்தோதி எழுத முடியுமா?

எல்லோருக்கும் பொதுவான ஒரு நீதி என்பதோ, எல்லோருக்கும் பொதுவான ஒரு அறம் என்பதோ, எல்லோருக்கும் பொதுவான ஒரு கவிதை தரக்கோட்பாடு என்பதோ எப்போதும் எங்கேயும் இருந்ததில்லை. இருக்க முடியாது, இருந்தாலும் அதை அனுமதிக்க முடியாது என்பதுதான் என் கருத்து.

கவிதையின் வெற்றி என்பது அது வெளிப்படும் மொழியைவிட அதை வெளிப்படுத்தும் உடலின் - அதை வாசிக்கும் உடலின் உணர்ச்சியை எந்த அளவுக்கு அதைத் தூண்டுகிறது என்பதைப் பொறுத்து அமையும் என்று ஜமாலன் குறிப்பிடுகிறார். உணர்வாக்கம் என்பது உங்கள் கவிதையின் அடிப்படைப் பண்பாக இருக்கிறது. அப்பா அம்மா அக்காள் தங்கை அண்ணன் தம்பி என்ற அடிப்படை உறவுகளை மையப் பாத்திரங்களாக அமைப்பது என்பது உணர்வு நிலையில் தேவையான உயரத்தை எட்டுவதற்கான உத்தி என்று சொல்லலாமா?

நேரில் என்னுடன் உரையாடிய நபர்களுக்குத் தெரியும், நான் பேசும்போது என் உடலும் சேர்ந்து பேசும். என் கவிதை ஆரம்பிக்கும்போது ஒரு நிலத்தினுடைய சூழலோ, உயிர்களுடைய சத்தமோ, வாசனையோ, வண்ணமோ ஏதோவொன்று இல்லாமல் என் கவிதைகள் நகராது. என் கவிதைகளின் அடிப்படையே நம்மைச் சுற்றியிருக்கின்ற உயிரியல் சூழலின் நடனம்தான். அது என்னோடு சேர்ந்து கவிதைக்குள் இருக்கும். என் கவிதைக்குள் காதலைச் சொல்வதற்கு ஒரு எருமையோ பாம்போ பனைமரமோ வெள்ளரிக்கொடியோ, நெருப்போ ஏதோவொன்று அவசியம்.

இயற்கையினுடைய அசைவுகள் இல்லாமல் எனக்கு எதுவுமே சொல்ல வராது. இந்தப் பண்பு என் பால்யகால வாழ்க்கையிலிருந்தும் சங்க இலக்கிய வாசிப்பிலிருந்தும் நான் பெற்றது. இயற்கையை, உயிர்களை, மனித உறவுகளைத் தவிர்த்துவிட்டுக் கவிதையை எனக்குச் சொல்ல

வராது. இது உத்தியல்ல என் இயல்பு.

காமத்தில் பிசைந்த உணவு, ஞானச்சுரப்புக்கான பத்திய மருந்து என்று எழுதியவர் நீங்கள். உங்கள் கவிதைத் தொகுப்பு குறித்த விமர்சனம் ஒன்றில் காமாதீதம் என்ற சொல் பயின்றுவருவதைப் பார்க்க முடிகிறது. காமம் உங்கள் கவிதைகளில் எவ்விதம் தொழிற்படுகிறது?

பொதுவாக, காமம் என்ற சொல் ரொம்பத் தேய்வழக்காகவும், தவறான புரிதலொடும், Sensorக்கு உட்பட்ட சொல்லாகவும் இங்கு பார்க்கப்படுகிறது. காமம் என்பது விருப்பம், அழகு, அன்பு என நிறைய பொருள்கொண்ட சொல். நான் என்னுடைய கவிதைகளில் எங்கெல்லாம் காதல் என்று எழுதலாமோ அங்கெல்லாம் காமம் என்ற சொல்லைப் பயில்கிறேன். காமம் என்று சொல்ல வேண்டிய பல இடங்களில் காதல் என்று எழுதுகிறேன். இதை நான் திட்டமிட்டேதான் செய்கிறேன். வணிக இதழ்கள் இந்தச் சொல்மீது உருவாக்கிய அருவருப்பு உணர்வை; குற்ற உணர்வைக் கவிதைகளால் கழுவ வேண்டும் என நினைக்கிறேன். மிக அழகான ஒரு சொல்லாக மக்கள் இந்தச் சொல்லைப் புழங்க வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

காமமென்பது உண்மையிலேயே ஒரு பேரழகான உணர்ச்சி. மனிதர்கள் மனிதர்களுக்குத் தங்கள் உடலை மிகச்சிறந்த வகையில் பரிசளிக்கக்கூடிய ஒரு நிகழ்வைக் குறிப்பிடும் சொல்லாகவும் அது இருக்கிறது. மிக அழகான உணர்ச்சி, மிக ஆழமான சொல் என்பதால் அதைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்துவதில் ஆர்வமிருக்கிறது.

தமிழுக்குப் பன்றிக்கறிச் சுவை என்று சொல்லும் நீங்கள், 247 பன்றிகளையும் பாடி அழைக்கும்போது அவை மகிழ்ச்சியான பன்றிக்குட்டிகளாக உங்கள் தொழுவத்தில் வந்தடையும் மர்மமென்ன? உங்களுடைய அகராதியில் பன்றிக்குட்டி என்பதற்கு மகிழ்ச்சி என்று அர்த்தம் இருக்கிறதா?

என்னுடைய வாழ்க்கையில் பன்றி என்ற சொல்லும் உயிரும் ரொம்ப முக்கியமானவை. என்னை நினைவுகூரும் நிறைய பேர் பன்றிக்குட்டியை நினைவுகூர்கிறார்கள். பன்றிக்குட்டிகளைக் கடந்துசெல்லும் பலர் என்னை நினைவுகூர்கிறார்கள். மகிழ்ச்சியான பன்றிக்குட்டி என்ற சொற்றொடர் என்னுடைய அடையாளமாக இருப்பது, தமிழில் ஒரு கவிஞனாக எனக்குக் கிடைத்திருக்கின்ற மிகச்சிறந்த பரிசு என்றே கருதுகிறேன்.

விஜய்குமார் எனும் தம்பி ஒருவர் என்னுடைய பெயரையும், மனுஷ்யபுத்திரனின் பெயரையும் தன்னுடைய கைகளில் பச்சை குத்திக்கொண்டார். என் பெயருக்குப் பக்கத்தில் பன்றிக்குட்டி ஒன்றின் உருவத்தையும் பச்சைகுத்தி இருக்கிறார். அவர் என் பெயரைப் பச்சை குத்திக்கொண்டதில் எனக்குக் கொஞ்சமும் உடன்பாடு இல்லை. நான் அவரிடம் 'நீங்கள் என்னை வெறுக்கும் நாள் நெருங்கிக்கொண்டிருக்கிறது. அப்போது இந்தப் பச்சை உங்களுக்குப் பெருந்துயரமாக



இருக்கும்' என்று சொன்னேன். ஆனால், அவர் பன்றிக்குட்டியைத் தன் உடலில் பச்சை குத்திக்கொண்டது எனக்கு மகிழ்ச்சியளித்தது. அதற்கு ஆதாரமாக என் கவிதைகள் இருந்ததில் எனக்கு மகிழ்ச்சி.

தமிழ் அழகியல் வெளியில் என் கவிதைகள் மூலமாக நடந்த மிக முக்கியமான தலைகீழாக்கமாக மகிழ்ச்சியான பன்றிக்குட்டி இருப்பது எனக்குப் பெரு மகிழ்ச்சி. ஒருவர் முகநூலில் தன் குழந்தையின் படத்தைப் பதிவிட்டு 'மகிழ்ச்சியான பன்றிக்குட்டி' என்று அதற்குத் தலைப்பிடும்போது, அவ்வளவு நிறைவாக இருக்கிறது.

ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, கீழ்மையான ஒன்று என்று கருதப்படும் ஓர் உயிர் மேன்மையுறும்போது, சந்தோசமான ஒன்றாக மாறும்போது, அழகான ஒன்றாக மாறும்போது நான் அடைகிற சந்தோசம் பெரிது. ஒரு கவிஞனுடைய மிகப்பெரிய பணி என்பது ஒரு சமூகத்தில் இருக்கக்கூடிய மேன்மைகளையும் கீழ்மைகளையும் தலைகீழாக்கம் செய்வது. ஒரு சமூகம் கொண்டிருக்கிற அழகியல் கருத்துக்கள்மீது குறுக்கீடு செய்வது. அதை என் கவிதைகள் செய்திருக்கின்றன என்பதில் மகிழ்ச்சி. இந்த உலகில் பன்றிக்குட்டிகளும் மகிழ்ச்சியாக வாழ உரிமையுள்ளவை என்பதை ஒரு பன்றிக்குட்டியாக இந்த இடத்தில் அழுத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வில்லுப்பாட்டும் திருவிழாச் சடங்குகளுமாகத் துவங்கிய உங்கள் பால்யத்தின் பாதிப்பு உங்கள் மொழியில் படிந்திருப்பதைக் காணமுடிகிறது. இளையராஜாவின் ரசிகராக இருப்பதனால் அவரது பல மெட்டுக்களையும் கவிதைக்குள் மறைத்து வைக்கிறீர்கள் என்பதில் உண்மை இருக்கிறதா? கவிதையின் இயங்கியல் தன்மைக்கு இசைமையின் பங்களிப்பு என்ன?

உண்மையில் வில்லுப்பாட்டும், திருவிழாச்சடங்குகளும் இசையும் என்னுடைய கவிதைகளில், பால்யத்தில், வாழ்க்கையில் பெரும் பாதிப்பை உண்டாக்கியிருக்கின்றன. அதேபோல இளையராஜாவின் இசை என் ஒவ்வொரு செல்லிலும் படிந்திருக்கிறது என்பதைப் பெருமையுடனேயே சொல்வேன். எவ்வளவுக்கு எவ்வளவு ஒரு மனிதன் தன் உடல்மொழியில், பேசுமொழியில், உணர்ச்சியில் இசைமையைக் கொண்டிருக்கின்றானோ... அவனுடைய கவிதையும் மொழியும் வாழ்வும் உலகும் அவ்வளவு அழகான ஒன்றாக இருக்கும். பண்டித இசைக்கு வெளியே, தன் இயற்கைச் சூழலிலிருந்து, உழைப்பிலிருந்து, உடலிலிருந்து மிக இயல்பாக இந்தப்



பிரபஞ்சத்தின் இசையை அனுபவம் கொள்கிற எல்லோருமே கலைஞர்கள்தான். சிலர் அந்த இசையுணர்ச்சியை மொழியோடு படைப்பாக்குகிறார்கள். பெரும்பாலானவர்கள் அதை அனுபவித்துக் கடந்துபோகிறார்கள்.

சமீபத்தில் கவிஞர் வெய்யிலின் படைப்புலகம் என்னும் நிகழ்வு சென்னை மயிலையில் நடைபெற்றது. அதில் பல்வேறு அறிஞர்கள் கவிஞர்கள் கலந்துகொண்டு உங்கள் கவிதைகள் குறித்து உரையாற்றினார்கள். இந்நிகழ்வின் முடிவில் உங்கள் படைப்புலகம் குறித்த ஒட்டுமொத்தக் கருத்தாக்கம் மனதில் மேலெழும்பி வந்திருக்கும். அதனை எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்களேன்...

அதுவொரு முக்கியமான நிகழ்வு. அதை ஒருங்கிணைத்த, அதில் கலந்துகொண்ட, என் படைப்புகள் குறித்துப் பேசிய அனைவரையுமே நான் ரொம்பவே மதிக்கிறேன். எல்லோருக்கும் என் அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். கவிஞர் அகரமுதல்வனுக்கு என் கூடுதல் அன்பு. என்னைவிடவும் என் கவிதைகளை அதிகம் அறிந்துவைத்திருப்பவர்.

அன்றைய நிகழ்வில் எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் என்னை நேர்காணல் செய்யும் வகையில் உரையாடியது மிக நல்ல அனுபவமாக இருந்தது. நிகழ்வுக்கு முன்பும் பின்பும் எஸ்.ரா என் கவிதைகள் குறித்துப் பேசியவை மேடையில் பேசிய உரையைவிடவும் மிக நுட்பமானவை. என் கவிதைகளை நான் எழுத ஆரம்பித்த நாளிலிருந்தே கவனித்துப் பாராட்டி வருபவர் அவர்.

கவிஞர் மனுஷ்யபுத்திரன் தன் உரையில் ‘வெய்யில் என்னை முந்திச் செல்கிற கவிஞன்’ என்று குறிப்பிட்டது இதுவரை தமிழில் நிகழாத அற்புத கணம். அவரது பெருந்தன்மை என்றே அதைக் கருதுகிறேன். பேரா.க.பஞ்சாங்கம், கவிஞர் அ.வெண்ணிலா, பேரா.பா.ரவிக்குமார், கவிஞர் வசுமித்ர, பேரா.அரங்கமல்லிகா, கவிஞர்கள் த.ஜீவலட்சுமி, ந.பெரியசாமி, வேல்கண்ணன், ம.கண்ணம்மாள், முத்துராசாகுமார், செந்தில் கரிகாலன், எழுத்தாளர் காளி பிரசாத், விமர்சகர் ஜா.ராஜகோபாலன், திரைக்கதையாசிரியர் ராஜேஷ் உள்ளிட்டோரின் உரைகள் மனதுக்கு நெருக்கமாக இருந்தன. ஆனாலும், என் படைப்புலகம் குறித்த ஒட்டுமொத்தக் கருத்தாக்கம் அந்நாளில் திரண்டது என்று என்னால் சொல்ல முடியவில்லை. என் கவிதைகள் எவ்வளவு தூரம் தமிழ்ச் சூழலில் வினையாற்றியிருக்கின்றன என்கிற ஒரு எளிய புரிதலுக்கு வர வாய்ப்பாக இருந்தது.

வயலின் இசையோடு என் கவிதைகள் வாசிக்கப்பட்ட விதம் உண்மையில் என்னை அதிகமும் நெகிழச் செய்த கணமென்று சொல்லலாம். அத்தனை பேச்சாளர்களுக்கும் ஓவியங்களை நினைவுப் பரிசாக வழங்கினான் நண்பன் நரன். நூல்களை வழங்கினார்

நூல்வனம் மணிகண்டன். நாள் முழுக்க நண்பர்கள் உடனிருந்தார்கள். என்னை நேசிக்கிறவர்கள் வெறுக்கிறவர்கள் குறித்து நான் நிறைய்ய அறிந்துகொள்ளவும் அந்த நிகழ்வு எனக்குப் பெரிதும் உதவியது.

வானம்பாடி, எழுத்து உள்ளிட்ட பல்வேறு காலகட்டங்களிலும் அல்லது இயக்கங்களிலும் கவிதையின் பொதுப்பண்புகள் என்று ஒன்று உருவாகி வந்திருக்கிறது. இன்று தமிழ்க் கவிதையின் நவீன முகம் எத்தகையது? தமிழ்க் கவிதைகள் நின்று பேசுவதற்கு ஒரு பொதுத்தளம் உருவாகி இருக்கிறது என்று நம்புகிறீர்களா?

பொதுப்பண்பு என்பதே சிக்கலானதுதான். வானம்பாடியின் பண்பு என்பது எழுத்துக்குக் கிடையாது. எழுத்தினுடைய பண்பு வானம்பாடிக்குக் கிடையாது. தமிழ்க் கவிதையின் முகம் என்று கேட்டால், அது இன்றைக்கு உலகளாவியதாக மாறிக்கொண்டிருக்கிறது. பொதுப் பண்பு போலவே பொதுத்தளமும் வாய்ப்பில்லை. கவிதை உலகின் வாய்க்கால் தகராறுகள் கணக்கற்றவை. அரசியல் சூழலால் அது தேவைப்படும்போது, அது இயல்பாக அமையும்!

நவீன இலக்கியம் தமது முக்கியமான ஆட்டங்களை ஆடிப் பார்த்த களம் சிறு பத்திரிகைகள் என்பதை மறுக்க முடியாது. ஆனால் நவீன இலக்கியங்கள் இணையத்துக்குள் கொஞ்சம் கொஞ்சமாகத் தஞ்சம் அடைந்துகொண்டிருக்கும் இந்தக் காலத்தில் சிறு பத்திரிகைகளின் அச்சு வடிவமைப்பின் காலம் நம்மிடம் இருந்து விடைபெற்றுக்கொண்டிருக்கிறதா? ஒரு சிறு பத்திரிக்கை ஆசிரியராக உங்களுடைய அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள்...

‘இந்த உலகில் கடைசியாக இருவர் மீந்தால், அதில் ஒருவர் பத்திரிகை நடத்துவார்’

என்பது ரமேஷ் பிரேதனுடைய வரிகள். சிறுபத்திரிகைகள் எப்போதும் அழியாது. ஏனெனில் அது அதிகாரங்களுக்கு எதிராக உருவான ஊடகம். அதிகாரம் என்ற ஒன்று இருக்கும் வரை அதற்கு எதிராகச் சிறுபத்திரிகையும் இருக்கும். நிறுவனங்களுக்கு, அரசுக்கு, முதலாளிகளுக்கு எதிராக எழுத நினைக்கிற ஒருவனுக்கு இருக்கும் கடைசி ஆயுதம் சிறுபத்திரிகை. இன்றைக்குச் சமூக ஊடகங்கள் நிறைய வந்துவிட்டன. சிறுபத்திரிகையில் ஒரு எழுத்தாளர் என்ன செய்தாரோ, அதை இவற்றிலும் செய்ய முடியும். அதனால், சிறுபத்திரிகையின் இடம் குறைந்துவிட்டது போல ஒரு பிம்பம் இருக்கிறது. நாளைக்கே உங்கள் பேஸ்புக் அக்கவுண்ட் முடக்கப்படலாம், திடீரென்று முகநூல் மூடப்படலாம், டிவிட்டர் இல்லாமல் ஆகலாம். யூட்யூப் என்ற ஒன்று தடைசெய்யப்படலாம். ஆனால், ஒரு சுவரும் ஒரு கரித்துண்டும் இருந்தால்கூட போதும். ஒரு சுவர் பத்திரிகை நடத்தலாம். ஆக, இந்த உலகத்தில் அதிகாரம் இருக்கும் வரை, எதிர்ப்புணர்ச்சி கொண்ட கடைசி மனிதனின் ஊடகமாகச் சிறுபத்திரிகைகள் இருக்கும்.



கவிதை என்பது உரைநடைக்கு மூத்தது என்றாலும் தற்போதைய கவிதைகளில் உரைநடைகளையும் புனைவையும் அளவுக்கு அதிகமான தாக்கத்தைச் செலுத்த அனுமதிக்கிறோம். நவீன புனைவும் உரைநடையும் கவிதையை உட்செறித்துக்கொண்டன எனக்கூறலாமா?

நிச்சயமாக இல்லை, இது ஒரு தவறான புரிதல். கவிதை என்பது எப்போதும் கவிதைதான். கவிதையென்பது கனவுக்கு மிக நெருக்கமானது. அந்த எல்லையற்ற சுதந்திரம் மற்ற எழுத்து வடிவங்களுக்குச் சாத்தியமில்லை. ஒளியின் வேகத்தில் பயணிக்கும் எந்தப் பொருளும் ஒளியாக மாறிவிடும். அதுபோலத்தான் கவிதையின் வேகத்தில் பயணிக்கும் எதுவும் கவிதை. அதில் குறைந்த வேகம் கொண்டவை அவையேதான்.

குழந்தைமையின் முதிரா மனம் கொண்டு பேசுகிற மொழியால் வாசகனை கட்டிப் போடுவது - முதிர்ந்த மொழியின் கவித்துவ வெளிப்பாட்டால் மனதில் எழுகிற மகிழ்ச்சியின் கதிர்களைத் தொட்டு விளையாடுகிற குழந்தையாக வாசகனை மாற்றிவிடுவது ஆகிய இரண்டு தொழில்முறை யுத்திகளில் முதல் முறை யுத்தி அதிகம் வெற்றி பெறுவதின் காரணம் என்னவென்று கருதுகிறீர்கள்?

குழந்தைகளை மனிதர்களுக்கு ஏன் பிடிக்கிறதோ... வயோதிகர்களை ஏன் மனிதர்கள் கொஞ்சுவதில்லையோ... அதேதான் உங்களுடைய கேள்விக்கான பதிலும்!

என்னிடம் மட்டும் ரகசியமாகச் சொல்லுங்கள். உங்கள் கவிதைகளின் பாடுபொருள்களை எங்கிருந்து எடுக்கிறீர்கள்?

ஒன்று வாழ்வு, மற்றொன்று என்னுடைய பல நூற்றாண்டுப் பழைய ஆழ்மனம்! ■

'ம்'

எல்லா நெரிசலான
வழிகளிலும் நுழைந்து
சென்றுவிடுகிறது 'ம்'

'ம்'
சருகுகள் சூழ்ந்த மரத்தில்
உதிராத இலைப்பச்சை

வார்த்தைகள்
தொலைத்த இடத்தில்
நின்றபடி
வழிசுட்டத்தொடங்குகிறது
'ம்'

வாய்மூடியபிறகு
'ம்'மின் முதுகிலேறி
அமர்ந்துகொள்கிறது
சொல்...

கடந்து செல்லும் மேகம்
உச்சந்தலையில் விழும்
ஒற்றைத் தூரல் 'ம்'

'ம்'க்கு
ஆகாய இமை மூடிய
புத்தனின் கண்கள்...

'ம்'
பூ மலர்ந்த தருணத்தில்
மூடப்பட்ட வட்டம்...

முற்றுப்புள்ளி
நெற்றியில் சூடிய
புன்னகைப் பெண் 'ம்'

அன்றொரு நாள்
நி'ம்'மதிக்குள்
பார்த்தேன்..

எப்போதாவது
தனித்திருக்கிறது
தவமிருக்கிறது
'ம்'...

✧ க.ராஜகுமாரன்

சமநிலைகளை
சந்தித்துக்கொள்ளாத
இருவேறு துருவங்கள்
இயங்கிக்கொண்டுதான்
இருக்கின்றன..

திசைகள்
தேவையில்லாதபோதும்
பறவைகள் – இன்னும்
தேடுவதை
தொடர்ந்துகொண்டுதான்
இருக்கின்றன...

கனவுகள்
பொய்யெனத் தெரிந்தும்
பல இரவுகள்
பரிதவிப்போடுதான்
கடக்கிறேன்..

நிஜங்களும் மாறிவிடுமென
நினைக்கத் தெரிந்தாலும் – மனது
நிஜம் போலவே
பாவித்துக்கிடக்கின்றன..

சேர்ந்துதான் பயணிக்க
வேண்டும் என்பதல்ல
தனித்தனியே பயணிப்பதிலும்
தவறேதுமில்லை..

எப்போதாவது வரும்
கண்ணீரின் வெப்பத்தை
கரம் பற்றிக்கொண்டு..

✧ கே.பாலன் வடக்கத்தியான் பட்டி

கோவிலின் முன்பாகச் செல்லும்
தார்ச்சாலையில்
போடப்பட்டிருக்கிறது மாக்கோலம்
எங்கிருந்தோ வந்த
சிட்டுக்குருவிக்கூட்டம்
மொத்தமாய் அமர்ந்துகொத்தியதில்
சிக்குக்கோலத்தின்
வளைவின் தடங்கள்
மெல்லியதாய் ஒட்டிக்கிடக்க
சிட்டுக்களின் பசியாற்றிய
வெள்ளைமாவின் நிறத்தில்
பூத்துக்கிடக்கிறது
ரங்கோலி!

✧ நேசன் மகதி

மழையில் நனையாத பக்கம்

உள்ளாடைகளுக்கு மேல்
வார்மர்
ஆடைகளுக்கு மேல்
ஜெர்கினோ ஸ்வெட்டரோ
அணிந்துகொண்டு
சுத்தமாக மழைத்துளியோ
இயற்கையான குளிர்காற்றோ
உட்புகாத காரின் உள்ளிருந்தவாறு
வீட்டு கேட்டின் முற்புறம்
மழைக்கு ஒதுங்கியிருப்பவர்களை
விரட்டுபவனின் மனதில்
இந்த மழையால்
எப்படி ஈரம் சேர்க்க முடியும்!

✧ அ.சீனிவாசன்

அன்பின் நீட்சி
தள்ளாடும்பொழுது
எதிரொலிக்கும் பிரியங்கள்
மலைமுழுவதும் மோதி
வார்த்தைகளின் திரட்சியாய்
கருத்தொற்றுமை இல்லாக்
கனியாக் காலங்கள்

தன்னாலே மாறிப்போகும்
புனிதங்களெல்லாம்
விரலுக்கேற்ப வீங்காமல்
தலைக்குள் புகும்
விருப்ப வெறுப்புக்குள்
தொலைகின்றன
ஜீவசமாதியாய்..

✧ பூங்கோதை கனகராஜன்.

உன்னால் என்னை
காயப்படுத்த முடிகிறது
என்னால் உன்னை
கவிதையாக்க முடிகிறது..
நம்மால் முடிந்ததை
நாம் செய்கிறோம்
தன்னால் முடிந்ததை
காதல் செய்கிறது!

✧ மு.முபாரக்

எழுத
வராதபோது
விட்டுவிடுகிறேன்...

வலுக்கட்டாயமாய் ஒரு வெயில்
வற்புறுத்தலுக்காக ஒரு மழை
என்பதிலெல்லாம்
எனக்கு உடன்பாடில்லை

மொட்டு விரிந்தவுடன்
வாசம் வரட்டுமெனக்
காத்திருக்கிறேன்.

காகிதப் பூக்களையோ
செயற்கை மழையையோ
என்னிடம் கேட்டு நின்றால்

ஐயா
நான் மரம் வளர்ப்பவன்.
என்னால் ஆக்ஸிஜனை
முதுகில் சுமக்க முடியாதென்று
சொல்லிவிடுகிறேன்.

✧ கா.ரஹ்மத்துல்லாஹ்

பசித்த வயிற்றுக்கு
பாவப்பட்டுக் கொடுத்த
பழைய சோறு..

காபிக்குக் காசு
கேட்டவனுக்குக் கனிவாய்
கைமாறிய ஐந்து ரூபாய்..

கூடிழந்த
காக்கைக் குஞ்சுக்கு
காட்டிய
கொஞ்சம் பரிதாபம்..

அப்பாவை இழந்த
அடுத்த வீட்டுப் பையனுக்கு
சொன்ன ஆறுதல் வார்த்தைகள்..

கன்றீன்ற காராம்பசுவிற்கு
புண்ணியம் சேரக் கொடுத்த
புல்லுக்கட்டு..

எல்லோரும்
கருணையுள்ளவர்கள்தான்..
அவரவர்
சுயம் தெரியாத வரை..

✧ கலைச்செல்வி

சந்துரு.ஆர்.சி.

படைப்புச் சங்கமம் – ஏழாம் ஆண்டு விழா



சென்ற இதழ் தொடர்ச்சி

கவிஞர் அமிர்தம் சூர்யா தனது வாழ்த்துரையில்... ‘கை ரேகை கரையும்வரை கைத்தட்டும் அனைவருக்கும் வணக்கம்’ என்று கூறி அரங்கத்தைக் கலகலப்பாக்கினார்.

‘ஏழு வருடங்களாக நடந்துகொண்டிருக்கும் இவ்விழாவிற்கு நான்கு ஆண்டுகளாய்த் தொடர்ந்து கலந்துகொள்வதில் பெருமைகொள்கிறேன். இந்தப் பூமிக்கு வந்து போனதற்கான’ அடையாளங்கள் இரண்டு என்று சொல்லலாம். வாரிசுகளை விட்டுச்செல்வதும் புகழ் மற்றும் செயல்பாடுகளால் நிறுவிக்கொள்வதும். ஆனால் இன்னொன்றும் இருக்கிறது. அது வாழ்நாளில் ஒரே ஒரு புத்தகம் போடுவதுதான். அதனை இங்கு முப்பத்தெட்டு பேர் நிறுவியிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியான ஒன்று.

கவிஞர் கந்தர்வன் சொல்வார்.. ஒருவன் வாழ்நாளில் ஒரு கவிதையாவது எழுதிவிட வேண்டுமென்று. ஏனென்றால் கவிதை எழுதும்போதுதான் ஒருவன் சாதி மதப் பேதங்கள் ஏதுமில்லாத தூய மனிதனாக இருக்கிறான். நூல் வெளியீடு என்பது வெறும் இலக்கிய மாற்றத்துக்கானது மட்டுமல்ல.. அது பெரும் சமூக மாற்றத்துக்குமானது. உங்கள் சமூகம் இருண்ட அறைக்குள் இருக்கிறது என்றால் முதலில் உங்களின் மன ஜன்னல்களைத் திறந்து வையுங்கள். காற்றும் வெளிச்சமும் முதலில் உள்ளே வரட்டும். பின்பு கதவுகளைப் பற்றி யோசிக்கலாம். இத்தனை நூல்கள் இங்கே வெளியிடப்பட்டிருப்பதே வெளிச்சம் வந்திருப்பதற்கான சான்று.

இங்கே பன்னிரெண்டு நூல்கள் பெண்களால் வெளியிடப்பட்டிருக்கின்றன. பெண் நூல் வெளியிடுவதென்பதுதான் முதலில் முன்னெடுக்கப்பட வேண்டும். ஏனென்றால் ஒரு ஆண் எழுதி வெற்றி பெறும்போது அது ஆண் மட்டுமே அடையும் அங்கீகாரம். ஆனால் ஒரு பெண் எழுதி ஒரு நூல் வெளியிடும்போது அதனால் ஒட்டுமொத்தக் குடும்பமும் உறவுகளும் சேர்ந்து பலப்படும் என்பதால்தான் நான் பெண்களின் படைப்புகளை முதன்மையானதாகப் பெரிதும் வரவேற்கிறேன்.

இங்கு ஒரு கவிஞர் முதலில் கவிதை நூல் வெளியிடத் தொடங்கி கட்டுரை, சிறுகதை, நாவல் என வளர்ந்து இன்று ஏழாவது நூலை வெளியிடுகிறார் என்றால் அதற்கான அடிப்படைக் கட்டுமானம் போட்டுத் தந்தது படைப்புக்குழுமம்தான். இங்கே தொடர்ந்து எழுதிக்கொண்டிருந்த கவிஞர் அமீர்ஜான் என்பவர் காலமாகிவிட்டார். ஆனால் மறைந்துவிட்டார் என அவரை ஒதுக்கிவிடாமல் அவரது கவிதைகளைத் தொகுத்து அவரது குடும்பத்தினரை அவர் சார்பில் இங்கு மேடையேற்றி நூல் வெளியீடு செய்திருப்பதுதான் படைப்புக் குழுமம் செய்திருக்கும் அசலான சமூக மாற்றமாகும். ஒருவர் காலமானார் என்ற சொல்லை அர்த்தமற்றதாக்கி அவரை நூல் மூலம் உயிர்த்திருக்கச் செய்திருப்பதுதான் படைப்புக் குழுமத்தின் உன்னதமான செயல்,` என்று விறுவிறுப்பான உரையாற்றினார்.

இயக்குனர் கவிஞர் பிருந்தா சாரதி அவர்களுக்குப் படைப்பின் உயரிய விருதுகளில் ஒன்றான இலக்கியச்சுடர் விருதளித்துக் கௌரவம் செய்யப்பட்டது. அவரது திரைத்துறை மற்றும் இலக்கியப்பயணம், வாழ்க்கைக் குறிப்புகள், கடந்து வந்த பாதையெனக் காணொளி வழியே திரையில் வெளியிடப்பட்டது. கவிஞர் பிருந்தாசாரதியின் ஏற்புரையில் நெகிழ்ச்சியும் நிறைவும் வெளிப்பட்டது.

`பொதுவாக நான் எழுதித்தர அதை நடிகர்கள் பேசுவார்கள். இப்போது இந்த விருதுச்சூழலுக்கு எனக்கு என்ன பேசுவதென்று சற்று கூச்சமாகத்தான் இருக்கிறது. திரைத்துறையில் இருக்கும் ஒரு உரையாடலாசிரியனுக்கு இலக்கியச் சுடர் என்னும் விருதளிப்பது உங்கள் பெருந்தன்மையைக் காட்டுகிறது. உள்ளபடியே

எனக்கு இந்த விருதைப் பெறுவது பெரிய மகிழ்ச்சி. ஒரு திரைப்படத்துக்கு உரையாடலை எழுதும்போது அதை ஒரு பொழுதுபோக்குக்காகவோ காற்றோடு கலந்துபோகிற மேம்போக்காகவோ எப்போதும் நான் எழுதுவதில்லை. ஆனந்தம் திரைப்படத்தில் இயக்குனர் லிங்குசாமியுடன் இணைந்து கதை உரையாடல் எழுதும்போதுகூட ஒரு எழுத்தாளன் நாவலாசிரியன் எவ்வளவு சிரத்தையோடு அர்ப்பணிப்புடன் ஒரு நாவலை எழுதுவானோ அப்படித்தான் அதே உணர்வுடன்தான் நானும் அர்ப்பணிப்புடன் எழுதினேன்.

கும்பகோணத்தில் வாழ்ந்தபோது எனது கல்லூரிக் காலத்தில் அன்றைக்குத் தமிழின் மாபெரும் முக்கிய எழுத்தாளர்களான எம்.வி.வெங்கட்ராம், கரிச்சான் குஞ்சு போன்றவர்களுடன் எனக்குப் பழகும் வாய்ப்பமைந்தது. விரும்பிப் பெற்ற வாய்ப்பில்லையென்றாலும் அது கல்லூரிப் பருவத்தில் நான் எழுதிய கவிதைகளே எனக்குத் தந்த வாய்ப்பாக அமைந்தது. அவர்களின் வேள்வித் தீ, பசித்த மானுடம் போன்ற நாவல்களுடன் அன்று எனது கவிதைகளை ஒப்பிடவே முடியாது என்றாலும் நான் எழுதிய கவிதைகள் அவர்களுடன் உரையாடும் சூழலை எனக்குத் தந்தன. ஆளுமை மிக்க அவர்களுடன் பேசப்பேச இலக்கியம் என்பது எவ்வளவு உயர்ந்தது, நாம் படிக்க வேண்டியதும் கற்றுக்கொள்ள வேண்டியதும் இன்னும் எவ்வளவு இருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டேன். அதன் பிறகே நிறைய வாசிக்கத்தொடங்கினேன்.

கும்பகோணத்தில் இருந்து எழுதிய எழுத்தாளர்கள் ந.பிச்சமூர்த்தி, தேனுகா, தஞ்சை பிரகாஷ் போன்றோரின் எழுத்துக்களைப் படிக்க நேரம் போதாது. ஆயுளுக்கும் படித்துக்கொண்டிருக்கலாம். அந்த அளவுக்கு இருக்கிறது. அந்த வாசிப்பைத் தொடர்ந்து நான் கவிதையை அதன் அலங்காரத் தன்மையிலிருந்து கவியரங்கத் தன்மையிலிருந்து விலக்கிப் புதிய கோணத்தில் எழுதத்தொடங்கினேன்.

அதற்கு மிக முக்கியக் காரணம் இங்கு மேடையில் அமர்ந்திருக்கும் கவிஞர் இந்திரன். அவரது மொழிபெயர்ப்பு நூலான அறைக்குள் வந்த ஆப்ரிக்க வானம் நூல் பெரிய தாக்கத்தை உருவாக்கியது. அந்த நூலில் இருந்த மொழி எந்த அலங்காரமும் இல்லாமல் உரைநடை போலவே இருக்கும் என்றாலும் அதன் உள்ளீடு அதைச் சிறந்த கவிதையாக்கிவிட்டிருக்கும். சொற்களின் அலங்காரத்தின் மூலமாக நாம் கவிதையை அடையத் தேவையில்லை. அதன் உள்ளீடுகளே போதும். சங்க இலக்கியங்களின் பாடல்களும் அப்படித்தான். அந்த வகையில் இந்திரனின் நூல் எனக்குள் பெரிய மாற்றத்தை உருவாக்கியது.

திரைப்பட எழுத்தாளனாக இயக்குனராக வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இத்துறைக்கு வந்தேன் என்றாலும் இலக்கியங்கள் இலக்கியவாதிகளுடனான

நட்பும் புத்தகங்களுடனான தொடர்பும் தொடர்ந்துகொண்டே வந்ததின் விளைவாய் இன்று உங்களைச் சந்திக்கும் வாய்ப்பு அமைந்திருக்கிறது. இன்று மிகப்பெரும் தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரான நாஞ்சில் நாடன் அவர்களின் கரங்களால் இலக்கியச் சுடர் என்ற இந்த விருதைப் பெறுகிற வாய்ப்பு அமைந்ததில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்,` என்று பேசினார்.

அடுத்து... இலக்கிய உலகின் மிகச்சிறந்த ஆளுமைகளுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சியின் தொடர்ச்சியாய்த் தமிழகத்தின் மூத்த எழுத்தாளர் கலை இலக்கிய விமர்சகர் கவிஞர் மொழிபெயர்ப்பாளர் ஓவியர் எனப் பன்முக அடையாளங்களைக் கொண்ட சாகித்திய அகாதமி விருது பெற்ற இந்திரன் அவர்களின் இலக்கியச் சாதனைகளைக் கௌரவிக்கும் விதமாகத் தமிழ் கலாச்சாரத்துக்கு இவரது பங்களிப்புகள் குறித்த புகழுரையுடன் சிறு வயது முதல் அவர் சாதனைகளை உள்ளடக்கிய வாழ்க்கைக் குறிப்புகளுடன் காணொளி திரையில் மின்ன இந்திரன் அவர்களுக்குப் படைப்புக் குழுமம் தனது உயரிய விருதான படைப்புச்சுடர் விருதினை அளித்துக் கௌரவித்து மகிழ்ந்தது.

எழுத்தாளர் இந்திரன் தனது ஏற்புரையில், `பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும் என்னைக் கவலைகள் தின்னத்தகாதென்று நின்னைச் சரணடைந்தேன் என்று சொன்னான் பாரதி. அவன் சரணடைந்தது இறைவனிடம். ஆனால் நான் அதே பொன்னை, புகழை விரும்பிடும் என்னைக் கவலைகள் தின்னத்தகாதென்று எழுத்தைத்தான் சரணடைந்தேன்.

எழுத்தை வாழ்தல் என்பதை என் வாழ்வின் நெறியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று என்னைத் தூண்டியவர் ஓவியராக இருந்த என் தந்தையாவார். ஓவியத்தில் புகழ் பெற்றிருந்தாலும் அவர் எதையுமே சம்பாதிக்கவில்லை. அதேபோல்

எழுத்தைச் சரணடைந்த நான் எழுத்தின் மூலமாகச் சம்பாதிக்கக் கூடாது என்பதையும் அன்று முடிவு செய்தேன். சங்க காலத்தின் கணியன் பூங்குன்றனார், சீத்தலைச்சாத்தனார் போன்ற பல புலவர்கள் வேறு தொழில் செய்துகொண்டுதான் உன்னத கவிதைகளைப் படைத்திருக்கிறார்கள். அந்த வரிசையில் என்னையும் இணைத்துக்கொண்டு எழுத்தால் பொருளீட்டாமல் வாழ்தலின் பொருட்டு எண்களைத் துளியும் பிடிக்காத வங்கிப்பணியைத் தேர்ந்தெடுத்தேன். அது என்னைக் காப்பாற்றியது.

என்னுடைய கவிதைகளின் சூட்சுமம் என்னவென்று கேட்பீர்களானால் ஒன்று மட்டுமே. அது தனக்குத்தானே உண்மையாய் இருப்பதைத் தவிர வேறு உத்தி முறைகள் ஏதும் என்னிடமில்லை. வாசகன்தான் இலக்கிய உலகில் என்னை வாழ வைத்துக்கொண்டிருக்கிறான். அந்த வாசகனே ஒரு எழுத்தாளனாகவும் அமைந்துவிடும்போது எனக்கு அதீத சக்தி கிடைத்துவிடுகிறது.

ஒரு பழைய எழுத்துலகம் ஒரு புதிய தலைமுறை எழுத்துலகம் இரண்டில் பழைய எழுத்துலகம் மெல்ல மெல்ல அழிந்து அழுகித் தேய்ந்துகொண்டிருக்கிறது. இன்னொரு புதிய உலகம் உயிர்த்துடிப்புடன் வந்துகொண்டிருக்கிறது. இந்தப் புதிய சிந்தனை கொண்டவர்களைப் பழைய உலகத்தோடும் புதிய உலகத்தோடும் இணைத்துக் கயிற்றுப் பாலத்தைக் கட்டியிருக்கிறது டிஜிட்டல் யுகம் என்ற நெட்வொர்க்.

தமிழன் இன்று பழம் பெருமைகளில் திளைத்துக்கொண்டிருக்கிறான். பொன்னியின் செல்வன் அரிக்கமேடு கீழடி பழங்கோயில் கட்டுமானங்கள் எனப் பலவற்றைப் பார்த்துப் பார்த்துப் பெருமை அடையத் தேவையில்லை. ஏனென்றால் இவை எதையும் இன்றிருப்பவன் செய்ததல்ல. இதை வைத்தே இன்னும் நாம் காலம் நகர்த்த முடியாது. ஏனென்றால் நீ உன் முதுகில் ஒரு வரலாற்றுப் பண்பாட்டுச் சுமையைத் தாங்கியிருக்கிறாய். அந்தச் சுமையோடு தற்காலத்தின் டிஜிட்டல் மலை மீது

ஏறுகிறாய். இந்தப் பயணத்தில் நீயே உழுது நீயே பயிர்செய்து அறுவடை செய்து கொண்டுவந்த இலக்கியப் படைப்புகள் எங்கே..? என்ற இலக்கியக் கேள்வியை ஒரு இலக்கிய விமர்சகனாய் உங்கள் முன்வைக்கிறேன். நீங்கள் எழுதிய எழுதும் ஒவ்வொரு வரியும் தமிழுக்குப் பெருமை சேர்க்கக்கூடியது. எனவே இந்த டிஜிட்டல் உலகத்தில் தற்காலத் தன்மை கொண்ட அதி நவீன வாழ்க்கை முறையை எழுத்தின் மூலம் உற்பத்தி செய்யுங்கள்,` என்று வாழ்த்தினார்.

மதிய வேளை அரங்கை அலங்கரித்திருந்த சிறப்பு விருந்தினர்கள் யூமா வாசுகி, பவா செல்லத்துரை, பிருந்தா சாரதி மற்றும் காலை அரங்கை அணி செய்திருந்த மு.முருகேஷ், அமுதபாரதி, அமிர்தம் சூர்யா, ஆண்டாள் பிரியதர்ஷினி, மானா பாஸ்கர், கவிதா ஜவகர், ஏகாதசி ஆகிய அனைவருக்கும் படைப்பு விழாக் குழுவின் சார்பில் மரியாதை செய்யப்பட்டது.

விழாவின் அடுத்த நிகழ்வாக...

படைப்புக் குழுமத்தின் மிக உன்னத விருதான வாழ்நாள் சாதனையாளர் விருது தமிழகத்தின் மிக முக்கிய மூத்த எழுத்தாளர் நாஞ்சில் நாடன் அவர்களுக்குப் பலத்த கரவொலிகளுக்கு மத்தியில் வழங்கப்பட்டது. எழுத்தாளர் நாஞ்சில் நாடன் தனது ஏற்புரையை இயல்பாகவும் வெளிப்படையாகவும் தொடங்கினார்.

`நாற்பதாண்டுகளுக்கு முன்னால் சென்னையில் ஒரு விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டேன். அதில் பேசிய கவிஞர் அப்துல்ரகுமான் அவர்கள் விருதுகள் குறித்து, எங்களுக்குப் பொற்கிழிகள் வேண்டாம் ஒரு பூ கொடுங்கள் போதும் என்று பேசினார். அவர் சொன்ன அந்தப் பூ என்பதுதான் ஒரு பெரிய அங்கீகாரம். அந்த அங்கீகாரம்தான் ஒரு எழுத்தாளனைத் தொடர்ந்து எழுதத் தூண்டிக்கொண்டே இருக்கும் பெரிய ஆதரவாகும். நான் இதுவரை பல விருதுகள் பெற்றிருக்கிறேன். சில விருதுகள் நிறைவைத் தந்தாலும் பல நேரங்களில் ஒரு எழுத்தாளனுக்கு

விருதுகள் தெரிவிக்கப்படுவதும் அது தரப்படும் விதமும் சூழலும் அதனால் அந்த எழுத்தாளன் சந்திக்கும் சங்கடங்களும் ஏராளம்` என விருதுகள் குறித்துத் தான் சந்தித்த தனது அனுபவங்களை வேடிக்கையாய்க் குறிப்பிட்ட அதே நேரம் அதில் ஒரு எழுத்தாளன் சந்திக்க நேரும் அவமரியாதையையும் வலியையும் பதிவு செய்தார்.

மேலும் அவர், `நான் பல இலக்கிய விழாக்களுக்குச் சென்றிருக்கிறேன். ஆனால் சில விழாக்களில் அரங்கிற்குள் நுழையும்போதே மனதுக்குள் ஒருவித அந்நியத் தன்மை புகுந்துவிடும். நான் எப்போதும் விருதுகள் தொகைகளை விரும்புபவன் அல்ல. ஒரு மண ஊர்வலத்தில் மணமகனாக இருக்கக்கூட கூச்சப்படுபவன் நான். ஆனால் இன்று படைப்புக் குழுமத்தின் இந்த விழா அரங்குக்குள் வரும்போது இங்கிருக்கும் பலரும் அறிமுகமில்லாதவர்கள் என்றாலும்கூட இங்கு ஏதோ நெருங்கிய உறவுகளைச் சந்திப்பது போல் தாய் மாமன் சித்தப்பா பெரியப்பா வீட்டுக்குச் செல்வது போல ஒரு நெருக்கத்தை உணர்ந்தேன். இந்த விருதை விட இந்த அணுக்கத்தையே நான் பெரிதும் விரும்புகிறேன். இந்தப் படைப்பு விழாவில் எல்லோருடனும் காலங்காலமாய்ப் பழகிய ஒரு அன்னியோன்யம் ஏற்பட்டது.

ஒரு சின்ன பாராட்டுக்காக ஏங்குபவன்தான் எழுத்தாளன். சங்கப்பாடல்களில் வறுமையில் வாடி நெடுந்தூரம் நடந்து பரிசில் பெற குறுநில மன்னனைப் புகழ்ந்து பாடச்சென்ற புலவனுக்கு என்ன கிடைத்திருக்கும்? சோளக்கதிர்களையும் தேங்காய்களையும் கடலைகளையும் தவிர அவனுக்கு என்ன கொடுத்திருக்க முடியும்? மனோஜ் குரூர் அவர்கள் சங்க இலக்கியப்புலத்தில் வரலாறுகளைப் புறந்தள்ளி வைத்து சங்ககாலத்தின் வாழ்வியலைத் தமிழில் யாரும் இதுவரை எழுதாததைத் தனது நூலில் அழகாய் எழுதியிருக்கிறார். மலையாளத்திலிருக்கும் பல சொற்கள் யாவும் தூய தமிழ்ச்சொற்களாய் இருக்கின்றன என்பதை உங்களுக்குச் சொல்ல

விரும்புகிறேன்.

இங்கு கவிதை நூல்கள் அதிகம் வெளியிடுவதால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கவிஞர்கள் எல்லோரும் தங்கள் மொழியில் கவனம் செலுத்த வேண்டும். கடந்த பத்திலிருந்து முப்பது ஆண்டுகளில் வெளிவந்த கவிதை நூல்கள் பலவற்றையும் படித்திருக்கிறேன். இதில் ஆயிரம் கவிதை நூல்களில் பயன்படுத்தப்பட்ட சொற்களைக் கணினியில் அகர வரிசைப்படி ஒழுங்கமைத்துத் திரும்பத்திரும்ப வரும் சொற்களை நீக்கிவிட்டுப் பார்த்தால் தமிழ்க் கவிதைப்புலம் எத்தனை ஆயிரம் சொற்களுக்குள் சிறைபட்டிருக்கிறது என்பதை உங்களால் உணர முடியும். ஆனால் நம்மிடம் இரண்டு லட்சம் சொற்கள் இருக்கின்றன.

ஒவ்வொருவருக்கும் அனுபவம் திறன் வீச்சு தனித்தனியாய் அமைந்திருக்கிறது. அந்த உங்களின் அனுபவங்களைச் சிறப்பான மொழியின் மூலமாகத் தரும்போதுதான் அதிலொரு சிறப்பான தகுதி திறமை பயன்பாடு வெளிப்படும் என்பதே எனது ஆதங்கமாய் இருக்கிறது. சில சொற்களில் மட்டுமே கவிதை சிறைபட்டுக்கிடப்பதால் இனிமேலாவது இறைந்து கிடக்கும் லட்சக்கணக்கான சொற்களை நீங்கள் தேட வேண்டும் என விரும்புகிறேன்,` என்று உரையாற்றினார்.

விழா முடிவடையும் தருணத்தில் வாழ்த்துரை வழங்கிய எழுத்தாளரும் மிகச்சிறந்த கதை சொல்லியுமான கவிஞர் பவா செல்லதுரை அவர்கள் தனக்கேயுரிய தனித்த குரலில் பேசத்தொடங்கினார். `எனக்குத் தெரிந்து இவ்வளவு விருதுகளை ஒரு அரசாங்கம் கூட கொடுக்குமா என்று தெரியவில்லை. அரசுகள் எப்போதுமே தனக்கு எதிராக எழுதிவிடுவார்களோ என்று எழுத்தாளர்களுக்கு விருது கொடுக்க விரும்பாது. அப்படி கொடுத்தாலும் அவ்விருதை ஒரு சிறந்த எழுத்தாளன் பெறும்போது மேடையில் அவன் அடையும் அலட்சியத்தையும் மனச்சங்கடங்களையும் வலியையும்

எழுத்தாளர்களின் அனுபவங்களின் வழியே நானறிவேன்.

ஒரு படைப்பாளியைத் தமிழ்ச் சமூகத்துக்கு இந்த மேடையில் நாம் அடையாளப்படுத்திவிட்டோம் என்ற ஒரு தருணம் என்பது மிக முக்கியமான ஒன்று. நான் பெரிதும் மதிக்கும் இந்திரன் அவர்களின் அறைக்குள் வந்த ஆப்ரிக்க வானம் என்ற கவிதைத் தொகுப்பு நாற்பதாண்டுகளுக்கு

முன்பு வந்தபோதே அவருக்கு ஒரு விழா எடுத்தோம். அந்த நூலில் இருந்த கவிதைகள் அனைத்தையும் தட்டிகளில் எழுதித் திருவண்ணாமலையில் அனைத்து மக்களும் வாசிக்கும்படி எல்லா இடங்களிலும் வைத்தோம். நாஞ்சில் நாடன் அவர்களுக்குச் சாகித்ய விருது தந்தபோதும் முதன் முதலாய் மக்களின் சார்பில் பெரும் கொண்டாட்டமாய் உண்டாட்டு எனும் விருந்துடன் கூடிய விழா எடுத்தோம்.

ஒரு எழுத்தாளனைக் கொண்டாடும் மனம் என்பது இங்கே பெரிதும் வாய்க்கவே இல்லை. அதே நேரம் விருதுகளைப் பார்த்து மயங்கிப்போகும் ஒரு படைப்பாளியின் குணம் என்பது எப்போதும் ஒரு படைப்பாளிக்கான குணமே இல்லை என்று சொல்வேன்.

ஒரு படைப்பாளியின் மனம் விசித்திரமான மனநிலை கொண்டது. எழுத்தாளர் புதுமைப்பித்தன் அவர்கள் எழுத்தாளன் ஒன்றும் கொம்பு முளைத்தவனல்ல என்பார். ஆனால் அவரே எழுத்தாளன் என்பவன் கொம்பு முளைத்தவன்தான் என்றும் சொல்வார். சாதாரணனிலிருந்து வேறு மனிதனாய் மாறுவது ஒரு படைப்பாளி மட்டுமே. அவனே அந்த அனுபவங்களை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு எழுத்தின் வழியே கடத்திச்செல்கிறான் என்பதை ஆனைகட்டியிலிருந்து மன்னார்காடு செல்லும் ஒரு மலைப்பாதையில் பாதையை மெதுவாக கடக்கும் ஒரு மலைப்பாம்புக்காகப் பேருந்தை நிறுத்தி அது கடக்க வழிவிட்டு அந்தப் பாம்பிடம் போய்க்கோ போய்க்கோ என்று பேசி வழியனுப்பிய ஒரு ஓட்டுனரின் மனதை நாஞ்சில் நாடன் ஒரு சிறுகதையாய்ப் பதிவு செய்திருப்பார். அதுதான் மற்றவர்கள் தவறவிடும் ஒன்றை ஒரு எழுத்தாளன் பதிவு செய்யும் அபூர்வமான மனநிலையாய்க் கருதலாம்.

பிரபஞ்சனுக்குப் பாராட்டு விழா நிகழ்த்தி பணமுடிப்பு அளித்தபோது அவர் எனக்கு இரண்டு வேளை சாப்பாட்டை இந்தத் தமிழ்ச் சமூகம் உறுதிப்படுத்தியிருந்தால் நான் இன்னும் சில பக்கங்களை எழுதியிருப்பேன் என்று சொன்னார். அப்படி உறுதிப்படுத்தும்

ஆற்றல் அப்போது இல்லை. இன்று பிரபஞ்சன் இருந்திருந்தால் அவருக்கு மூன்று வேளை உணவை நாம் உறுதிப்படுத்தியிருக்கலாம். அந்த நம்பிக்கையைத்தான் படைப்பு போன்றவர்கள் தரும் விருதுகள் நமக்குத் தருகிறது.

இந்த மனம்தான் மிகப்பெரிய விசயம். ஒருவன் நல்ல சட்டை போடுவதையே விரும்பாத சமூகத்தில் நீ எழுது நான் உனக்கு உடனிருந்து அனைத்தும் உதவுகிறேன் என்று சொல்லும் அந்த விசால மனம் என்பது ஒரு பாம்பு மேல் பேருந்தை ஏற்றி விடக்கூடாது என்று நிறுத்தி போய்க்கோ என்று அனுப்பிவைக்கிற ஒரு டிரைவரின் மனம். அந்த ஒரு மனத்திற்காகத்தான் இத்தனைபேர் இந்த நாளில் இங்கு கூடியிருக்கிறோம். பல ஊர்களிலிருந்து இங்கு வந்திருக்கிறோம். ஒரு வேளை நம் கனவு மிகப்பெரிய கனவாகி இந்த மனம் தமிழ்ச்சமூகத்துக்கு விரிவடைந்தால் பல டால்ஸ்டாய்கள் பல தாஸ்தாயெவ்ஸ்கிகள் உருவாகக்கூடும்,` என முடித்து எல்லோரையும் நெகிழவைத்தார்.

படைப்பாளிகளை உருவாக்குவதும் அவர்களை உயர்த்திப்பிடிக்க வேண்டும் என்பதுமே படைப்புக் குழுமத்தின் அடிப்படை நோக்கம் என்பதால் அதைச் செயல்படுத்தும் விதமாய் அறிவிக்கப்பட்டிருந்த பல்வேறு விருதுகள் வழங்கும் விழா தொடங்கியது.

படைப்புக் குழுமத்தினரால் நடத்தப்படும் கவிதை, சிறுகதைப் போட்டிகளில் வென்றவர்கள், படைப்பின் தேர்வாகச் சிறந்த வாசகர், மாதாந்திரப் படைப்பாளி விருதுகள், கவிச்சுடர் விருதுகள், படைப்பு தளத்தில் இயங்குபவர்களுக்கான தொடர் அங்கீகார விருதுகள், படைப்பு அல்லாது பிற இலக்கியத் தளங்களில் இயங்குபவர்களுக்கான கலை இலக்கிய விருது, பிற வெளியீடுகளில் வந்த கவிதைத் தொகுப்புகான நூல் விருது, சிறந்த பதிப்பகம், சுற்றுச்சூழல் எனப் பல தளங்களில் சிறந்து விளங்குபவர்களைத் தேடிப்பிடித்து விருதுகள் வழங்கிக் கௌரவம் செய்யப்பட்டது.

படைப்பு விழாவுக்காக முன்வந்து தொடர்ந்து உழைப்பைச் செலுத்தும் பங்கேற்பாளர்கள், அரங்க வடிவமைப்பாளர்கள், தன்னார்வலத் தோழர்கள், படைப்பு தளத்தை அடுத்த கட்டங்களுக்கு அழைத்துச் செல்லப் பங்காற்றும் கலைஞர்கள் என எல்லோரையும் ஆராதிக்கும் விதமாக மேடை முழுக்க விருதுகளால் நிறைந்திருந்தது. படைப்பு தளத்தில் வெற்றி பெற்ற கவிஞர்கள் பலரும் தங்களுக்குப் பிடித்தமான எழுத்தாளர்களின் கரங்களால் பதக்கமும் விருதும் பெற்றபோது அத்தனை பெருமிதத்தையும் மகிழ்ச்சியையும் ஒவ்வொருவரின் முகங்களிலும் காண முடிந்தது. விருது வழங்கல் நிகழ்ச்சி முடிந்த

நிலையில் நன்றியறிவிப்புடன் நாட்டுப்பண் இசைக்க ஒரு பிரம்மாண்ட இலக்கிய விழா நிறைவடையத்தொடங்கியது.

ஒரு முழு நாள் இலக்கிய விழாவில் பங்கேற்ற நிறைவுடனும் புதிய அனுபவத்துடனும் பலரும் தங்களுக்கு விருப்பமானவர்களுடன் விழா நினைவாகப் புகைப்படங்கள் எடுத்துக்கொண்டும் புன்னகையுடன் விடைபெற்றுக்கொண்டும் அவரவர் திசை நோக்கி பயணிக்கத்தொடங்கினர். இருட்டத்தொடங்கிவிட்ட அம்மாலையில் விழாவுக்கு வந்திருந்து விருது பெற்றவர்கள் பைகளில் பொன்னிறத்திலும் வெண்ணிறத்திலும் சிறகுகள் விரித்தபடி பறந்துகொண்டிருந்தது படைப்புப் பறவையின் இலச்சினை பொருத்திய இலக்கிய விருதுகள். விழா முடிந்து விடைபெற்றுச் சென்றவர்கள் பலரது நெஞ்சிலும் அன்று ஒரு எண்ணம் மட்டும் அலையடித்துக்கொண்டே இருந்திருக்கும். அது அடுத்த விழாவில் நாமும் ஒரு நூல் வெளியிடும் அளவுக்கு வல்லமையை வகுத்துக்கொள்ள வேண்டும் என்பதே.

தமிழ் இலக்கிய உலகில் எல்லோரையும் மீண்டும் ஆச்சர்யங்களுடன் திரும்பிப்பார்க்கச் செய்த ஒரு மாபெரும் இலக்கியவிழா நிறைவடைந்தபோதும் அடுத்த விழாவுக்கான முன்னெடுப்புகளையும் அதற்கான படைப்புகளையும் கலைஞர்களையும் தயாரிக்கும் பணியைப் படைப்புக் குழுமம் அடுத்த நாளிலிருந்தே தொடங்கிவிடும் என்பதுதான் படைப்புக் குழுமத்தின் மாபெரும் வெற்றியாகவும் இலக்கிய அரங்கில் படைப்புக் குழுமம் அமைத்திருக்கும் தனி மேடையாகவும் கருதலாம்.

● மு.முருகேஷ்



கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

ஜப்பானியர்கள் தொல்காலம் முதல் கி.பி.794 வரையுள்ள காலத்தை யாமட்டோ நாரா காலம் என்றும், பின்வரும் காலங்களை ஐந்து காலங்களாகவும் பிரித்து வகைப்படுத்தினர். இதில், ஐந்தாவது காலமான தோகுகலா (1600-1868) காலத்திலேயே ஹொக்கு எனும் மூவரி கவிதை வடிவம் தோன்றியது என்கின்றனர் கவிதை ஆய்வாளர்கள்.

ஜப்பானியப் பாரம்பரியக் கவிதை வடிவமான தன்கா காலப்போக்கில் உருமாறி, ரென்கா எனும் தொடர்க் கவிதை வடிவமானது. இந்தக் கவிதையின் தொடக்க மூன்று வரிகளே ஹொக்குப் பாடல்களாக ஜப்பானிய மகாகவி மட்சுவோ பாஷோவால் எழுதப்பட்டு, பின்னர் ஹைக்கூ எனும் பெயரால் உலகின் திசைகளெங்கும் அறிமுகமானது.

16ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் எழுதப்பட்ட ஹைக்கூ கவிதைகள், தமிழுக்கு அறிமுகமானது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான். தமிழுக்குப் புதிய கவிதை வடிவத்தை அறிமுகம் செய்த மகாகவி பாரதி, வங்காளத்திலிருந்து வெளிவந்துகொண்டிருந்த 'மாடர்ன் ரிவ்யூ' எனும் இதழில் ஜப்பானியப் புலவர் உயானோ நோகுச்சி எழுதிய ஒரு ஹைக்கூ கவிதையை வாசித்துவிட்டு, 'சுதேசமித்திரன்' (16.10.1916) இதழில் 'ஜப்பானியக் கவிதை' எனும் தலைப்பில் குறுங்கட்டுரை ஒன்றினை எழுதினார்.

இக்கட்டுரை வெளியான அரை நூற்றாண்டுகள் கழிந்தே, தமிழில் மீண்டும் ஹைக்கூ மொழியாக்கங்கள் வெளிவரத் தொடங்கின. தமிழில் முதன்முதலாக நேரடியான தமிழ் ஹைக்கூ நூல் 1984இல் 'புள்ளிப்பூக்கள்' (ஆசிரியர்: அமுதபாரதி) வெளியானது. வாசிக்கும்போதே நமக்குள்ளும் காட்சியாய் விரியும் ஹைக்கூ, எல்லோரையும் போலவே என்னையும் ஈர்த்தது. நானும் ஹைக்கூ எழுதத் தொடங்கினேன்.

மரபுக் கவிஞர்கள் புதுக்கவிஞர்களைப் பார்த்ததைப் போலவே, ஹைக்கூ

கவிஞர்களைப் புதுக்கவிஞர்கள் சிலரும் பார்த்தார்கள் என்பதே உண்மை. ‘துணுக்குக் கவிதை’, ‘குள்ளக் கவிதை’ என்றார்கள். ஹைக்கூ தன்போக்கில் மெல்ல வளர்ந்தது.

‘தமிழில் ஹைக்கூவை எழுதவே முடியாது’ என்றுரைத்தார்கள். இளைய கவிஞர்கள் எழுதிக்கொண்டேயிருந்தோம். ‘தமிழில் எழுதுவதெல்லாம் ஹைக்கூ இல்லை’ என்று அதிரடி தீர்ப்புகளை அவ்வப்போது சொல்லிக்கொண்டே இருந்தார்கள். ஆனாலும், மக்கள் மன்றத்தில் நிலைத்து நிற்கத் தொடங்கியது தமிழ் ஹைக்கூ.

ஹைக்கூ எழுதிக்கொண்டும் ஹைக்கூ எழுதுகிற நண்பர்களோடு சேர்ந்தியங்கிக்கொண்டுமிருந்த தொண்ணூறுகளின் தொடக்கக் காலமது.

1991இல் கவிஞர் பாலா எழுதிய ‘இன்னொரு மனிதர்கள்’ எனும் கவிதை நூல் வெளியானது. ஆங்கிலப் பேராசிரியர், தேர்ந்த திறனாய்வாளர், நுட்பமான மொழிபெயர்ப்பாளர், வானம்பாடிக் கவிஞர்களுள் ஒருவரான இரா.பாலச்சந்திரன் எனும் இயற்பெயருடைய கவிஞர் பாலா, சிவகங்கையில் பிறந்தவரென்றாலும் புதுக்கோட்டையில் சொந்த வீடொன்றில் வசித்து வந்தவர்.

கவிஞர் பாலாவின் ஈர்ப்புமிக்க அந்தக் காந்தக் குரலுக்கு நானும் ரசிகன். தெளிந்த நீரோடையென எவ்விதத் தடுமாற்றமும் இல்லாமல் பேசும் மிகச் சிறந்த சொற்பொழிவாளர் எனும் வகையில் அவர்மீது பெரிய மரியாதை எனக்குண்டு.

பாலாவின் ‘இன்னொரு மனிதர்கள்’ கவிதை நூலினைப் படித்ததும், அவர் மேல் எனக்குக் கோபம் உண்டானது. அந்த நூலுக்குப் பாலா எழுதிய முன்னுரை இப்படியாக முடிந்திருந்தது.

‘கடைசியாய் ஒரு சொல்;

இந்நூலில் ஒரு ஹைக்கூ கூட

இல்லை என்பதில்

எனக்கு நிரம்ப மகிழ்ச்சி.’

கவிஞர் பாலாவைப் பல்லாண்டுகளாக அறிந்திருந்த எனக்கு அவர்

இப்படியெழுதியிருந்தது மிகுந்த வருத்தத்தை உண்டாக்கியது. நல்ல மரபுக்கவிதைகள், சிறந்த புதுக்கவிதைகள், தெறிப்பான ஹைக்கூ கவிதைகளைத் திறந்த மனதோடு பாராட்டும் பண்பாளர் பாலா. 'தாய்' இதழின் 16 பக்க இணைப்பாக அவரெழுதிய 'கவிதைப் பக்கம்' (1986) தொடரில் பல ஹைக்கூ கவிதைகளைப் பாராட்டி எழுதியிருப்பார். அப்படிப்பட்ட கவிஞர், இந்த நூலில் ஒரு ஹைக்கூ கூட இல்லை என்பதில் மகிழ்ச்சி கொள்ள என்னவிருக்கிறது? என்பதாக எனக்குள் சிறு கோபமொன்றும் வந்தது.

இதுபற்றி நேரிலேயே கேட்டுவிட வேண்டுமென்கிற எண்ணத்தில் சார்லஸ் நகரிலிருந்த அவரது வீட்டிற்குச் சென்றேன். கவிஞர் வெளியூர் போயிருந்தார். வந்ததும் கேட்கலாமென்று காத்திருந்தேன்.

90களில் வெளியான பல புதுக்கவிதை நூல்களில் இடையிடையே சில ஹைக்கூ கவிதைகளையும் பிரசுரித்து வந்தனர். நான்கைந்து வரி புதுக்கவிதைகளையும் மூன்று வரியில் நீட்டிப்போட்டு, இது ஜப்பானிய ஹைக்கூ வகை கவிதை என்று சொல்லும் போக்கும் அப்போது நிலவியது.

பிறகொருமுறை கவிஞர் பாலாவைப் பல்பொருள் அங்காடிக் கடையொன்றில் சந்தித்தேன். எனக்குள்ளிருந்த அந்தக் கோபம் கேள்வியாக நீண்டது. கவிஞர் பாலா, சற்றும் மாறாத அதே புன்னகையோடு சொன்னார்;

`ஒரு ஹைக்கூ கூட இல்லாததில்தான் மகிழ்ச்சின்னு சொன்னேன். மொத்தமா ஹைக்கூ நூலா வந்தாலும் எனக்கு மகிழ்ச்சிதான்` என்றதும், என்னால் பதிலேதும் சொல்ல முடியவில்லை.

அதுதான் அதுவேதான்... எங்கள் கவிஞர் பாலா!

●

1946ஆம் ஆண்டில் சனவரி 13 அன்று பிறந்த கவிஞர் பாலா, படித்ததெல்லாம் பிறந்த ஊரான சிவகங்கையில்தான். சிவகங்கை அரசு உயர்நிலைப் பள்ளியில் படித்தவர், பின்னர் துரைசிங்கம் மன்னர் கல்லூரியில் படித்தபோது, கவிஞர் மீராவின் மாணவரானார். பாலா, மீராவின் மாணவரான பிறகு அவருக்குள் கவிதை உணர்வு பெருகியதில் வியப்பென்ன இருக்க முடியும்? காரைக்குடி அழகப்பா கல்லூரியில் வேதியியல் பயின்றார். 1975இல் ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றதோடு, பேராசிரியர் க.செல்லப்பன் அவர்களை நெறியாளராகக் கொண்டு, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 'தமிழ் - ஆங்கிலப் புதுக்கவிதைகளில் படிமங்களும் குறியீடுகளும்' எனும் தலைப்பில் ஆய்வுசெய்து, முனைவர் பட்டமும் பெற்றார்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், இராசிபுரம் அரசு கலைக்கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கியவர்,

1993இல் நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராகச் சேர்ந்து, 2001இல் ஆங்கிலத்துறைத் தலைவராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றார். தமிழ், ஆங்கிலம் என இருமொழிகளிலும் எழுதுவதிலும் பேசுவதிலும் வல்லவர் பாலா.

இராசிபுரத்தில் பணியாற்றிய காலங்களில்தான் கவிஞர் மு.மேத்தாவுடன் அவருக்கு நெருக்கமான பழக்கம் உண்டானது. மு.மேத்தாவின் புகழ்பெற்ற கவிதை நூலான 'கண்ணீர்ப் பூக்கள்' நூலுக்குக் கவிஞர் பாலா முன்னுரை எழுதினார். வானம்பாடி கவிஞரெனத் தன்னை அறிமுகம் செய்துகொண்ட பாலா, தமிழ்க் கவிதைகளின் புதிய பரிசோதனை முயற்சிகளையும் வரவேற்றார். இராசிபுரத்தில் இருந்தபோது நட்புகொண்ட கவிஞர் சேலம் தமிழ்நாடனுடன் இணைந்து 1971இல் 'நீ' எனும் புதுமையான கையடக்கக் கவிதை நூலையும் வெளியிட்டார்.

கோவையில் உருவான 'வானம்பாடி' கவிஞர்களுள் ஒருவராக மிளிர்ந்த பாலா, தமிழ்க் கவிதைகளின் புதுப்பார்வைக்கும் புதிய இஸங்களின் அறிமுகத்திற்கும் வேராக விளங்கியவர். மத்திய அரசின் இலக்கிய அமைப்பான சாகித்திய அகாதெமியின் நிர்வாகக் குழு (2003 - 2007) உறுப்பினராகவும், தமிழ் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் செயல்பட்டார்.

கவிஞர் பாலா, தன் பேச்சிலும் எழுத்திலும் தனித்தன்மை ஒன்றினை உருவாக்கியவர். அவரது கவிதை மொழி கவித்துவமானதாகவும் தெறிப்பாகவும் இருக்கும் அதே வேளையில், தனது மொழிபெயர்ப்புகளில் வேறொரு வகையான ஆளுமையாக வெளிப்பட்டார். தனது திறனாய்வுக் கட்டுரைகளில் கறாரான ஒரு விமர்சகராகவும் அறியப்பட்டார். அதே சமயம், ஒப்பியல் ஆய்வில் தனி முத்திரைப் பதித்த ஆராய்ச்சியாளராகவும் இனம் காணப்பட்டார்.

மென்மையான மொழியில், கனிந்த குரலில், நிறுத்தி நிதானமாகக் கவிஞர் பாலா பேசுவதைக் கேட்கையில், 'ஆமாம்... சரிதானே...' என நம்மையும் ஏற்கும்படிச் செய்துவிடும் ஈர்ப்பு அவரது குரலுக்கிருந்தது.

தமிழில் இஸங்கள் குறித்த பல்வேறு குழப்பங்கள் நிலவிய நிலையில், 'சர்ரியலிசம்' (1977) எனும் நூலை எழுதி, பல குழப்பங்களுக்குமான தெளிவினைத் தந்தார். படைப்பிலக்கியத்திற்கும் திறனாய்வுக்குமான ஒரு சிற்றிதழாக 1978இல் 'சுவடு' எனும் இதழினைப் புதுக்கோட்டையிலிருந்து வெளிக்கொண்டு வந்தார்.

தமிழ்ப் புதுக்கவிதைகளின் வெளிப்பாட்டு முறைகளையும், அதன் பன்முகப் போக்குகளையும் முன்வைத்து பாலா எழுதிய 'புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை' (1981) நூல் வெளியாகி, பரவலான பாராட்டைப் பெற்றுத்தந்தது. இந்நூல் இதுவரை ஐந்துக்கும் மேற்பட்ட பதிப்புகள் வெளிவந்துள்ளது.

இன்னொரு மனிதர்கள், திண்ணைகளும் வரவேற்பறைகளும் (1999), நினைவில் தப்பிய முகம் (2008) ஆகிய மூன்று கவிதை நூல்களை எழுதியுள்ளார் பாலா. இதில், 'இன்னொரு மனிதர்கள்' சிற்பி இலக்கிய விருதையும், 'திண்ணைகளும் வரவேற்பறைகளும்' தமிழக அரசின் சிறந்த கவிதை நூலுக்கான பரிசினையும் பெற்றன.

எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணனின் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தார். மேலும், வித்யாபதியின் காதல் கவிதைகளை (1982)தமிழாக்கம் செய்து தந்தார். கவிஞர் சிற்பியின் கவிதைகளை ஆங்கிலத்தில் 'Noon In Summer' (1997), மு.மேத்தாவின் கவிதைகளை 'Selected Poems of Mu.Metha' (2001) எனும் நூலாகவும் தந்தார். கவிஞர் பாலா ஆங்கிலத்தில் எழுதிய Tamil Modern Poetry Bharathidasan and After, Literature and Society என்னும் இரு நூல்களும் குறிப்பிடத்தக்கன.

தொடர்ந்து எழுதிக்கொண்டும், இயங்கிக்கொண்டுமிருந்த பாலா, பாரதியும் கீட்ஸும் (1982), தமிழ் இலக்கிய விமர்சகர்கள் (1992), முன்னுரையும் பின்னுரையும் (1995) ஆகிய நூல்களையும் எழுதினார்.

கவிக்கோ அப்துல் ரகுமான், கவிஞர் சிற்பி ஆகியோருடன் இணைந்து கவிஞர் மீரா சிவகங்கையிலிருந்து கொண்டுவந்த 'அன்னம்' இதழின் செயல்பாடுகளுக்குக் கவிஞர் பாலாவும் துணை நின்றார்.

பாலாவின் கவிதைகளில் இயல்பாக வெளிப்படும் மெலிதான எள்ளல், வாசகர் மனதில் எளிதில் தங்கிவிடும் சிறப்புக்குரியன.

'வணக்கம் என்பார்
வணங்க மாட்டார்
நலம் பார்த்தறியார்
நலம் என்றெழுதுவார்
பொதுவான பொய்களில்
பொலிகிறது வாழ்க்கை'

- என்றெழுதியவர் பாலா.

'ஒரு தலைவன் பிறக்காத
நாளும் ஒரு நாளா,
365 தலைவர் இல்லாத
நாடும் ஒரு நாடா'

- என சின்னச் சின்னக் கேள்விகள் வழியாக எள்ளல் செய்த பாலா, 'என்னுரை'யில் (திண்ணைகளும் வரவேற்பறைகளும் - பக்கம்: 8) இப்படிச் சொல்கிறார்..

"என் கவிதைகளில் தமிழ் உலகு, நான் பார்க்கும் பேருலகு வாழ்கிறது. என் கவிதைகளில் நான் தமிழர்களை விமர்சனம் செய்துள்ளேன்.

எள்ளல், பகடி - என் கவிதை உத்திகள். மனிதம், அன்பு என் இலட்சியம்.

உள்ளூர் சாதி, வீட்டுமொழி - என்று பிரிந்து கிடக்கும் தமிழர்களை நான் இடித்துரைத்துள்ளேன்'' என்று நேர்படச் சொன்னார்; சொன்ன விதமே எழுதினார்.

'இன்னொரு மனிதர்கள்' நூலினைக் கவிஞர் பாலா சமர்ப்பணம் செய்திருப்பதிலேயே வாழ்வின் முரணும் ஒரு சோகமும் இழையோடுவதைக் காண முடிந்தது.

"உயிர் காக்கும் ஆம்புலன்ஸ் ஒன்று
ஒரு நெடுஞ்சாலை நெளிவில்
தன் உயிர் பறித்துப்போன நேரம் வரைக்கும்
வாழ்வின் கனிந்த இருட்டை
தன் புன்னகையாலும் மன உறுதியாலும்
ஏன் என்றுகேட்டு நின்ற
அம்மாவிற்குத் தான் இதுவும்.''

இந்தச் சமர்ப்பண வரிகளை வாசிப்பவர் இதிலிருந்து உடனே விடுபட முடியாமல் சில நிமிடங்கள் இந்த வரிகளிலேயே தங்கியிருப்பது நிச்சயம்.

சாகித்திய அகாதெமியின் நிர்வாகக் குழு உறுப்பினராகப் பாலா இருந்த சமயத்தில்தான், அதுவரை குறிப்பிடத்தக்க பெரிய நகரங்களில் மட்டுமே நடைபெற்று வந்த சாகித்திய அகாதெமியின் நிகழ்ச்சிகள் தமிழகத்தின் சிறுநகரங்களிலும் தடம் பதிக்கத் தொடங்கின.

கவிஞர் மீரா (01.09.2002) இறந்தபோது, கவிஞருக்கான அஞ்சலிக் கூட்டம் போல், அவரது படைப்புகள் குறித்த கருத்தரங்கம் ஒன்றினை 2, சிவன்கோவில் தெருவிலுள்ள கவிஞர் மீராவின் வீட்டின் முன்பாக, பெரிய மேடையொன்றினை அமைத்து, மக்கள் மத்தியில் நடத்திக் காட்டியவர் கவிஞர் பாலா. நட்சத்திர ஓட்டல்களின் குளிர் அறைகளில் நடைபெற்று வந்த அகாதெமியின் கூட்டங்கள் நெகிழ்வடையத் தொடங்கியது பாலா பொறுப்பாளராக இருந்த காலத்தில் நடைபெற்ற மாற்றங்களுள் குறிப்பிடத்தக்கது.

தமிழகம் தாண்டிய அறிமுகம் கவிஞர் பாலாவுக்குக் கிடைத்தது. இந்திய அளவில் நடைபெற்ற இலக்கிய நிகழ்வுகளில் தமிழகத்தின் முகமாக முன்நின்ற பாலா, நியூயார்க்கில் நடைபெற்ற இந்திய எழுத்தாளர் மாநாட்டிலும், சீனாவில் நடைபெற்ற எழுத்தாளர் சந்திப்புக் குழுவிலும் இடம்பெற்ற பெருமைக்குரியவர்.

"பாலா -
விமர்சகர்களில் ஒரு தராசு முள்!
கவிஞர்களில் ஒரு நவகவிஞன்!
மனிதர்களில் ஒரு மாமனிதன்!
பாலாவின் நட்பை
உணர முடியுமே தவிர
உரைக்க முடியாது...

பாலாவின் படைப்பைப்
பாராட்ட முடியுமே தவிர
எடைபோட இயலாது"

- என்பதே கவிவேந்தர் மு.மேத்தாவின் கவிதைக் கணிப்பாகும்.

நோயின் காரணமாகச் சென்னையிலுள்ள குளோபல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த கவிஞர் பாலா, 2009 - செப்டம்பர் 22 மாலை 4 மணிக்கு மறைந்தார். எழுத்தாளர் பொன்னீலனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற 'புதிய தரிசனங்கள்' நாவலையும், தொல்காப்பியத்தையும், பாரதியார் பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் முயற்சியில் இருந்த கவிஞர் பாலாவின் பணிகள் முடிவுறுமுன்னே மரணம் அவரை முந்திக்கொண்டது.

கவிஞர் பாலாவின் கவிதைகளில் பல, கதைக்கான கூறுகளுடன் அமைந்துள்ளன. குறிப்பாகச் சொன்னால், 'திண்ணைகளும் வரவேற்பறைகளும்' நூலிலுள்ள வள்ளிமுத்துவும் வேற்றுலகவாசிகளும், தோட்டக்காரரும் மாடுகளும், பாரதியின் கோணங்கி ஆகியன கதைக் கவிதைகளே. அந்நூலிலுள்ள 'சர்க்கஸ்' (பக்கம்: 80, 81) எனும் கதைக்கவிதை இது;

'ஆனைகளை அழைத்து வந்தான் ஒருவன்
அதற்கு அமர்ந்திடுக என்று
நாற்காலி தந்தான் ஒருவன்
அனைவரும் கை தட்டினோம்

■

குதிரைகளைக் கூட்டிவந்தான் ஒருவன்
வட்டமாய் வால்தொட்டு வருக
என்றான் ஒருவன்
அனைவரும் கை தட்டினோம்
குதிரைகள் குலவு வட்டம் தீட்டின

■

பூனைகள் பிடித்து வந்தான் ஒருவன்
நீங்கள் நாய்களின் நண்பர்கள்
என்று அறிவித்தான் ஒருவன்
அனைவரும் கை தட்டினோம்
பூனைகள் நாய்கள் மேல் நட்பாய்
நர்த்தனம் செய்தன

■

கிளிகளைப் பிடித்து வந்தான் ஒருவன்
நீங்கள் பிள்ளைகள் போல் பேசுக
என்றான் ஒருவன்
அனைவரும் கை தட்டினோம்
கிளிகள் மனிதர்போல பேசின!

■

அந்த ஒருவனும் இந்த ஒருவனும்
அடுத்து வந்தனர்
மனிதர் போல் இருங்கள்
என்றான் இன்னொருவன்
அனைவரும் கை தட்டினோம்
ஒருவன் கிளிமூக்கால் கீறினான்!
ஒருவன் பூனை நகத்தால் பிறாண்டினான்!
ஒருவன் யானைக்கையால் அடித்தான்!
ஒருவன் குதிரைக்காலால் உதைத்தான்!
ஒருவன் நாய்போல குரைத்தான்!
விலங்குகள் கை தட்டின!'

- இன்னும் வரும்...

■

தினேஷ் கண்ணன்,
முதுகலை இரண்டாமாண்டு இதழியல்,
இரத்தினம் கல்லூரி, கோவை.

ஷோபா சக்தியின் நாவல்கள்

சிறுகதைகள், நாவல்கள், சினிமா எனப் பரந்துபட்ட படைப்புத் தளங்களில் இயங்கிவரும் எழுத்தாளர் ஷோபாசக்தியினது படைப்புகளின் மைய இழையாகவும் பின்புலமாகவும் புறச்சூழலாகவும் அகப்போராட்டங்களாகவும் அமைந்திருப்பது போரும் அதன் தாக்கங்களும் அகதி வாழ்வுமேயாகும். போர் என்பது எவ்வகையானும் நிகழக்கூடாத ஒன்று. ஆனால் வரலாறு நெடுகிலும் மேலதிகமாக அதுவே நிகழ்ந்து வந்துள்ளது. அனைத்து எல்லைக்கோடுகளும் ரத்தத்தினாலேயே போடப்பட்டவை. பேரினவாதம் இருப்பதிலேயே கொடுங்கோன்மையான இரக்கமற்ற போர்களுக்கும் அவலங்களுக்கும் வழி செய்கின்ற ஒன்று. அதுவே இலங்கையைப் பிடித்த போர்ப் பைசாசம்.

ஆங்கிலேயக் காலனியச் சுதந்திரத்திற்குப் பின் அமைந்த சிங்கள அரசால் தமிழர்களின் உரிமைகள் வெகுவாகப் பறிக்கப்பட்டன. அதனை எதிர்த்து அகிம்சையை முன்னெடுத்த தந்தை செல்வா உள்ளிட்டோரின் போராட்டங்கள் அலட்சியம் செய்யப்பட்டன. பின்னாட்களில் கொதித்துப்போன இளைய தலைமுறையினர் எதிரிகள் தீர்மானித்த ஆயுதத்தைக் கையில் எடுத்துப் போராடத் தொடங்கினர். அவ்வாறாக, பல இயக்கங்கள் தலையெடுத்தன.

கொரில்லா முறை தாக்குதலும் நேரிடைப் போருமாகத் தீவு முழுவதும் போர் அனைவரது வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியது. விரும்பியும் வலிந்தும் இயக்கங்களில் ஆட்கள் சேர்ந்தனர், சேர்க்கப்பட்டனர். இயக்கங்களும் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டும் தடை செய்தும் வந்த குழப்பகரமான சூழல் அது. ராணுவம், போலீஸ், இயக்க முகாம்கள் எனச் சற்றும் மனிதத்தன்மையற்ற சித்திரவதைகளுக்குப் பலர் உள்ளானார்கள். அகதிகளாகப் பல்வேறு தேசத்தில் தஞ்சம் புகுந்தவர் பலர்.

இத்தகு போர்ச் சூழலைப் பின்புலமாகக் கொண்டு எழுந்த, அதன் தீவிரத்தை உணர்த்துவதாக அமைந்த கதைகளே எழுத்தாளர் ஷோபா சக்தியின் கதைகளும் நாவல்களும். போர் என்பது புறச்சூழலின் மீது மட்டுமல்ல. அது அகவயப்பட்ட தாக்குதலும் ஆகும். போர் ஒரு தனிமனிதனின் சுயத்தில் எத்தனை வடுக்களைத் தருகின்றது என்பது சொல்லி மாளாதவை. போரினால் ஆட்கொள்ளப்பட்டு அகதியாகத் தஞ்சமின்றித் துடிக்கும் ஒருவனுக்கு இருத்தலியம் (*Existentialism*) என்பது உச்சகட்டப் பதைபதைப்பு.

போர் என்ற இருத்தலியச் சூழ்நிலையே வாழ்க்கை முறையாகிப்போன ஒரு தேசத்தில் வாழும் மக்களின் மத்தியில் ஒருவன் உட்செல்லும் மேலதிக அதீத சமூக-மன-உடல்ரீதியான சித்திரவதைகளால் அவனின் அகவயச் சூழலில் இருத்தலியத்துக்கான தேடலும் கேள்வியும் முதன்மையானதாகவும் உச்சபட்சமானதுமாகவே இருக்கும். போர் குறித்த என்றும் மறக்க முடியாத வலிகளைச் சுமந்து அகதி வாழ்விற்குச் செல்பவர்களின் கதைகளே இவைகள்.

எண்ணங்களில் இருந்து மீள முடியாமலும் ஒரு சராசரி வாழ்க்கையில் பொருந்திப்போக முடியாமலும் மீண்டும் மீண்டும் அந்தச் சகதியிலேயே மல்லாந்து விழும்படிக்கு வாழ்பவர்களே - சராசரிக்குப் பொருந்திப்போக முடியாதவர்களின் உண்மைத் தேடலாகிய இருத்தலியத்திற்கு வலிந்து அழைத்து வரப்படுபவர்களான அகதிகள். அவர்களின் வாழ்வு தீவிரமானதாகும். அத்தகையதொரு தேடலின் பதற்றமே ஷோபாசக்தியின் நாவல்களையும் கதைகளையும் நோக்கி என்னை இட்டுச் சென்றது.

போரின் கொடுமைகளைச் சொல்லும் கதைகளில் எளிதில் நிகழ்ந்து விடக்கூடிய உணர்ச்சிவசப்படுத்தல் மிகையாகாமல் ஒரு மனிதனின் போர்ச் சூழலிலான வாழ்க்கையை அவன் கடந்து செல்லும் அத்தனை உண்மையான மனநிலைகளிலேயே கதைகள் நகர்கின்றன. கொரில்லா, ம், இச்சா ஆகியன எழுத்தாளரின் முதல் மூன்று நாவல்கள். அதற்கு முன்பே சிறுகதையாளராகப் பரிணமித்திருந்த ஷோபாசக்தி அவர்கள் 2001ஆம் ஆண்டு போர் சமயத்திலேயே எந்த சமரசமும் இன்றிக் கொரில்லா நாவலை வெளியிடுகிறார்.

கொரில்லா நாவல் பாரிஸில் மூன்று முறை நிராகரிக்கப்பட்டு நான்காவது முறையாக அகதி தஞ்சம் கோரிய விண்ணப்பத்துடன் தொடங்குகிறது. முன்னும் பின்னுமாக நகரும் கதைக்களத்தின் சம்பவங்களில் ரோக்கிராஜின் கதையாக நாவல் விரிகின்றது. குஞ்சன் வயல் கிராமத்தில் நிகழும் கதை, அந்தக் கிராமம் உருவான சாதிய வரலாறு, ரோக்கிராஜின் தந்தை தனது சண்டித்தனங்களுக்காகக் கொரில்லா எனப் பெயர் எடுத்ததோடு அதே பெயர் ரோக்கிராஜுக்கும் வழங்கலானது வரை கதை விரிகிறது... நாடகம் பழகச் செல்வதாகச் செல்லும் ரோக்கிராஜ் இயக்கத்தில் சேர்ந்து பயிற்சி செய்கிறான்.

பயிற்சியின் ஒரு பகுதியாக அடிவாங்க முற்படும்போது, அவன் ஒரு காட்சியை ஆக்கினை செய்கிறான். “இரண்டு கையையும் பொத்திப் பிடிச்சு ஒருக்கா நல்லா காத்த இழுத்து நெஞ்சுக்குள்ள விட்டு நெஞ்சை விரிச்சு விரிச்சு சுருக்கினான். டக்கென்டு மண்டைக்குள்ள ஒருக்கா தமிழீழத்தைக் கொண்டு வந்தான். ஒரே பச்சை எந்த வளத்தால பார்த்தாலும் பச்சை வரிசையாய் ஒரே அளவிலான வீடுகள். பச்சைகளுக்கு நடுவில் முதுகுல துவக்குகளோட நிண்டு ஆம்பிளையளும் பொம்பிளையளும் வயல் வேலை செய்யினம்.”

இவன் போலவே பலர் இயக்கத்தில் ஆர்வத்துடன் சேர்கின்றனர். ஒருவன் ஆயுதம் என்னை ஈர்த்தது என இயல்பாகவே ஒப்புக்கொள்கிறான். பயிற்சியின் பின் தன் ஊருக்கே முகாம் வேலைக்குச் செல்லும் ரோக்கிராஜுக்கும் அவன் தந்தை கொரில்லாவுக்கும் சண்டை வலுக்கிறது. இவ்வமயம் ஒரு மணல் திருட்டைத் தடுத்த ரோக்கிராஜ், அவன் இயக்கத்தாலேயே மணல் எடுத்தவர் இயக்கத்திற்குப் பண உதவி செய்வதால் மன்னிப்பு கேட்க வைக்கப்படுகிறான். பின் அவன் ஒன்றுமற்ற விஷயத்திற்கு இயக்கம் தன்னை வெளியேற்றியதாக நொந்துகொள்கிறான்.

பின்னரும் வெடி சிலிண்டரைத் திருடியதாக இயக்கத்தால் சித்திரவதை செய்யப்பட்டுப் பின் கொழும்பு செல்கிறான். அவன் காரணமே இல்லாமல் போலீசாராலும் பல சித்திரவதைகளை அனுபவிக்கிறான். பின் கதை ஐரோப்பிய நகருக்கு நகர்கிறது. அங்கும் அகதி வாழ்வில் முறையற்று வாழ்ந்து பல குற்றங்களை எதிர்கொள்ளக்கூடிய ஒரு சிக்கலான வாழ்க்கைச் சூழலாக கதை விரிகின்றது. கொரில்லா நாவலை விளங்கிக்கொள்வது கடினம். வேண்டுமெனில் இது உதவலாம். “துவக்கு அவனைச் சுட்டு

இவனைச் சுட்டு பின் சும்மா இருந்தவனையும் சுட்டது.''

ம் என்பது இன்னும் ஆழமாக வரலாற்றுச் சம்பவங்களின் ஊடாக அரங்கேறும் நாவல். அவற்றில் முக்கியமானவை வெலிக்கடை சிறைப் படுகொலைகள், மட்டக்களப்பு சிறையுடைப்பு என. பனைத்தீவைச் சேர்ந்த பாதிரியாருக்குப் படிக்கும் நேசகுமாரனின் கதை அவன் ஐரோப்பாவிலே சிறையில் தனது மகள் நிறமியின் கதையைச் சொல்லத் தொடங்குவதிலிருந்து விரிகின்றது. அரசியல் ஈடுபாடு கொண்டதனால் அவனை அதிலிருந்து விலக்கி வைக்க சிங்களப் பிரதேச பாதிரி கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்படும் நேசகுமாரன் யாழ் நூலக எரிப்பினால் கொதித்துக் கல்லூரியிலிருந்து தப்பி ஒரு முழுவதும் நிறுவப்படாத இயக்கத்தில் சேர்ந்து தன்னிச்சையான சாகச செயல்களில் ஈடுபடுகிறான். பின் போலீசில் சிக்கிச் சிறை செல்கிறான்.

இதற்கிடையில் நாவலில் குறிப்பிடப்படும் சாதி நிலைகள் கவனிக்கப்பட வேண்டியவை. *''குஞ்சன்வயலில் இயக்கங்கள் நுழைந்தபோதே சாதிவாரியாக ஆட்கள் சேர்ந்துகொண்டார்கள் அல்லது சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். மற்றைய ஊர்களைப் போலவே இயக்கங்களால் மரணதண்டனை விதிக்கப்பட்டபோது முதலில் சுட்டுக் கொல்லப்பட்டவர் ஒரு பஞ்சமரே''.*

நாவலில் வெலிக்கடை சிறைப் படுகொலைகள், வரலாற்றுச் சித்தரிப்புகள். *''இனிவரும் சில பக்கங்களை வாசிக்காமல் கடந்துவிடுவதால் வரலாற்றைக் கடந்துவிட முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா''* என்று தொடங்கும் அந்த விவரிப்பு, பேரினவாதம், இனவெறி என்பதின் விளக்கங்களாக வெளிப்படுகின்றது.

''நான் அடைபட்ட செல்லின் பூட்டை உடைத்து என்னைக் கொன்று விடுவதற்கு அவர்கள் தள்ளுமுள்ளுப் படலானார்கள். நான் நினைக்கிறேன், அவர்கள் அப்போது கள்ளோ சாராயமோ குடித்திருக்கவில்லை, எனினும் அவர்கள் போதை ஏறிய கண்களுடனும் சுளித்த உதடுகளுடனும் தள்ளாடினார்கள். அவர்களிடம் நிதானம் இருக்கவில்லை, அவர்கள் ஒருவரை ஒருவர் வசவுகளால் திட்டிக்கொண்டார்கள். ஒவ்வொரு கோடரி வீச்சுக்கும் ஒவ்வொரு உளிக்குத்துக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஒரு ஜெயவேவா சத்தம் எழுந்தது. தரையில் முழுதும் ரத்தச் சகதி, கொலைகாரர்கள் நடக்கவும் முடியாமல் ஓடவும் முடியாமல் வழுக்கி வழுக்கி விழுந்தார்கள் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா, என் கண்ணால் கண்டேன்.''

இவ்வாறு அந்தச் சித்தரிப்பு நீள்கிறது. தப்பித்துச் செல்கையில் போலீசிடம் சிக்கி மீண்டும் சிறைவாசத்தில் பக்கிரியுடன் இருந்து, பின் ஒரு பைத்தியக்கார நீதிபதியால் விடுவிக்கப்பட்டு ஊர் செல்கையில் இயக்கத்திடம் சிக்கித் தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்ததாகப் பக்கிரி கொல்லப்படுவதைப் பார்க்கிறான் நேசகுமாரன். பின் கதையை முழுவதுமாக எழுதிவிட முடியாத வகைக்கு நேசகுமாரனின் உணர்வுச் சங்கிலி அறுபட்டு ஒரு உளவியற் சிக்கலின் உச்ச நிலையில் நாவல் முடிகின்றது.

இவ்விரு நாவல்களைப் போலல்லாது இச்சா மேலும் தீவிரமானதான ஒரு பெண் கரும்புலியின் கதையை விவரிக்கிறது. ஒரு சிறைக் கைதியின் கிறுக்கல் பக்கங்களை ஆராய்வதுடன் தொடங்கும் நாவல் அந்தப் பக்கங்களில் உள்ள அவளின் கதையாக, பதுமர் குடிப் பெண்ணின் கதையாகத் தொடங்குகிறது. பதுமர் கிராம வாழ்வியல் விழுமியங்களும் பேய், பைசாசம் முதலான அவர்களின் நம்பிக்கைகளும் சிங்களப் பாட்டும் மந்திரகுமாரி கதை நாடகமுமாக ஒரு கலாச்சார இணக்கத்தை விவரிக்கிறது. பின் அவர்களின் கிராமம் வலிந்து வரவழைக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களால் ஒரு கட்டத்தில் முற்றாகக் கைப்பற்றப்படுகின்றது.

காட்டுக்குள் பதுங்கியிருந்த இயக்கத்தினருக்கு உதவியதாகக் கூறி ஆலாவின் தம்பியை ஊர்க்காவல் படையினர் கொல்கின்றனர். ஆலாவும் கடும் துன்பத்திற்குட்படுத்தப்படுகிறாள். எனினும் ஒரு இயக்கத்தவனின் துப்பாக்கியால் காப்பாற்றப்பட்டு பின் தன் அப்பாச்சியால் நேரும் ஒரு சிக்கலிலிருந்தும் துப்பாக்கியே

அவளைக் காப்பாற்றுகின்றது. பின் ஆலா என்ற இயக்கப் பெயரோடு அவள் பயிற்றுவிக்கப்படுகிறாள்.

என்றும் ஆபத்துகளில் நிராதரவாய் நின்றிருந்த ஆலா துப்பாக்கியால் தன் இருப்பை உணர்கிறாள். "என் இருப்பு கந்தக மணத்தாலும் ஓசையாலும் தீயாலுமானது என நினைத்துக்கொண்டேன்" என்கிறாள். "என்னை அவமானத்திலிருந்தும் ஆபத்திலிருந்தும் காப்பாற்ற ஒரு துப்பாக்கியால் மட்டுமே முடிந்திருக்கிறது" என நினைக்கிறாள்.

பின் இயக்கத்தால் கரும்புலியாக மாற்றப்பட்டு ஆப்ரேஷன் இரட்டைச் சிறகுகள் என்ற பெயரில் ஒரு தற்கொலைத் தாக்குதலுக்காக ஆலா பயன்படுத்தப்படுகிறாள். ஆலா என்றுமே ஒரு மாட்சிமை பொருந்திய மரணத்தை எதிர் நோக்கினாள். இலங்கை தற்கொலையில் முதலிடம் வகித்தது. அர்த்தமற்று எதற்கும் தற்கொலை செய்துகொள்ளும் அச்சூழலில் அர்த்தமற்ற சாவை ஆலா வெறுத்தாள். பின்னாளில் ஆபரேஷன் கைவிடப்பட்டு ஆலா ஒரு வெற்றுச் சுவர் மேல் மோதி வெடித்துச் சாகவேண்டும் என்றதும் அவள் தன் இருப்பைக் கேள்விக்குள்ளாக்குகிறாள். அந்த கனநேரக் கணத்தில் போலிஸில் பிடிபடுகிறாள். பின் அளவற்ற விசாரணை முகாம் கொடுமைகளும் போதை ஊசி செலுத்தல்களுமாக இரண்டு வருடம் இவ்வாறு இருந்த பிறகு ஆலாவிற்கு 300 வருட கடுவூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது.

தினமும் ஒரு காகிதமும் அதில் அவள் எழுதுபவையுமே அவளை உயிர்ப்போடு வைத்திருப்பவையாகும். தன்னைச் சித்திரவதை செய்யும்போது தான் எப்போதும் நிகழ்காலத்தில் அன்றிப் பத்து நிமிடம் முன்னாலேயே இருப்பேன் என்று மரத்துப் பேசும் ஆலா எழுத்தின் மூலம் ஆறுதல் கொண்டாள். அதன் மூலம் அவள் தன் மாட்சிமை பொருந்திய மரணத்தைக் கூட கற்பனை செய்திருந்தாள். அவள் கடும் நோயினால் சிறையிலே மரித்தாள். தனது உண்மையான பெயர் என்னவென்பதையே மறந்திருந்த கேப்டன் ஆலாவின் பெயர் வெள்ளிப் பாவையாகும்.

ஒரு உயிருள்ள ஆலா பறவையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா என முடியும் நாவலின் பின்னட்டைப் படம் கூட நம்மை ஏதோ ஒன்று செய்யும். இம்மூன்று நாவல்களிலும் போர்ச் சூழலில் வாழும் அனைவரும் எதிர்கொண்ட பிரச்சனைகளே பேசப்படுகிறது. எழுத்தாளரின் கூற்றான "உலகம் முழுமைக்கும் ஒரே ஒரு கதைதான் இருக்கின்றது" என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டியதாகிறது.

போரின் உளவியலை இவ்வாறு விவரிக்கிறது நாவலின் ஒரு பகுதி. "போர்ச் சூழலில் வாழும் அனைவருக்கும் ஒரு பொதுவான உளவியல் பண்பென்றுதான் நான் நினைக்கிறேன். போர் என்பது அளவில் பெரிய சிறைதானே. அங்கே சிக்கிக்கொண்ட மனிதர்களின் உளவியலும் சிறைக் கைதிகளின் நிலையை ஒத்ததுவே. உயிரைத் தக்க வைப்பதற்காக எதையும் செய்யக்கூடிய மனிதர்களாக அவர்கள் ஆக்கப்பட்டு விடுகிறார்கள். இரக்கவும் பொய் சொல்லவும் வழிபடவும் நிர்வாணப்படுத்திக் கொள்ளவும் காட்டிக்கொடுக்கவும் நியாயப்படுத்தவும் போர் அவர்களை வடிவமைத்து விடுகிறது."

மூன்று (கொரில்லா, ம், இச்சா) நாவல்களிலும் புனைவு என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் இந்தக் கதைகள் உண்மையில் இருந்து விளைந்தவையே. போரின் தீவிரத்தை அதன் உண்மை நிலையில் விளங்கப் பண்ணுபவையே. இதுபோன்ற, இதனிலும் கொடுமையான அனுபவங்கள் பலருக்கும் இருக்கிறது.

"ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாய் அலைந்து திரியும் ஒவ்வொருவரின் வாழ்வும் ஒரு இலக்கியம்தான்" என்ற கூற்றே அதைத் தெளியப்பண்ணுகிறது. கற்பனைக்கெட்டாத கொடுமைகளை நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போர்ச்சூழல் கதைகளாகையின் இதனை *Fiction* என்று குறிப்பிடுகிறார் எழுத்தாளர் என்றே கருதத் தோன்றுகின்றது. உண்மை இதனினும் பயங்கரமானது என்ற தன்னுணர்வான அறிதலோடு இக்கதைகளை நாம் வாசிப்பதே நம்மை உறைய வைக்கிறது. சில்லிட வைக்கின்றது.

எஸ்தர் ராணி

நகரச் சக்கரம்

`டர்ரப் டர்ரப்..`

செருப்புகள் சத்தமிட ஜான்வி, ராகவ், சிபு, மெர்லின் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

'ரன் ரன் பாஸ்ட். விடக்கூடாது.'

ஆண்/பெண், மதங்கள்/ சாதிகள் பல வேறுபாடுகளிருந்தாலும் பொதுவாய் அவர்கள் குழந்தைகள். அந்த அப்பார்ட்மெண்டின்வாசிகள்.

'நான்தான் சொன்னேன்ல்ல, பேபிக்கு மில்க் கொடுக்கிறது இருக்கு.'

'அது மதர். அப்புறம் டு பேபீஸ்.'

'எங்காத்துல தாத்தாக்குக் கூடதான் அப்படி இருக்கு. அவர் என்ன மதரா?'

'ஏய்! ஏய்! மேல போகுது..'

மெர்லின் கத்தக் கத்த இரண்டாவது பிளாக்கின் பைப்பைப் பிடித்து ஏறத் தொடங்கினர் மூன்று மூதாதையர்கள்.

சென்னையின் மையப் பகுதி. சனி மாலை 4 மணி. சித்தாளு, பெரியாளு, பெயிண்டர், பிளம்பர், மீன்காரி, பூக்காரி என நகரெங்கும் சேவை செய்ய அர்ச்சுனன் வில்லாக விருட்டெனப் புறப்பட்டு வேலைக்குப் போயிருந்த குடிசைப் பகுதியினருக்கும் அது சனி மாலை 4 மணி.

•

ஆறுமுகத்திற்குப் பிடித்தது ஒரே முகம்தான். அவன் மகள் செல்வியின் முகம். அன்றும் அவன் செல்வியின் முகத்தில்தான் விழித்திருந்தான். கோள்களின் கோளாறோ என்னவோ செல்வியின் முகம் அன்று செல்லாக்காசானது.

முதலில் பற்றிக்கொண்டது ஆறுமுகத்தின் குடிசை. அப்படியே பரவிப்பரவிக் குடிசைகள் சாம்பலாகின. 576 குடிசைகளில் குடிசையாகக் குடித்தனம் செய்ய மிஞ்சியவை முன்னூத்தி சொச்சம். குடிசைப் பகுதிகளில் இருந்தெழுந்த குரல்கள் 200 அடி தொலைவில் இருந்த தீயணைப்புத் துறைக்கு அன்றைக்குக் கேட்காமல் போனது.

வீடு இழந்தவர்கள் சமுதாயக் கூடத்தில்... ஆளுங்கட்சி எதிர்க்கட்சி வேட்டிகள், அதிகாரச் சேலைகள், கால் சட்டைகள்... ரொட்டி, சோப்பு, தண்ணீர் பாட்டில்கள், போர்வைகள், பழைய துணிகள்...

•

இரண்டாவது பிளாக்கின் மூன்றாவது மாடியில் திறந்திருந்த ஜன்னலின் வழியாகக் குரங்குகள் வீட்டினுள் புகுந்தன. சல்மாவின் கணவன் இயற்கைக் காதலன். அபார்ட்மெண்ட்டில் வசித்தாலும் காற்றும் வெளிச்சமும் அத்தியாவசியம் என்றெண்ணும் இயற்கைக் காதலன். அந்த இயற்கைக் காதலனைக் காண இயற்கை தூதுவர்கள் மூவரை அனுப்பியிருந்தது. சமையலறையிலிருந்து பார்த்த சல்மா அல்லா என்றலறி வெளியே ஓடினார்.

கூட்டம் குழும செக்யூரிட்டிகள் அழைக்கப்பட்டனர். செக்யூரிட்டிகளின் முகங்களையே பார்த்திராத பலருக்கும் செக்யூரிட்டிகளின் முக தரிசனம் அன்றுதான் கிடைத்தது. ஒரு செக்யூரிட்டி கூட்டத்தை மேலே செல்லும் படிக்கட்டருகே நிறுத்தினார். மற்ற மூவரும் ஒரே நேரத்தில் விசிலடிக்க இன்னொருவர் கையிலிருந்த குச்சியால் தட்ட.. சாப்பாட்டு மேசையில் சல்மாவின் தம்பி அனுப்பியிருந்த அரேபியப் பேரீச்சையைப் பிசுக்கி விளையாடிக்கொண்டிருந்த குரங்குகளிலொன்று கதவை நோக்கி ஓட மற்றொன்று அதைப் பின்பற்ற தன் சாமர்த்தியத்தை ஹாட் பேக்கில் காட்டிக்கொண்டிருந்த தாயோ அவர்களைக் காப்பாற்ற அவசரகதியில் ஓடியது வெளியே. செக்யூரிட்டிகளின் வீர வரலாற்றில் புதிய காதை பாடப்பட்டது.

•

தாஸ்தான் முதலில் ஆரம்பித்தான்.

'ஐயா இதான் எங்களுக்கு சவுரியம், புள்ளைங்க ஸ்கூலுக்குப் போக, நாங்க வேலைக்குப் போக, ஆஸ்பத்திரிக்குப் போக. தூரமாப் போனா நாங்க பொழைக்க முடியாதுங்க.'

'நல்லா கவனிச்சுக்கோங்க. இத்தோட இங்க நிறைய தடவை தீப் பிடிச்சிருச்சு. அதனாலதான் அரசு உங்களுக்கு எரியாத மாதிரி குவாட்டர்ஸ் கட்டிக்கொடுத்திருக்கு. நாளைக்கு எல்லாரும் எம்எல்ஏ ஆபீஸாண்ட வாங்க. டோக்கன் வாங்கிட்டுப் புது வீட்டுக்குப் போலாம்.'

கனகா கேட்டாள், 'ஐயா எரியாத வீட்ட இங்கேயே கட்டிக்கொடுங்க. ஊரை விட்டுத் தூர அனுப்புனா பொழப்புக்கு என்னைய்யாப் பண்ணுவோம்.'

'கவர்மெண்ட் முன்கூட்டியே உங்களுக்குப் பணம் இடம் எல்லாம் ஒதுக்கி வீடு கட்டிருச்சே. இப்படியே லேட் பண்ணினா அது வேற குப்பத்துக்காரங்களுக்குப் போயிடும்.'

'இல்லைய்யா நாங்க இங்கேயே இருக்கிறோம்.'

தாஸ் சொல்ல, கனகா சொல்ல, ஆறுமுகம் சொல்ல, சாம்பல் குடிசைக்காரர்கள், குடிசை குடிசைக்காரர்கள் எல்லாரும் சொல்ல கரைவேட்டி சொல்லாமலே போனது.

அடுத்த ஞாயிறு முதலில் எரிந்தது தாஸின் வீடுதான். அந்தக் குடிசைக்குள் முருகன், தர்காசாமி, மாரியம்மாள், வேளாங்கண்ணி மாதா எல்லாரும் அடுத்தடுத்த மரச் சட்டங்களில் பக்கத்து வீட்டுக்காரர்களாக இருந்தார்கள். கடவுள்களுக்கு ஞாயிறு விடுமுறை போல தங்கள் படங்களைக் காப்பாற்றிக்கொள்ளக் கூட முன்வரவில்லை. மக்களை? இதற்கு மேல் சொன்னால் சாமிக்குத்தம்.

•

ராகவ் கதவை யாரோ தட்டுவதாய் எண்ணித் திறக்க குட்டிகளுடன் வீடு புகுந்தது தாய்.

ராகவ் 'அம்மா! பாட்டி! தாத்தா!' என்றலற, அம்மா உருண்டு, தாத்தா நகர்ந்து, பாட்டி சாய்ந்து வந்தார்கள். பாட்டி 'ஆஞ்சநேயா ஆஞ்சநேயா வெளிய போயிடு உனக்கு வடமாலை சாத்தறன்' என வேண்டுகோள் விடுக்க, தாத்தா 'ராமா ராமா ராமா ராமா' என்றார். அம்மா சும்மா நின்றாள் புரியாமல். ராகவ் செக்யூரிட்டிகளை அழைத்துவந்தான்.

இந்த முறை குச்சிகளோடு அனைவரும் தயாராக இருக்க மற்றொரு காதையும் வாகைத் திணையாயிற்று செக்யூரிட்டிகளுக்கு. ஃப்ரிட்ஜைத் திறந்து பால் பாக்கெட்டைக் கடித்துக்கொண்டிருந்த அம்மா, கீழே நின்றிருந்த இரண்டாம் எண்ணின் மேல் ஃப்ரிட்ஜின் மேலேறி மாவை ஊற்றிய முதலெண்.. பாலொடு மாவும் கலந்தனவே என்றபோதிலும்

விரட்டப்பட்டனர்.

குரங்குகளின் திடீர் விஜயங்கள் அடிக்கடி அரங்கேற குடியிருப்புவாசிகள் கூடினர். சல்மாவின் கணவர் சொன்னார், 'குரங்குகளை அடிக்கக்கூடாது.'

'அப்புறம் என்ன சார் பண்றது?'

'வெடி வெச்சா விலங்குகள் பயந்துரும்; அப்புறம் வராது.'

சல்மாவின் கணவர் குறுக்கிட்டார், 'தப்புங்க.. வனத்துறை கிட்ட சொல்லிப் புடிச்சுக் காட்டுல விடச் சொல்லலாம்.'

சிபுவின் பாட்டி டெல்லியில் மத்திய அரசின் உயர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின் குடியிருப்பில் பெண்கள் வம்புக் குழுவின் தலைவியுமாய் முழு நேரம் பணியேற்றிருந்தார். 'எனக்கு என்னவோ கடவுள் ஏதோ சொல்லறாரோனு தோணுது. நானும் வந்த நாளிலிருந்து சொல்றேன், ஒரு கோயில் கட்ட யாராவது கேட்டீங்களா? இப்பக் கடவுளே எந்தக் கோயில் கட்டணும்னு நமக்குத் தெரியப்படுத்தி இருக்கார்.'

சல்மாவின் கணவர், 'அப்பார்ட்மெண்டில் ஏகப்பட்ட எலி பெருச்சாளி எல்லாம் மேயுது. தெருப்பூனைல்லாம் காருக்கடியில் குட்டி போடுது. அசந்தா நாய் உள்ளே வந்துடும். இதுக்கெல்லாம் எந்தக் கோயில் கட்டுவீங்க?'

'மிஸ்டர் நீங்க தப்பா பேசுறீங்க சாமி விஷயத்துல அப்படி பேசாதீர்கள்.'

ஒரு சுடிதார் வாய்திறக்க சிபுவின் பாட்டி கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி வழக்கை முடித்தார், 'நீங்க எல்லாரும் பாருங்க, கோயில் கட்டிட்டா நம்மெல்லாருக்கும் விமோசனந்தா. பணத்தை அலாட் பண்ணுங்க, நானே பொறுப்பெடுத்துக் கோயில் கட்றேன்.'

அந்த ஒருவர் செக்யூரிட்டிகளிடம் வெடி வாங்கிக் கொடுத்தார். சல்மாவின் கணவர் வாயைத் திறக்கவில்லை. எப்போதும் கூட்டத்திற்கு வரும் மெர்லினின் தாத்தாவிற்கு ஒன்றரை காது கேட்காது. கேட்பது போலத் தலையை ஆட்டுவார், அன்றும் ஆட்டினார்.

•

மலைகளையே பெயர்க்க முடிந்த நாட்டில் குடிசைகளைப் பெயர்ப்பது எவ்வளவு சுலபம். குடிசைகளைப் பெயர்த்துப் புறநகருக்கு அப்புறத்தில் எறிந்தார்கள். ஒரே மாதத்தில் குடிசைப்பகுதியைச் சமப்படுத்திச் சுற்றுப்புறச் சுவரெழுப்பி இரண்டு தட்டிகள் வைத்தார்கள். முதல்தட்டி ஆங்கிலம் படித்தது, 'அத்துமீறி நுழையாதே. தனியாருக்குச் சொந்தமான இடம்.' இரண்டாம் தட்டி ஆங்கிலம்/ தமிழில், சகல வசதிகளுடைய குடியிருப்பைப் பற்றி முன்மொழிந்து தொடர்பு கொள்ள தொலைபேசி எண்களை வழங்கியிருந்தது. முதலில் தொடர்புகொண்டு வீடு பதிவு செய்தவர் மெர்லினின் தாத்தாதான். பிறகு வரிசையாக இஎம்ஐ உற்சவங்களில் இணைந்து வீடற்ற மத்தியதர வர்க்கத்தினர் சென்னையின் மையத்தைத் தத்தம் முகவரிகளாக்கிக் கொண்டனர்.

•

சிபுவின் பாட்டி& குழு சிரமேற்கொண்டு இரு மாதங்களுக்குள் கோயிலைக் கட்டி முடித்துவிட்டது. கோயில்பணி ஆரம்பித்த நாளிலிருந்து மூதாதையர்கள் வரவில்லாமல் போனதைக் குழு சிலாகித்துப் பரப்புரை செய்துகொண்டிருந்தது.

•

கோயிலின் முதல்பூஜையன்று குடியிருப்பே கூடியிருக்க வாயிலில் ஒரு செக்யூரிட்டி மட்டும் நின்றிருந்தார். குடும்பத்துடன் குரங்கு மறுபடியும் திக்விஜயம். அனைவரும் அதிர்ந்து பின் சுதாரிக்கையில் செக்யூரிட்டி வீரர்கள் வெடியை வெடித்தார்கள். விசில் சத்தங்கள், மிரட்டல்கள், வெடிச் சத்தங்கள், தடி பிரயோகங்கள். செக்யூரிட்டிகளின் வாகைசூடலுக்கு மற்றுமொரு காதை. கிடைத்த சக்கரங்களின் மேலெல்லாம் ஏறிக்கொண்டு நகரம் எப்போதும் போல படு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் குரங்குக் குடும்பம் நடைபாதையில் இலக்கின்றி ஓடிக்கொண்டிருந்தது.

ஜான்வி அம்மாவிடம் கேட்டாள், 'அம்மா அட்ரஸ் சொல்லிக்குடு. நெக்ஸ்ட் வீக் டெஸ்ட். நம்ம அப்பார்ட்மெண்ட் பேரென்ன?'

'கிஷ்கிந்தா அப்பார்ட்மெண்ட்.'

■

அரும்பாவூர் இ.தாஹிர் பாட்சா



கவிதை நடையில் ஒரு கலகக்காவியம்

இன்பத் தமிழ்ச் சுவை செழித்துத் தழைத்த தமிழ் விருட்சம், இலங்கை மண்ணின் இனத்தின் வலியைத் திறம்பட எழுத்தின்வழி பதிவு செய்யும் ஆற்றலாளர் வ.ஐ.ச ஜெயபாலன். காப்பிய வகையில் இல்லாமல் முழுக்கக் கவிதை வடிவில் எழுதப்பட்ட "ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்" எனும் நூலின்வழி இலங்கையில் தமிழ் இனம் பட்ட வலிகளையும் அதன் மீது ஏவப்பட்ட அவமானங்களையும் தமிழர்கள் பட்ட துயரங்களையும் மிக விரிவாக ஆழமாக உலகிற்கு உரைத்துள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பாடநூலில் இந்நூல் இடம் பெற்றிருந்தது. அதற்குப் பிறகு இரண்டாவது மூன்றாவது பதிப்பினைக் கடந்து நான்காவது பதிப்பாகப் படைப்பு பதிப்பகம் இந்நூலை வெளியிட்டிருப்பதன் வாயிலாக இந்நூலின் சிறப்பை நாம் புரிந்துகொள்ள முடியும். கரும்பனைய சுவையூட்டும் கன்னித் தமிழில் கவிதை நாவல் படைத்திட்ட நூலாசிரியர் சிறப்புமிக்கவர்.

வெண்பா அகவல் விருத்தமெனச் செழுந்தமிழின் சீர் கவிதை பல வகையும் இந்த நூலில் ஆனந்த நர்த்தனம் ஆடுகின்றன. ஓசைக்குத் திகைந்த விழுமிய இவரது தமிழ் ஆற்றொழுக்கு நடை, ஏரார்ந்த எதுகை மோனை, இன்பமிகு உவமான உவமேயங்கள் துள்ளும் ஓசை நயச் சந்தம் இவை கொண்டு சர்க்கரைப் பந்தலில் தேன்மாரியாக நம்மை ஏகாந்தப் பெருங்கடலில் முக்குளிக்க வைக்கும் எழுத்து நடையை யாத்திருக்கிறார் கவிஞர்.

உரிய கவி பெருமிதம், நேர்பட உரைக்கும் பேச்சுவன்மை, ஒவ்வாததை ஒதுக்கும் நளின செழுமை, சிறுமை கண்டு சினத்தலில் வலிமை, தமிழ்ச் சமூகத்தின் மாண்பு போன்றவற்றைச் சிறப்புற இந்நாவலில் பதிவு செய்திருக்கிறார். இலங்கை மண்ணில் கவிஞர் பாலியாற்றின் கரையில் எப்போதோ இறந்துபோன கதை நாயகியைச் சந்தித்து அவளின் மரணம் குறித்தும் அவருடைய வாழ்வியல் குறித்தும் கேட்டறியும் சூழலை நாவலின் கருப்பொருளாகப் படைத்துள்ளார். புனைவுகள் அனைத்தும் உண்மையானது அல்ல என்றாலும் நெஞ்சுக்கு நெருக்கமாக ஆக்குவதில் படைப்பாளி வெற்றி பெறுகிறார். படைப்பாளியின் சித்தாந்தத்தோடு வாசகர்களும் கருமம் கோர்த்து நடை பயிலும் சாத்தியம் சிறந்த எழுத்துக்கே அமையும்.

"கூனிக்குறுகி கூசிக் கூசி
ஏழ்மைப் பட்டதோர் நிலக்கிழார் தனது
குளத்தெரு வீதியில் நடை மெலிதல் போல்
கோடை தின்ற ஆறு நடந்தது"

ஏழ்மை நிலையில் இருந்த ஒரு விவசாயி தான் வாழ்ந்த குளத்தின் வீதியில் கூனிக்குறுகி வெட்கி மெலிந்து நடப்பது போலக் கோடை காலத்தில் ஆறு மெலிதாக வற்றிய வண்ணம் ஓடிக்கொண்டிருந்தது என்பதனைச் சுவைபட தனது எழுத்தின்வழி தீட்டி உள்ளார் கவிஞர்.

மற்றொரு இடத்தில்

"சடாமுடி தரித்த ஆல மரங்கள்

தத்துவம் சொன்னது" என்கிறார். ஆலமரத்தின் விழுதுகள் எப்போதும் நீண்டு பூமியைத் தொடுகின்ற வண்ணம்தான் இருக்கும். அதனைச் சாமியார்கள் போன்று சடாமுடி தரித்துள்ளன என்று உவமை நயத்தோடு எழுதியிருப்பது உவகை கொள்ள வைக்கிறது.

இந்த நாவலில் நேர்மையாக ஈழத்து மண்ணில் நிலவி வந்த வர்க்க வேறுபாட்டைப் பதிவு செய்துள்ளார். மலையகத் தமிழர்கள் பூர்வ குடி தமிழர்கள் தமிழ் இஸ்லாமியர்கள் போன்றவர்களுக்குள் இருந்த முரண் தமிழர் விடுதலையை எந்த வகையில் பாதித்தது என்பதைக் கடும் வேதனையோடு பதிவு செய்துள்ளார். ஈழத்தில் அடிக்கடி நடந்து வந்த கடையடைப்புப் போராட்டத்தையும் அதனால் ஏற்பட்ட பொருளாதாரச் சீரழிவையும் காட்சிப்படுத்தத் தவறவில்லை.

"ஈழ மண்ணில் ஹர்த்தால் என்பது
ஏதோ ஒரு இயக்கம் பிரகடனம் செய்யும்
ஊரடங்கு உத்தரவன்றோ.........
நொடிந்துபோன நம் பொருளாதாரத்தின்
கால்களை உடைக்கும் ஹர்த்தால்
வேண்டாம்"

என்ற வரிகள் வாயிலாக அம்மண்ணில் நடந்த போராட்ட நடைமுறைகளைச் சாடத் தவறவில்லை.

ரதி தேவி எனும் கதை நாயகியின் வாழ்வியல் போராட்டம்தான் இந்த நாவலின் அடிப்படை. பிறந்தது முதல் இறந்தது வரை ஒரு பெண்ணாக ஈழத்தில் அவர் சந்தித்த இடர்ப்பாடுகளை வாழ்வியல் சிக்கல்களை மிக நேர்த்தியாகச் செதுக்கியிருக்கிறார். காதலும் வீரமும் தமிழர்களின் வாழ்வியல் அங்கம் என்பதையும் நிறுவத் தவறவில்லை ஆசிரியர். ஈழப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு எத்தகையது என்பதை இந்த நூலின்வழி வாசகர்கள் உணர்ந்துகொள்ள முடியும். ஈழத்து மக்களின் நெருக்கடி மிக்க வாழ்வைக் கவிதை நடையில் உலகறிய உயிர் கொடுத்து எழுதி இருக்கிறார். வித்தியாசமான வாசிப்பு அனுபவம் வாசகர்களுக்குக் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

நூல் : ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்.
ஆசிரியர் : வ. ஐ. ச.ஜெயபாலன்.
பக்கங்கள் : 110. விலை : ரூ 120
வெளியீடு : படைப்பு பதிப்பகம், 8, மதுரை வீரன் நகர், கூத்தப்பாக்கம், கடலூர்-607002.
அலைபேசி : 9489375575

ஆய்வுக் கட்டுரை

பகுதி - 3

த.விஜயலட்சுமி,
பேராசிரியர், தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

பெண்ணிய நோக்கில் எஸ்.ராவின் உறுபசி நாவல்

உரையாடல்கள்

கதையினுள் வரும் பாத்திரங்களின் உரையாடல் அமைப்புகளில் ஆசிரிய அதிகாரப் பராமரிப்பு செய்யப்படுகிறது.

'ஆசிரியர் பாத்திரத்திற்கு கொடுக்கும் உரையாடல்களின் தன்மையில் அதிகாரப் பராமரிப்பு உள்ளது. ஆண் பாத்திரங்களின் உணர்வுகளை அதே முறையில் உரையாடலாகக் கொடுக்கும் கதை சொல்லி பெண் பாத்திரங்களின் உரையாடல்களைத் தனது விளக்கங்களாகக் கொடுத்துச் செல்வதைப் புனைவுகளில் காணலாம்,' (த.விஜயலட்சுமி, 2020. பக்.54). இந்தப் படைப்பு அரசியல் கருத்துக்கு இணங்க உறுபசி நாவலில் பெண் பாத்திரங்களின் உரையாடலோ அவர்களது எண்ணங்களோ எங்கும் நேரடியாகக் கொடுக்கப்படவில்லை. எல்லா இடங்களிலுமே கதை சொல்லியின் எடுத்துரைப்பாக மட்டுமே வந்துள்ளன.

ரத்தம் வரும் அளவு ஜெயந்தியை வன்மையாக சம்பத் புணர்ந்தபோதும், நான்கு நாட்களாகக் கதவையே திறக்கக்கூடாது என்று வீட்டினுள் அடைத்திருந்தபோதும் அவள் என்ன நினைத்தாள்? என்ன கூறினாள்? என்று எங்குமே பதிவிடவில்லை. ஒரே ஒரு இடத்தில் மட்டும்,

'சில நாட்கள் பகல் முழுவதும் காரணம் இல்லாமல் அவள் அழுதுகொண்டே இருந்தாள்' (பக்.102) என்று தன்னையும் மீறிப் பதிவு செய்கிறார். ஒரு பெண்ணால் சகித்துக்கொள்வதற்கு இயலாத அளவு பிரச்சனைகளிலும் வலிகளிலும் அழுந்தும் ஜெயந்தி அழுவது காரணம் அற்றதாக ஆசிரியருக்குத் தோன்றுகிறது. சில இடங்களில் ஜெயந்தியின் மன உணர்வுகளையும், எண்ணங்களையும் பொருந்தாத முறையில் பதிவு செய்துள்ளதையும் காணமுடிகிறது.

சம்பத்தின் மீது தீராத பற்றும், பாசமும் உள்ள காவிய நாயகி வடிவமாகப் படைக்கப்பட்ட ஜெயந்தியின் மனநிலையாக அதற்கு முற்றிலும் முரணான ஒரு எண்ணத்தை,

'சம்பத்தின் மரணம் அவளுக்குத் திடீரெனத் தான் வெட்டவெளியில் இருப்பது போல மிகுந்த சந்தோஷமானதாகவும் பயமானதாகவும் இருந்தது' (பக்.52) என்று விளக்குகிறார். உயிருக்குயிராக நேசித்தவனின் மரணம் அவளுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்ததாக எழுதுவதுவழி பெண்கள் எல்லோரும் நம்பத்தகாதவர்கள் என்ற புரிதல் ஏற்படுத்த முயலப்பட்டுள்ளது. பாத்திரப் பண்புக்கேற்ற உரையாடல்களையும் எண்ணங்களையும் படைத்தல் என்பது புனைவின் இன்றியமையாத அடிப்படையாகும். இந்த அடிப்படை உறுபசி நாவலில் பல இடங்களில் இழக்கப்பட்டுள்ளது.

மொழி

உரையாடலைப் போலவே பெண் பாத்திரங்களைக் குறிப்பிடும் மொழியும்

ஆசிரியர் அதிகாரத்தைப் பறைசாற்றி நிற்பதாகும். வயதான கன்னியாஸ்திரி, அம்மா, சித்தி, ஆசிரியை என அனைத்துப் பெண்பால் பாத்திரங்களையும் எந்த ஒரு மரியாதையும் இல்லாமல் *அவள், இவள், வந்தாள், போனாள்* என்று சரமாரியாகப் பதிவிடவும் கன்னியாஸ்திரியுடன் வந்த ஒரு நபர் பிற ஆண்கள் ஆகியோரை *அவர், இவர், வந்தார், போனார்* என்று மரியாதையோடு பதிவிட்டு இருப்பதும் பெண்கள் மீதான ஆசிரியரின் மதிப்பின்மையைக் காட்டிநிற்கிறது.

உடல் மொழி

கலை இலக்கியப் புனைவுகளில் பெண்கள் தங்களது உடல் மொழியைப் பயன்படுத்திக் கருத்துப் பரிமாற்றம் செய்வதாகக் காட்டப்படுகிறது. அவ்வாறு உடல் மொழி மூலமாகக் கருத்துப் பரிமாற்றம் செய்வது அழகியலில் முக்கியமானது என்று போற்றவும்படுகிறது. உடல் மொழி பெண்ணுக்கு இயல்பு வாழ்விலும் வலியுறுத்தப்படுகிறது. புனைவுகளில் பெண் தலையசைத்தல், கண் சிமிட்டல், தலை குனிதல், கால் விரலால் கோலம் போடுதல் போன்ற உடல் அசைவுகள்வழி பதில் கூறுவதாகப் படைக்கப்படுகிறது.

'பெண்களின் வாய்மொழி மறுக்கப்பட்டு உடல் மொழி போற்றப்படுவதற்குள் ஒரு அரசியல் இருக்கிறது. வாய்மொழியின் கருத்துப் பரிமாற்றத் தெளிவும் பன்முகத்தன்மையும் உடல் மொழி கருத்துப் பரிமாற்றத்தில் இல்லை என்பது மட்டுமல்லாமல் அவளது எதிர்வினைகள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குள் (ஆம், இல்லை என்பது போல்) சுருங்கி விடவும் இது காரணமாகிறது' (த. விஜயலட்சுமி, 2020, பக்.100) என்ற எனது கருத்தைச் சரி வைப்பது போலவே உறுபசி நாவலில் *17* இடங்களில் பெண்களின் எதிராடல்கள் அவர்களது உடல் மொழிகள் வழியாகக் காட்டப்படுகின்றன. பெண்ணின் மௌனம் கூட எதிரே நிற்பவருக்குச் சம்மதமாக மொழிபெயர்க்கப்படுகிறது.

கதை சொல்லி

படைப்பாளி கதை சொல்லியைத் தேர்வு செய்வதிலும் ஆசிரிய அதிகாரப் பராமரிப்பு உள்ளது என்ற எனது கருத்தை நிறுவும் வகையில் உறுபசி நாவலில் கதை சொல்லிகள் அமைக்கப்பட்டுள்ளனர். உறுபசி நாவலில் கதை சொல்லியாகப் பலர் வருகின்றனர். அதிகப்படியான கதையைக் கூறுவது சம்பத்தின் நண்பனான அழகரின் பாத்திரக் கதை சொல்லி குரலில் ஆகும். இடையிடையே ஆசிரியரும் வந்து கதை சொல்லுகிறார். சில இடங்களில் சம்பத்தின் பாத்திரம் தன்மை ஒருமையில் கதை கூறுகிறது. வேறு சில இடங்களில் மாரியப்பனின் தன்மை ஒருமைக் குரலிலும், ராமதுரையின் தன்மை ஒருமைக் குரலிலும் எனக் கதை முன்னேறுகிறது. அவரவர் எண்ணங்களை அவரவர் தன்மை ஒருமையில் (நான் என்று) சொல்ல வைத்திருக்கும் எஸ். ரா ஜெயந்தியின் கதையைக் கூறும் இயலிலும் சம்பத்தின் தோழி யாழினியின் கதையைக் கூறும் இயலிலும் அவர்களது தன்மை ஒருமைக் குரலில் கதை சொல்ல வாய்ப்பளிக்காமல் எஸ்.ராவே படர்க்கைக் கதை சொல்லியாக வந்து அவர்களின் கதையை, எண்ணங்களைப் பாத்திரத்திற்குப் பொருந்தாமல் கூறிச் செல்கிறார்.

'பெண் சார்ந்த கதையாக இருப்பினும் அதைப் பெரும்பாலும் ஒரு ஆண் பாத்திரம் சொல்வதாகவே கட்டமைக்கப்படுகிறது. ஏன் பெண் பாத்திரம் வழியாகக் கதை சொல்லப்படுவதில்லை எனில் ஹெலன் சிசு சொல்வது போல இருபால் தன்மை அந்தக் கதை சொல்லலில் வந்துவிடும் என்பதால் ஆகும். பெண்ணின் மனநிலையில் இருந்து குறிப்பிட்ட கதையைக் கூறும்போது அதற்கு ஒரு பெண் தன்மை வந்துவிடும் என்று நினைப்பதன் காரணமாகப் பெரும்பாலான கதைகள் ஆண் குரலிலேயே சொல்லப்படுகின்றன. இப்படி ஆணைக் கதை சொல்லியாக அமைப்பதில் ஒரு வசதியும் உள்ளது என்னவெனில் பெண்ணினுடைய உணர்வுகளும் சிந்தனைகளும் இருட்டடிக்கப்பட்டு முன்னேறிச் செல்ல ஆண் குரல் படைப்பாளிக்குத் தேவையாக இருக்கிறது' (த. விஜயலட்சுமி, 2020, பக்.58) என்ற கருத்திற்கு ஏற்பவே இங்கு ஜெயந்திக்கும் யாழினிக்கும் தன்மைக் குரல் கொடுக்கப்படாமல் எஸ்.

ரா ஆசிரியர் அதிகாரத்தைப் பயன்படுத்தி மறுத்திருக்கிறார் என்பதைக் காண முடிகிறது.

முடிவுரை

எஸ்.ராமகிருஷ்ணன் எழுதிய உறுபசி நாவலைப் பெண்ணியக் கோட்பாட்டு வாசிப்பிற்கு உட்படுத்தியபோது அப்புனைவில் பெண்களை வெறுக்கத்தக்கவர்களாக, சுயநலக்காரிகளாக, மனிதாபிமானமற்றவர்களாக, நம்பத் தகாதவர்களாக படைத்துள்ளமையைக் காணமுடிகிறது. சமூகத்தில் பெண்கள் எல்லோரும் நல்லவர்கள் என்ற கருத்து இல்லை. இங்குக் கூறப்பட்டவர்களைப் போன்றோரும் இருப்பர் என்பதில் கருத்து முரண்பாடும் இல்லை. ஆனால் இந்நாவலில் வரும் 36 பெண் பாத்திரங்களில் 31 பாத்திரமும் இதுபோல வெறுக்கத்தக்கவர்களாகவும் மூன்று பேர் சிறுமிகளாகவும் தோழியாக வரும் ஒரு பெண் பொருளாசை மிக்கவளாகவும் படைத்துத் தலைவியை மட்டும் காவிய நாயகியாகப் படைக்கப்பட்டமைதான் ஆசிரியரின் பெண்ணுக்கு எதிரான படைப்பு அரசியலை வெளிப்படுத்துகிறது. மட்டுமல்லாமல் பெண் உடலைத் துண்டு போட்டு ஆங்காங்கே வாசகருக்குக் காட்சிப்படுத்தி அவர்களைத் தன்னோடு அழைத்துச் செல்லும் ஒரு பாலியல் கதை சொல்லும் முறை இந்நாவலிலும் கையாளப்பட்டுள்ளது. இது பழமையான ஒரு கதை சொல்லும் முறையாகும். சாண்டில்யனையும் ஆங்கில ஹென்றி மில்லர், நார்மன் மெய்லர் போன்றவரையும் இக்கதை சொல்லும் முறை நினைவூட்டுகிறது.

இன்று ஒரு விரல் சொடுக்கில் பெண் உடலும் ஆண் உடலும் அவற்றின் செயல்பாடுகளும் மலிந்து காணக் கிடக்கும் காலகட்டத்தில் பெண் உடலைக் காட்டிக் கதை சொல்லத் தேவையில்லை. மட்டுமல்லாமல் ஆண்கள் மட்டும்தான் வாசகர்கள் என்ற எண்ணம் பதினெட்டாம் நூற்றாண்டுச் சிந்தனையாகும். கலையில் காமம் கூடாது என்ற ஒழுக்க விதிமுறைகளுக்குக் குரல் கொடுக்கும் எண்ணம் இல்லை. அதே வேளையில் அந்தக் காமம் என்பது மொழித்தளத்தில் பெண்ணுக்கு எதிராக நடக்கும் வன்புணர்வாகவும் இருக்கக் கூடாது என்பதில் பெண்ணியம் தீவிரமாக இருக்கிறது. காமத்தை இருபால் சமத்துவத்தோடு பதிவிடுவதில் எந்தக் கலைத்தன்மையும் குறைந்து போவதில்லை என்பதைப் படைப்பாளர்கள் கவனத்தில் கொள்ளலாம். காமம் பெண்ணுக்கு வலி என்ற புனைவு உத்தி இன்று காலாவதியாகிப்போன தந்திரமாகும்.

பெண்ணியக் கோணத்தில் அல்லாமலும் கதையை நுணுக்கமாக வாசிப்புக்கு உட்படுத்தியபோது கதை சொல்லியின் கூற்றுகளில், வாக்கிய அமைப்புகளில், கால இடப் பின்னணியில், நிகழ்வுத் தொடர்ச்சிப் பொருத்தத்தில், பாத்திரப் பேர்களில் எனப் பல தவறுகளும், முரண் உரைத்தலும் நிகழ்ந்துள்ளதைக் காண முடிந்தது. இவற்றைத் தவிர்த்திருக்கலாம்.

எழுத்தாளர்கள் காலத்துக்கு முன்னே நடப்பவர்கள், சமூக முன்னேற்றத்தில் தமது பங்கை ஆற்றுபவர்கள் என்றவொரு பொது எதிர்பார்ப்பும் மதிப்பும் பொதுச் சமூகத்தில் நிலவுகிறது. அந்த எதிர்பார்ப்பிற்கும் மதிப்புக்கும் ஏற்ப அவர்களது படைப்புகளும் காய்தல், உவத்தல் இன்றிப் பாலினப் பொதுமையோடு அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எஸ்.ராவிடமும் அது போன்ற உயரிய பாலினச் சமத்துவமான படைப்புக்களை எதிர்பார்ப்போம்.

துணையிகள்

1.சாராகாம்பிள்–டோல்மோய், 2011, பெண்ணியம் வரலாறும் கோட்பாடுகளும், (மொ.பெ) ராஜ் கௌதமன், விடியல் பதிப்பகம், கோவை.

2.பஞ்சாங்கம். க, 2008, நவீன இலக்கியக் கோட்பாடுகள், க.பஞ்சாங்கம் கட்டுரைகள், காவ்யா பதிப்பகம்.

3.மணவாளன்.அ.அ, 1991, அரிஸ்டாட்டிலின் கவிதை இயல், NCBH, சென்னை.

4.ராமகிருஷ்ணன்.எஸ், 2019, உறுபசி நாவல், தேசாந்திரி பதிப்பக வெளியீடு.

5.ராஜ் கௌதமன், 2021, பாலியல் அரசியல் கேட் மில்லட், NCBH, நாகர்கோவில்.

6.ராஜ்கௌதமன், 2018, தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், NCBH, நாகர்கோவில்.

7.விஜயலட்சுமி.த, 2020, பெண் பெண்ணியம் பெண்ணிலை, காலசகம் வெளியீடு, நாகர்கோவில்.

8.விஜயலட்சுமி.த, 2021, இலக்கியத்தில் பாலின இடம், காலசகம் வெளியீடு, நாகர்கோவில்.

9.Helen Cixous, 1976, 'The Laugh of the Medusa', The University of Chicago press, Chicago.

உயிர் கருகும் குருதி வாசம்

● கவிஜி

திரைப்படம் : All Quiet on the Western Front

அறிவாளிகள் போர்களில் ஈடுபடுவதில்லை. ஈடுபடவும் மாட்டார்கள். மாறாக போர்களை உருவாக்குவார்கள்.

கவனித்துப் பாருங்கள்.

யாரெல்லாம் சண்டைக்கு முந்திக்கொண்டு நிற்கிறார்களோ அவர்கள் அறிவிலும் படிப்பிலும் சற்று பின் தங்கியவர்களாக இருப்பார்கள். நேர்மையானவனும் இதில் சிக்கிக்கொள்வதுதான் நேர்மையின் பலவீனம். ஆனால் அறிவில் தெளிவும் முதிர்ச்சியும் கொண்டவர்கள் பின்னால் இருந்து அவர்களை இயக்குபவர்களாக இருப்பார்கள். அப்படித்தான் எல்லாப் போர்களும். அதனால்தான் அறிவு ஆபத்தானது என்ற புரிதலும்.

கையில் துப்பாக்கியோடு கத்தியோடு வெடிகுண்டுகளோடு களத்தில் நின்று நேருக்கு நேர் அடித்துக்கொண்டு சாவோர் எல்லாம் அறிவிலிகள்தான். அவர்களை அப்படி அவர்களாகவே வைத்திருக்கும் ஒரு தெளிந்த கூட்டம் எப்போதும் அதிகாரத்தைத் தன் வயத்திலேயே வைத்திருக்கிறது. புத்திசாலித்தனமாகத் திட்டமிட்டுக் காய் நகர்த்தும் அந்தக் கூட்டம் குளிரூட்டப்பட்ட அறையில் முந்திரி தின்றுகொண்டு பேப்பரில் கையெழுத்திடும் வேலையை மட்டும் பார்த்துக்கொண்டிருக்கிறது.

அது... பேசிப் பேசி உரு ஏற்றி... பலமில்லாத மனதைக் கலைத்துத் தனக்கு ஏற்றபடி மாற்றிக்கொள்ளும். போரில் இருக்கும் வீர தீர பராக்கிரமச் செயல்களைப் பரப்பி அதில் இருக்கும் கர்வத்தை இளைய மனதில் திணிக்கும். முதல் உலகப் போர் இரண்டாம் உலகப் போர்.. இதோ இப்போது நடந்துகொண்டிருக்கும் போர்களெல்லாம் கூட அப்படியாக வழி நடத்தப்பட்டவையே. மேலே இருப்பவனுக்கு இல்லாத இனவெறி கீழே இருப்பவனுக்கு மட்டும் ஊட்டப்படுவதுதான் அரசியல். அதை எல்லாக் காலத்திலும் அதிகார மேல்தட்டு வர்க்கம் மிகத் தெளிவாகக் கட்டம் கட்டிச் செய்துகொண்டிருக்கிறது. அப்படித்தான் இந்தப் படத்திலும் கூட.

முதல் உலகப்போர்.

எந்த உயர் அதிகாரியாவது சண்டைக்கு நேருக்கு நேர் சென்றிருக்கிறானா.. கஞ்சிக்கு இல்லாத வீட்டில் இருக்கும் காளைகளைத்தான் பயன்படுத்துவார்கள். விளிம்பு நிலைக்காரனுக்கு விதி அதுதான்.

ஆதி தொட்டே போர்களின் வழியே வீரத்தை நிலைநாட்டுதல்தான் வரலாறு என்பதாக எவனோ பதிந்துவிட்டான். பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கிறோம். போர்களின் வழியே கண்டடைந்த எல்லாமே சர்வ நாசத்தின் வழியே மீண்ட மறுவாழ்வுதான். திரு வாழ்வு இல்லை. புத்திகெட்ட பயலுகளின் வழிநடத்துதலில் உடல் சோர்ந்து உள்ளம் வீழ்ந்து கிடக்கும் வீரர்களின் நிலை நிச்சயமற்றது. எந்த நொடியில் எந்த மரணம் என்று தெரியாத செத்து வீழும் நொடிகள்... பயங்கரமானவை.

“சரி... தயாராகுங்கள்...” என்று விரட்டிக் களத்துக்கு அனுப்பும் அதிகார ஆடர்களின் முன்... விதிகளிடம் தங்களை ஒப்படைத்துவிட்டு வீறிடும் வலிகளைத் தூக்கித் துப்பாக்கியைத் தோளில் போட்டுக்கொண்டு அலையும் அவர்களின் ஆற்றாமைக்குச் சொற்கள் இல்லை... தோட்டாக்கள்தான் உண்டு.

நாவலின் வழியே எழும் சினிமாக்கள் வாழ்வுக்கு நெருக்கமானவையாகவே இருக்கின்றன. இந்தப் படம் கூட நாவலின் பக்கங்களில் விரியும் போர்க்களப் பதிவுதான். போர் என்றாலே வெற்றியின் களிப்பு அல்லது தோல்வியின் வலி என்பதாக இருக்கும் களத்தில் இரு பக்கமும் நின்று சண்டையிடும் எளிய வீரர்களின் மனநிலையைப் பேசுகிறது இந்தப் படம்.

ஒவ்வொரு காட்சியிலுமே கொத்துக்கொத்தாய் விழும் மனித உயிர்கள்.... போர்க்களங்களில் எப்போதுமே மதிக்கப்படுவது இல்லை. முன்னேறிக்கொண்டே இருக்க வேண்டும். அல்லது பின்னேறும் நிலையில் அவனவன் உயிரை அவனவன்தான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். எங்கிருந்து வேண்டுமானாலும் வந்து துளைக்கும் புல்லட்டுக்கு யார் யார் எந்தப் பக்கம் என்றெல்லாம் தெரியாது. அது ஒரு சமதர்ம சாவு நிலை.

பருவத்தில் போர்கள் மீது யாவருக்கும் ஒரு ஹீரோயிசத் தோற்றம் இருப்பது இயல்புதான். அதற்குக் காரணம் நாம் கற்ற கேட்ட பார்த்த எல்லாமுமே வீரத்துக்கு நான்கு பேரைப் போட்டுத் தள்ளுவதையே திரும்பத் திரும்பச் சொன்னதுதான். சொல்லிக்கொண்டிருப்பதுதான். ஆனால் வயதும் அறிவும் முதிர்ச்சியும் தெளிவும் ஏற்படும் காலகட்டத்தில்.. போர்களின் நோக்கம் ஒருபோதும் தீர்வை அடையாது என்று புரிய நேரிடுகிறது. தன்னைப் புரிதலுக்கு உட்படுத்துகிறவன் ஒருபோதும் போரில் பங்கேற்க மாட்டான். அதற்கு மாறாகப் பேசித் தீர்க்கும் வழிமுறைகளைக் கண்டடைவான். அதுதான் மானுடத் தேவைக்கு முக்கியமான கண்டுபிடிப்பு என்பதையும் சேர்ந்தே உணர்வான்.

ஆனால் இங்கு நடப்பது வேறு. அதிகாரம். எப்போதும் ஆடர் போட்டுக்கொண்டே இருக்கிறது. அதைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் நிலையில்தான் வீரர்களின் வாழ்வாதாரங்கள் இருக்கின்றன. அப்படி இருக்க வைப்பதில்தான்.. அதிகாரத்தின் வலிமை தொடர்ந்து பலப்பட்டுக்கொண்டே இருக்கிறது. எவனோ திட்டம் போடுகிறான். எவனோ ஆணை பிறப்பிக்கிறான். எவனோ துப்பாக்கி ஏந்துகிறான். உச்சாணியில் இருக்கும் அந்தப் பத்து பேர் ஆடும் பரமபதத்தில் முன் வரிசையில் நிற்கும் வீரர்கள் எப்போதும் பலி ஆடுகள்.

படத்தின் முதல் காட்சியே நம்மைக் கலங்கடித்துவிடும். கல் தின்ற கனவான்களின் போர் வியூகத்தில் களத்தில் மாண்டவர்களின் துணிகளை, பூட்ஸ்களை ரீ சைக்கிளிங் செய்து அடுத்த பேட்ச்க்கு அனுப்புகையில்... போர்கள் இல்லாத உலகம் எத்தனை அற்புதமானது என்று நடுங்க உள்ளே உதிக்கிறது ஒரு சிந்தனை. ஒவ்வொரு கணமும் வாழும் இந்தப் பூமியில் அன்பு செய்ய.. அரவணைக்க எத்தனை இருக்கிறது. ஆனால் தன் ஆதிக்கத்தை எப்போதும் இந்தப் பூமியில் நிலைநாட்டி நான்தான் பெரிய பிளக்கர் என்று உலக வர்த்தகத்தில் நிலை நிறுத்திக்கொள்ள.. வாழ்வுக்கு ஏங்கும் வர்க்கத்திற்குச் சீருடை அணிவித்துச் சிதைத்துப் புதைத்து ஆதாயம் தேடிக்கொண்டேயிருப்பது... அதிகார வர்க்கம்.

ஹீரோவின் பள்ளி நண்பர்களும் போரில் ஈடுபடுகிறார்கள். அவர்களின் சாவும் அது தரும் நோவும் ஹீரோவை இந்தப் பூமியை விட்டு ஓடிவிடச் செய்யும் சிந்தனையைக் கிளறுகிறது. ஓர் இளம் வீரனின் உள்ளார்ந்த பிறாண்டல்களைப் போர் நிகழ்த்தும் இடங்களே இந்தப் படம்.

போர்க்களத்தில் நிற்கும் வீரர்கள் பெரும்பாலும் இருபது வயதை ஒட்டியவர்களாக இருக்கிறார்கள். ஹீரோ கூட 17 வயது நிரம்பிய துறுதுறு வாலிபன்தான். அவனுக்கும் போர்க்களத்தின் மீதிருக்கும் அந்த இனம் புரியாத ஈர்ப்பு இருக்கிறது. வீர தீர நாயகனின் கண்கள் வழியே காணும் போர்க்களம்.. நிஜத்தில் அப்படி இல்லை. நெருக்கத்தில் அவன் மீது கவியும் புல்லட் மழையின் வடிவில் அதன் மறு உருவத்தைக் காண்கிறான். நடுக்கமும் பயமும் தவிப்புமாக உயிர் பயமும் அக மூட்டமும் அவனை அவனில் இருந்தே அந்நியப்படுத்தி எங்காவது ஓடி விட யோசிக்கிறது.

போர் ஒரு சூனியம். உள்ளே சிக்கியவர்கள் வெளியே வரவேண்டுமென்றால் அதையும் போர்தான் தீர்மானிக்கும். துப்பாக்கி அற்றவர்கள் மட்டுமல்ல.. ஏந்தியவர்களும் கைதிகளே. தன்னைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் போரின் மாயக் கம்பிகளின் வழியே தன்னையே நொந்துகொள்கிறான்.

அரசு எப்போதும் ஆயுதங்களின் வழியாகத்தான் ஆட்சி நடத்தும். போர்கள் என்று வந்துவிட்டால் மானுடம் பிறகு. வெற்றிகள் மட்டுமே முதல்முழுக் குறிக்கோள்.

பெண்களின் வாசத்துக்கு அலையும்

இரவுகளின் வழியே ஒவ்வொரு வீரனுக்குள்ளும் இருக்கும் ஆழ் விருப்பத் தவிப்பை உணர்கிறோம். தூரத்தில் நடைபாதைப் பெண்களைக் கண்டுவிட்டால் அவர்களின் குணமும் முகமும் நொடியில் மாறி... அவர்களின் விடலைப் பருவ நிலைக்குள் வந்துவிடுவது இயல்புதானே. பின்னால் சென்று தன்னையே கோமாளியாக்கி விளையாட்டு காட்டும் நிலைக்கு மாற்று எது. ஒரே ஒரு துண்டு வாத்துக் கறிக்கு, ஒரு முட்டைக்கு அவர்கள் படும் பாடு.. பதிலிகள் அற்றவை. திருடிய பச்சை முட்டையை உடைத்துக் குடித்துவிட்டு அதன் பிறகு நடக்கும் அசம்பாவிதம் என்று ஒரு உயிரின் விலை ஒரு முட்டையாகக் கூட இருப்பதுதான் போர்க்கள விதி.

நிலை கொள்ளாத நிழலின் விரட்டல் இந்தப் போர். தீர்வு, பைத்தியம் உண்டாக்கிப் பதறச் செய்து பார்த்து ரசிக்கிறது.

வயிறும் நிறையா... புணர்வும் தெரியாத போர்க்கள நாட்களின் வலி... உடலை உருக்குலைத்து உயிரை நோகச் செய்துவிடுகின்றன. தலைமுறை தலைமுறையாக ஏதோ ஒரு வகையில் இனவெறி கடத்தப்பட்டுக்கொண்டே இருக்கிறது. சுய சிந்தனையை அழிக்கும் வல்லமை போர்களுக்கு உண்டு. அதே நேரத்தில் என்ன நேர்கிறதோ.... அதுதான் வீரத்தின் வழியே கண்டடைந்த வரலாறு. அல்லது தோல்வியின் வழியே சென்று சேர்ந்த மரணம். அர்த்தமற்ற மரணங்களுக்குப் போர்கள் கொடுக்கும் விலை எளிய விளிம்புநிலை வீரர்களின் உயிர்.

அறியாமை, ஆர்ப்பாட்டம், குடும்பத் தேவை, உரு ஏற்றிய முதிர்ச்சியற்ற வீம்பு, கூடவே இனவெறி... இதெல்லாம் கையில் துப்பாக்கியைச் சுகமாக்க வைக்கின்றன. தீர்வு... தோற்ற துப்பாக்கியும் சிலுவைதான் சுமக்கும். ஜெயித்த துப்பாக்கியும் சிலுவைதான் சுமக்கும். ஆனால் ஆடர் போட்டவன் கையில் ஒயினும் கோழிக்கறியும்.

எங்கெல்லாம் எதற்கெல்லாம் எப்படியெல்லாமோ தப்பிய நாயகன் போர் முடிந்து ஊருக்குத் திரும்ப எத்தனிக்கும் அந்த ஒரு பொழுதில்.. இன்னும் இருக்கும் மீதி அரை மணி நேர வக்கிரம்... நினைக்க நினைக்கக் கொதிக்கும் உலைக்களம். உள்ளம் உதிர... உலகம் அதிர... ஒவ்வொரு வீரனின் தத்தளிப்பும் தவிப்பும்தான் அந்த அரைமணி நேரமும் சேர்ந்த இந்தப் படம்.

எதிரி வீரனைச் சரமாரியாகக் குத்திவிட்டு... ஒரு கட்டத்துக்குப் பின் அவன் உயிர் அடங்கத் தவிக்கும் சத்தம் தாங்காமல் அவனுக்கு உதவும் ஹீரோவின் மனநிலைதான் மனிதனாக நாம் எப்போதோ மாறிவிட்டதற்கான அறிகுறி. அதுவும் அவன் பாக்கெட்டில் இருந்து எடுத்த அவன் மனைவி குழந்தை புகைப்படத்தைப் பார்த்துக்கொண்டே அழுகையின் வழியே கரைந்து கதறும்போது... இந்தப் படத்தின் வழியே நாம் கற்றுக்கொண்ட பாடத்தின் வலிமை வலி நிறைந்தது. வாழ்க்கை ஒருபோதும் போர்களின் வழியே பூந்தோட்டம் வளர்க்காது. மாறாக, வதைபட்ட குருதி தோய்ந்த நினைவலைகள் வழியே ஒரு நரகத்தின் தீர்வையே தெளித்துப்போகும்.

எதிராளிகளிடம் இருந்து கவியும் அடிமைத்தனத்தை விட.... தன் பக்கமிருந்தே சூழும் அடிமைத்தனம் ஆபத்தானது. அதுதான் இங்கே துப்பாக்கியைத் தும்பிக்கை மாதிரி தோளில் மாட்டி அதிகாரம் தருவதாக, வாழ்நாள் துயரத்தை நெஞ்சில் அடித்துவிடுகிறது. ஒரு கட்டத்தில் செய்வது என்னதென்றே தெரியாமல் போய்விடுவது... போர்க்களப் பேதலிப்பு. இறுதிக்காட்சியில்... எதிரி வீரன் ஹீரோவைக் குத்திவிட்டுச் செய்வதறியாமல் நிற்பதும்கூட அதுதான்.

உயிர் கருகும் குருதி வாசம் திரை தாண்டி உணர்கிறோம். உள்ளம் படபடக்க.. மனிதா போர்கள் வேண்டாம் என்று முனங்குகிறோம். முப்பது லட்சம் வீரர்களைப் பலி கொடுத்து அவர்கள் மீட்டெடுத்த நிலம் ஒரு சின்ன சுடுகாட்டுக்கு மட்டுமே உதவும் என்பதுதான் போர்களின் மூர்க்கத்தில் கண்டடைந்த முட்டாள்தனம். 1914ஆம் ஆண்டு தொடங்கிய முதலாம் உலகப்போர் 1918இல் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகி முடிவுக்கு வந்தது. சரி... மாண்ட மனிதர்கள் தந்த சாபம் எப்போது முடிவுக்கு வரும்?

இயக்குநர் : Edward Berger
மொழி : German / French
ஆண்டு : 2022

■

● ஜின்னா அஸ்மி

ஏமாறும் ஏமாற்றம்

ஏன் இவ்வளவு விரக்தி அடைகிறாய்
என்றபடியே வெளியே வந்தான் அவன்

நான் ஏமாற்றப்பட்டுவிட்டேன்
என்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை
என்றேன்

ஏமாற்ற நினைப்பவன்தான்
முதலில் ஏமாற்றப்படுகிறான் என்றான்

நான் யாரையும் ஏமாற்றவில்லை
பிறகு ஏன் ஏமாற்றப்படுகிறேன்
என்றேன் கோபமாக

உனக்குக் கொடுக்கப்பட்டது எல்லாம்
உனக்காக மட்டுமே கொடுக்கப்பட்டது அல்ல
உன் மூலமாகக் கொடுக்கப்படுவதற்கும்தான்
இப்போது சொல்
நீ யாரையும் ஏமாற்றவில்லையா என்றான்

கடவுளே என்னை ஏன்
இப்படி சோதிக்கிறாய் என்றேன்

கடவுள் உன்னைச் சோதிக்கவில்லை
கொடுத்த கடவுளிடமே
காணிக்கை என்ற பெயரில்
கடவுளுக்கே திருப்பிக் கொடுத்து
கடவுளையே நீதான் சோதிக்கிறாய்
என்று சிரித்தான்

இதெல்லாம் இயற்கைதானே
இதிலென்ன ஏமாற்ற வேலை என்றேன்

ஏமாற்றுவதில் கொடூரமானது
உன்னை நீயே
ஏமாற்றிக்கொள்வதுதான் என்றான்
அவன் மேலும் சொன்னான்
இயற்கைதானே என இருக்காதே
நிலமற்றவனுக்கும்
ஆறடி நிலத்தை ஒதுக்கி வைத்திருக்கும்
இயற்கையைப் போல் இரு
என்று சொல்லிவிட்டு மறைந்தான்

அவன் இன்னும் சொல்வான் ■

செ.புனிதஜோதி

காதலை ஏந்தும் தமிழின் முதல் தன்முனைக் கவிதைத் தொகுப்பு

தமிழில் காதல் பற்றிக் கூறும் நூல்கள் ஏராளம். பதினெண்மேல் கணக்கு நூல்களுள் அகப்பாடல்களே அதிகம் இடம்பெற்றுள்ளன. அகநானூற்றிலும் குறுந்தொகையிலும் ஐயன் திருவள்ளுவர் காமத்துப்பாலிலும் சொல்லாத காதல் கருத்துக்களே இல்லை.

காதல் என்ற சொல்லே போதை தரும் வஸ்துதானே. அந்தப் போதை எப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கிறது என்பதைத்தான் ஆரூர் தமிழ்நாடனின் "வலியின் புனைபெயர் நீ" என்ற கவிதை நூலும் உரைக்கிறது. சிறிய இன்பத்துப்பால் என்றே சொல்லலாம். அவரே முதல் பக்கத்தில் முழுக்க முழுக்கக் காதலை ஏந்தும் தமிழின் முதல் தன்முனைக் கவிதைத் தொகுப்பு என்று குறிப்பிட்டுள்ளார்.

தன்முனைக் கவிதை என்றால் என்ன? நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது. நானிலு வகைக் கவிதைகள் தெலுங்கில் மிகப் பிரபலம். ஹைக்கூ கவிதையில் இருந்து சற்று விலகி நான்கு வரிகளில் எழுதக்கூடியது. முதல் இரண்டு வரிகள் முற்றுப்பெறும், அதற்கு அடுத்த இரண்டு வரிகள் சொல்லப்பட்ட நிகழ்விற்கு ஒட்டியோ அல்லது முரணாகவோ அமையும். இந்த வகைப்பாட்டில்தான் "வலியின் புனைபெயர் நீ" என்ற தன்முனைக் கவிதை நூல் வெளிவந்துள்ளது.

காதல் உங்களைக் கடக்கவில்லை என்றாலும் காதலை நீங்கள் கடக்கவில்லை என்றாலும் வாழ்ந்ததற்கான அர்த்தம் குறைவு. கவிதை, காவியம், இதிகாசம் போன்றவை உருவானது இதனால்தான். அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள், கண்ணோடு கண் கவ்வியெனும் வசியச் சொற்களைப் பயன்படுத்திய கம்பனை என்ன சொல்வது..

***"யானே யீண்டையேனே
யென்னலனே
ஏனல் காவலர் கவணொலி வெரீஇக்..."***

என்ற குறுந்தொகைப்பாடலில் காதலில் திளைத்த காதலி யானையின் மூங்கில் உணவோடு பொருத்தித் தன் வேதனையைப் பதிவுசெய்கிறாள். `நான் இங்குதான் இருக்கிறேன். என்நெஞ்சோ என் காதலன் கானக நாடனொடு அங்கு கிடந்தொழிகின்றது` என்கிறாள்.

அப்படியாகத்தான் காதல் என்பது வதைக்கக்கூடிய இனிய வலிமை தரக்கூடிய வலி. அதுதான் "வலியின் புனைபெயர் நீ."

காதலின் வலி எப்படி இருக்கும்.. அணுஅணுவாகப் புழு துளைக்கும் வதையைப் போன்றது. அப்படியான உன் அழகு என்னை வதைக்கிறது. நீ அருகில் இருந்தபோதும் தொலைவில் இருந்தபோதும் என்னைக் கொல்லாமல் கொன்று புதைக்கிறாய் என்ற கவிஞர் தாமரை வரிகளை நினைவுக்குள் அமர்த்துகிறது.

ஆனால் ஆரூர் ஐயா காதலை வலியோடு மற்றுமல்லாது, இரக்கத்தோடு, பண்போடு, தீண்டாமை, சமத்துவம், தத்துவத்தோடும், வலிமையோடும் ஒப்பீடு செய்கிறார். பாவேந்தரைப் போன்று காதலியின் கடைக்கண் பார்த்துவிட்டால் "மா மலையும் சிறுகடுகு" என்பாரே, அதனைப் போன்றது "வலியின் புனைபெயர் நீ."

கவிதைநூலிலிருந்து இதோ உங்களுக்காகச் சில கவிதைகளை விதைக்கிறேன். உங்கள் காதல் பயிர்களை வளர்த்துக்கொள்ளுங்கள்.

***"விழி மூடிய உன் இமையிரண்டும்
சமாதிமேடுகள்
அங்குதான் புதைந்துகிடக்கின்றன***

என் இரவுபகல்கள்"

அவள் விழித்திருந்தால் அவனுக்குப் பகலாகவும் உறங்கச் சென்றுவிட்டால், இல்லை பார்க்க முடியாத நேரங்களில் இரவாகவும் அதாவது, இருள் நிறைந்த மனநிலையையும் தந்துவிடுகிறது என்பதைப் போல். என் அருகில் இரு.. எனக்கு இரவு பகலை உருவாக்கித் தரக்கூடிய இயற்கைக் காரணியாய், தேவதையாய் என் இதய வீட்டில் அமர்ந்திருக்கிறாய். அப்படி நீ இல்லாத நிலை சமாதி நிலைக்கு ஒப்பானது என்று தன் காதலின் வலியை, வலிமையை, ஆழத்தை, நேசத்தை எடுத்துக்காட்டுவதாக எனக்குள் பதிவுசெய்கிறது இக்கவிதை.

"காமக்கடலைக் கடப்பது
எளிதிலும் எளிது
காதல் சிற்றோடையைக்
கடப்பதோ அரிதிலும் அரிது."

இந்தக் கவிதை ஐயன் திருவள்ளுவரை அழைத்து வருகிறது.

"கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது."

காம இன்பத்தின் பாதியளவைக் காட்டிலும் பார்வை பெரிது என்கிறார். ஆனால் ஆரூர் ஐயா காமக்கடலை முழுதும் கூடக் கடந்துவிடலாம், ஆனால் காதலில் விழுந்துவிட்டால் எழ முடிவதில்லை என்கிறார்.

"நீ சாதுவானவள்
ஆனால்
உன் நினைவுகள்
அப்படி இல்லை"

என்கிறார்.

பெரிய கைக்காரி என்று கிராமப்புறத்தில் சொல்வார்களே, அதே போலத்தான் காதலியானவள் பார்க்கச் சாதுவாக இருந்தாலும் அவள் அவன் மனதில் அமர்ந்து செய்யும் சேட்டைக்கு அளவே இல்லை என்கின்றார்.

"மௌனம் தகர்த்து
புலன்களை மதித்து
அந்தரங்கம் பேசும்
ஆண்டாளின் குரல் நீ."

தன் உள்ளக் கீற்றை முதன் முதலில் எழுதி வெளிச்சம் போட்டுக் காட்டியவள் ஆண்டாள்தானே. ஆண்தான் காதலிக்க வேண்டும் சொல்ல வேண்டும் என்ற மரபை உடைத்தவள் அவள்தானே. பெண்களுக்கும் அவள் உள்ள மொழியை அந்தரங்கத்தைப் பகிர உரிமையுண்டு என்பதைக் கூறிக் காதலோடு பெண்ணியச் சிந்தனையையும் விதைக்கிறார்.

"உன் சிறகுகளுக்குள்
என்னைச் சிறை வை
இன்னும் விரியட்டும்
என் வானம் "

என்கிறார். சிறை என்பது நாம் தண்டனை என்போம். ஆனால் காதலியின் மனதில் சிறைபிடித்தால் அதுதான் அவரின் வானமாக விரியும் என்கின்றார். சிறை என்பது நேசிப்பு. அவள் எவ்வளவு சிறைபிடிக்கிறாளோ அந்த அளவுக்கு இவர் காதல் வானத்தில் பறக்கலாம். காதலில் ஒருவரை ஒருவர் சிறை பிடித்துக்கொள்வதில்தான் அவர்களுக்கான வானத்தை உருவாக்க முடியும். அதில் எப்போதும் பறவைகளாய்ப் பறந்து வாழ்ந்து களிக்க முடியும் என்பதைப்போல் சிந்தனையை எனக்குள் தந்து செல்கிறது.

இப்படி தித்திப்போ தித்திப்பாகக் காதலை இனிக்க இனிக்கத் தந்துள்ளார். இந்தக் கவிதைகளைப் படித்து முடித்தவுடன் எனக்குள்ளும் ஒரு கவிதை எழுந்தது. அதுதானே நல்ல படைப்பிற்கான வெற்றி. இதோ உங்களுக்காக..

உன் கரப்பிடிக்குள் ஊஞ்சலாடுகிறது
என் இதயம்.
அப்போது பேசும்
புருவமொழி
வேர்வரைக்கும் சாரல் எனக்குள்ளிருக்கும்
நாணத்தை அறிமுகப்படுத்தி
பட்டாம்பூச்சியின் படபடப்பை
கால்களுக்குள் கட்டி
ஒரு வேதியியல் மாற்றம் நிகழ்த்துவாயே
மன்மத அரக்கனைப்போல்
வெட்கமற்று எழுதவும்
வெட்கம் தடை செய்கிறது.
எதைச் சொல்ல
போடா போ

இப்படி அனைவரையும் காதலில் திளைக்க வைத்துக் கவிஞனாக்கியும் விடுகிறது ஆரூர்தமிழ்நாடனின் வலியின் புனைபெயர் நீ என்ற கவிதை நூல். ■

சிறுகதை

இரெத்தினபிரகா. கா
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

ஆளுக்கொரு நியதி

இந்தச் சித்திரையோட ஒம்போது மாசம் முடியிது. இனிமேலதான் ரொம்பக் கவனமா இருக்கணும். ராத்திரிக்கு இரண்டு வேளையா எந்திரிச்சு மாடு என்ன பண்ணுது, அசைவ போட்டுக்கிட்டு இருக்கா இல்ல அசந்து படுத்துக்கிடக்கானு பார்த்துப் பார்த்து வச்சுக்கணும். என்னைக்கு அப்பா இப்படி சொன்னாங்களோ, அன்னேல இருந்து அந்த விஷயத்தையே புடிச்சுக்கிட்டு அலயிது இந்த மலரு கழுத.

காலைல ஏந்திர்ச்சதுலேருந்து அப்போ போட்ருமா இல்ல இப்போ போட்ருமானு மாட்டையே சுத்தி வரா மலரு. பக்கத்து காட்டுல மேயப் போயிட்டு நல்ல வெயிலுக்கு நிழலான இடமாப் பார்த்து, அந்த மாடு படுத்துக்கிடந்தாலும் பக்கத்திலேயே போயி அணைக்கோளிக்கிட்டு நிற்கிறா. நிறைமாத மாடு வால அழகாச் சுருட்டி உட்காரதப் பாத்தா, முந்தானைய மடிச்சுச் சுருட்டிக்கிட்டு உட்கார பொண்ணு மாதிரியே இருக்கு அவளுக்கு.

கர்ப்பமான பொம்பளைய எப்படி, தாலி கட்டின புருஷன் தாங்கித் தாங்கிப் பார்த்துக்கிட்டுத் தலப்பிள்ளைக்காகத் தவம் இருப்பானோ அப்படி ஆகிப்போச்சு மலரு பொழப்பு. வெள்ளப்பசு வெள்ளிக்கிழமை ஈன்டா வீட்டுக்கு நல்லதுனும் ஞாயிற்றுக்கிழமை எருமை மாடு கன்னு ஈன்டா ரொம்பவே நல்லதுனும் ரொம்ப நாளாவே ஊருக்குள்ள ஒரு பேச்சு. ஆனா மலருக்குப் புதன்கிழமைதான் மாடு கன்று ஈனனும்னு ஆசை. ஏன்னா பொண்ணு கிடைச்சாலும் புதன் கிடைக்காதில்ல...

ஒவ்வொரு வாரத்திலயும் "நாளு எந்த நாளு நல்ல நாளு, நல்ல சேதி கொண்ட நாளு"ன்னு நாட்களை நகர்த்திக்கிட்டே இருக்கா. விடிய முன்ன எந்திரிச்சு வெரசாப் போயிப் பார்த்தாலும் நாலு காலையும் நல்லா நீட்டி "நான் நல்லாத்தான் இருக்கே"னு நமட்டுச் சிரிப்பு சிரிக்கிது வெள்ளப் பசு.

"காலையில பாக்குற.. மாலையில பாக்குற.. கால் கடுக்க நின்னுக்கூட பாக்குற... நீ பார்க்கும்போது எப்படி போடுவேன்?"னு நக்கலாப் பாக்குது அந்தப் பசு.

இரண்டு வாரம் ஓடி ஒளிஞ்சுப்போச்சி...

"இந்தா பாரு... நானும் பொறுத்துப் பொறுத்துப் புத்தி கெட்டுப் போயித்திரியிறன். நீ என்னன்னா, அந்தா இந்தானு ஆள அலக்கழிக்கிறீயே.. நியாயமா இது??" னு ஒரு நாளு நாக்கு மேல பல்லப் போட்டு நறுக்குன்னு கேட்டுப்புட்டா அந்த பசுக்கிட்ட.

"ம்ம்ம்ம்.... உஉஉம்ம்ம்.. "

நிமிர்ந்து பார்த்த அந்தப் பசு, "எல்லாத்துக்கும் போயிட்டு வா"னு தலையக் கீழே பார்த்து உளங்குளிர உள்ளுக்குள்ள சிரிக்குது. எள்ளும் கொள்ளும் வெடிக்கிது அவ மூஞ்சியில. எப்போப் பார்த்தாலும் கடுகடுனு உக்காந்திர்க்கா. சிவனேனு கிடந்தாலும் சீம்பாலு திங்கணும்ங்கற ஆச புடுங்கித்திங்கிது அவள.

"ஏம்மா இந்த மாடு இப்படி இருக்குது!! என்னைய விட்டுப் பாக்குறதில்ல அதுக்கென்ன அப்படி ஒரு சந்தோசம்.. அதுக்கிட்ட அப்படி நான் என்னத்தக் கேட்டுட்டன்! ஒரு அழகான கன்னுக்குட்டியத் தான்னு தான கேட்டன்? "

"நீ ஒரு அரவேக்காடு.. பித்துக்குளி மாதிரி பேசாத!! வயித்துக்குள்ளப் பிள்ளைய வச்சிர்க்கவ, என்னைக்கா இருந்தாலும் இடுப்பு வலி எடுத்து, அத கீழ இறக்கி வச்சிதான ஆவணும்.!! என் வயித்துக் கூட்டுக்குள்ளே உன்னய நான் வச்சிக்கிறேன்னு ஆத்தாக்காரி வியாக்கியானம் பேசினாலும் எத்தனை நாளு இத்துனுண்டு கூட்டுக்குள்ள இறுக்கிப்பிடிச்சு உட்காந்திருக்கும் அது?? பத்து மாசம் ஆனதும் இந்தா வந்துரென்னு வந்திராதா வெளியில? அதுக்குள்ள அவசரப்பட்டா எப்படி? போயி படிக்கிற வேலைய பாரு... சும்மா அத பிடிச்சே தொங்கிக்கிட்டு நிக்காத மலரு.."

அம்மா கத்தினாள். மூஞ்சி நெளிஞ்சுபோச்சு மலருக்கு..

எப்படியா இருந்தாலும் இன்னைக்கு இல்லன்னா நாளைய தாண்டாது... தட்டு நல்லாவே ஒடிஞ்சு வருது.. அப்பப்போ சொணக்கி சொணக்கிப் படுத்துக்கிது... வைக்கோலையும் புல்லையும் நிறைய வச்சு நெம்பு நெம்புனு நெம்புனதுல வயிறு இரண்டு பக்கமும் நல்லாவே பொடச்சி நிக்குது மாட்டுக்கு..

அந்திக்கு மேல தொடங்குது அந்தப் பேறுகால வலி!!!

எங்கிட்ட யாரும் வராதீங்கன்னு சொல்லிக்கிட்டுத் தனக்குத் தானே தலைப்பிரசவம் பார்க்கத் தவிக்குது அந்த வெள்ளந்தியான மாடு! இரண்டாவது ஈத்தாவோ இல்ல மூனாவது ஈத்தாவோ இருந்தா முன்னப்பின்ன தெரிஞ்சிருக்கும் பேறுகால வலி.. இது மொத தடவங்கறதால மிரண்டு போயி அரண்டு முழிக்குது...

"ஏய் மலரு... மாட்டுக்கிட்டக்கப் போகாதடி!!! மாடு கன்னுப் போடும்போது அது உடம்புல இருக்கிற ஒவ்வொரு மயிர்கால்லயும் முள்ளுக் குத்துற மாதிரி வலிக்குமாம்... நீ கிட்டக்கப் போயி நின்னு, கண்ணு கலங்கி நிற்கிற மாட்டுக்கிட்ட உன் மூஞ்சக் காட்டி கலவரப்படுத்தி விட்ராதே!!"

அம்மாவ கடைக்கண்ணால ஒரு சின்ன மொற மொறச்சிட்டு, எட்டப் போயி நின்னுக்கிட்டு என்ன பண்ணுது மாடுனு எட்டி எட்டிப்பாக்குற அந்த இளகின மனசுக்காரி! சின்ன வெங்காயத்த சின்ன நூல்ல வரிசையாகக் கட்டி, வீட்டு மாடி மேல நின்னுக்கிட்டு கீழே தொங்க விடுறாப்ல, உள்ளிருந்து வெளியே விடுது மாடு...

"பனிக்குடம் பக்குவமா உடைஞ்சு உசுரு வரதுக்கு உதவியா... பனிக்குடத் தண்ணியில உள் நீச்சல் அடிச்சு வர வசதியா..."



மூஞ்சியையும் முன்னங்கால் இரண்டையும் முன்னுக்கு விட்டு ஏதோ பந்தயத்தில பாஞ்சு ஓடுற குதிரை கணக்கா மாட்டோட பின்னாலிருந்து எட்டிப் பார்க்குது. மலரு எதிர்பார்த்த சக்கரக்கட்டி... நல்ல வாட்டமா ஒக்காந்து நாலு காலையும் வசதி பண்ணி வயித்துக்குள்ள இருக்கிறத வெளியேற்றதுதான் வாயில்லா ஜீவனுக்கு வழக்கம்.

என்ன நினைச்சுதோ இந்த மாடு! விருட்டுனு ஏந்திரிச்சிடுச்சு... எந்திரிச்ச அதிர்ச்சியில உள்ள புரண்ட பாதி உடம்பு படக்குனு வெளியே வந்துடுச்சு கீழ விழ! ஓடிப்போயி ஒத்தாசப் பண்ணி 'கபக்' குனுப் பிடிச்சுட்டாங்க மலரும் அவங்க அப்பாவும்.

கைத்தாங்கலாகப் பிடிச்சி, மணல்ல போட்டிருந்த சணல் சாக்கில படுக்க வச்சு பொத்துனாப்புல அது வாயில, மூஞ்சில இருந்த கசட எல்லாம் வழிச்சி விட்டெறிஞ்சாங்க...

நல்லா காப்பிக்கொட்டை கலருல கிடக்கு கன்னுக்குட்டி... மலருக்கு முகமெல்லாம் பல்லு...

கன்னுப் போட்ட மயக்கத்துல கிறங்கி நிக்குது மாடு. பனிக்குடம் உடைஞ்சு கன்னும் ஈன்டாச்சு நஞ்சு போடுறதுதான் பாக்கி. பகலா இருந்தாலும் பக்கத்து வீட்டுப் பாண்டியன் கொள்ளையில மூங்கித்தளை அறுத்துட்டு வந்துடலாம். இருட்டுல போயி என்னத்த பண்றதுன்னு புலம்புறாரு அப்பா.

வீட்டுக்குள்ளிருந்து ஒரு சத்தம்...

“காளக் கன்னா? கிடேரிக் கன்னா?”

அப்போதான் 'அத' கவனிச்சாங்க இரண்டு பேரும். அட, காளக் கன்னு...!

அவ்வளவுதான்... ஆத்தா தன்னோட ஆட்டத்த ஆரம்பிக்கப்போறான்னு தெரிஞ்சுப்போச்சு மலருக்கு. இதுக்குத்தான் இவ்வளவு அலப்பறையானு மூஞ்ச திருப்பிக்கிட்டாங்க அவளோட அம்மா.

வீட்டுக்கு மகளாப் பிறக்குறதும் மாட்டுக்கு மகனாகப் பிறக்குறதும் ஒன்னு. ஏன்னா,

இரண்டுமே பிறந்த வீட்டுக்குச் சொந்தமில்லை. மக வாக்கப்பட்டுப் போயிருவா.. மாட்டோட மவன் காயப்பட்டுக் கறிக்கடைக்குப் போகிரும்.

வீட்டுக்குத் தலப் பிள்ளையா ஆண்பிள்ளை பிறந்தாக் கொண்டாடுற இந்தச் சமூகம் மாட்டுக்கு மகன் பிள்ளை பிறந்தா "ஐயோ கடவுளே" என்று அழிச்சாட்டியம் செய்யுது. இங்க எதுவுமே ஆசையையும் அன்பையும் பொறுத்தது இல்ல அவங்கவங்க தேவையையும் காரியத்தையும் பொறுத்தது.

புதுசா கன்னுப் போட்ட மாடு என்னமோ ஏதோன்னு நினைச்சுக்கிட்டுத் தான் பெத்த கன்ன, தன்னருகே விட மாட்டுது... சுத்து சுத்துனு சுத்துது. அதோடக் கன்னுக்குட்டிய யாராவது தொட்டா கன்னாபின்னானு கத்துது. அழிச்சாட்டியம் பண்ணிக்கிட்டே அங்க இங்கன்னு ஆடிக்கிட்டே முழு நஞ்சையும் போட்டுடுச்சு... சூட்டோட சூட்டா போட்ட நஞ்ச, ஒரு பையில கூட்டி அள்ளி ஆத்தங்கரையில போடுவதற்காக அப்புறப்படுத்தி வச்சுட்டாங்க.

கன்ன எழுப்பிக் கனிவாக்கூட்டிப் போயி கன்னுடைய வாய மாட்டோட காம்புல வெச்சா... உட்டுதய்யா ஒரு ஒத... கண்ணுல விழவேண்டிய அடி செத்தத்தள்ளி காலுக்கறியிலப் பட கன்னுக்குட்டியோட சேர்ந்து கீழே விழுந்தது மலரு.

கொஞ்சம் விட்டுப் பிடிச்சாங்க.. தத்தித் தத்தித் தாவி ஓடி எழுந்து நடந்து விழுந்து... திரும்பவும், எழுந்து நடந்து... இங்கே என்ன நிலவரங்கறத அனுசரிச்சு... தன்னையே நல்லா நிலைப்படுத்திக்கிட்டுப் பாலு வரக் காம்பு எங்க இருக்குன்னு கண்ண உருட்டி உருட்டித் தேடுது... ஒரு மிதி. அந்த மிதியும் வாங்கிக்கிட்டுக் கடைசியில கண்டுபிடிச்சிட்டு ஆத்தாவ...

பாவம் எம்புட்டுப் போராட்டம் பொறந்ததும் அதுவுமா! மலரு வருத்தப்பட்டாள்... இரவுல நடந்த அலப்பறையில தொப்புள் கொடிய துணி போட்டுக் கட்ட மறந்துட்டாங்க அப்பாவும் பொண்ணும்... அங்கதான் ஆரம்பிக்கப்போகுது பிரச்சனை.

இரண்டு நாளு கொண்டாட்டமா இருந்துச்சி வீடு. ஓடுறது என்ன.. ஒடியாறது என்ன..

ஏமாத்திப் படக்குனு வந்து பால் குடிக்கிறது என்ன... ஒரே கூத்தாகிப்போச்சு புது கன்னுக் குட்டியோட.

மூணாம் நாளு இறுக்கிப்பிடிச்சி தாவாரத்தில கயித்த காலுலப் போட்டுச் சுத்தி கட்டிப் போட்டா... சொட்டுது ரத்தம் சொடசொடன்னு... அந்து விழுந்துடுச்சு தொப்புள் கொடி.

இரத்தத்தைப் பார்த்ததும் புத்திப் பித்துப்பிடிச்சிருச்சு மலருக்கு. சைக்கிள எடுத்துக்கிட்டுச் சடக்கு சடக்கு சடக்குனு மிதிச்சிக்கிட்டுப் போறா மருந்துக் கடைக்கு... அங்க போயி உள்ளதச் சொல்லவும் உடனே தந்தாங்க உறையில் போட்டு ஒரு மருந்த... வீட்டுக்கு வந்து வலதுகையில அந்த மருந்த எடுத்துத் தொப்புள்கொடி இருந்த பக்கம் அப்பி விட்டா...

விடிய காலையில எந்திரிச்சுப் பார்த்தா... இப்போ அப்போனு இழுத்துக்கிட்டு இருக்கு கன்னுக்குட்டி. மலரால அதப் பாக்கவே முடியல...

மாடுகன்னு மேல, கன்னுப்போட்ட கொஞ்ச நாள் வரைக்கும் மதுரமான வாசம் சுத்தி சுத்தி அடிக்கும். அந்த வாச சொகத்த ஒரு வாரத்துக்குப் பிறகு மாடுகன்னு மேல எப்போவும் எதிர்பார்க்க முடியாது. அந்த வாசம் எப்படி இருக்குமினா புதுசாப் பிறந்த குழந்தைகிட்டக்க ஒரு வாசம் அடிக்கும் பாருங்க அந்த மாதிரி... அந்த வாசத்துல ஈர்க்கப்பட்ட 'ஈ'ங்க கன்னோட தொப்புள்கொடியை வட்டமிட்டுக் குடும்பம் நடத்திக் குஞ்சு பொரிச்சிட்டுப் போயிடுங்க... அந்தளவுக்குத் தோதான இடம்.

கன்னுக் குட்டிய மல்லாக்கப்போட்டு லாவகமாக இழுத்து, தொப்புள் கொடியத் தூக்கிப் பார்த்தா, வட்டமாக ஓட்ட போட்டு உள்ளே உட்கார்ந்து குதிக்குதுங்க புழுக்குஞ்சுங்க..

வெடவெடத்துப் போனா மலரு. மருந்து கடைக்காரன் கொடுத்த உறைமருந்த தூக்கி விட்டெரிஞ்சா.. வீட்டுல ஆட்டுன வேப்பெண்ணைய எடுத்து ஒழுக ஒழுக உள்ளங்கை வழியா அந்தத் துவாரத்துக்குள்ள விட்டா, கசப்புப் பட்டோன.. முணு.. முணு... முணுனு.... நின்டுதுங்க, உள்ளப் புதுசா குடிவந்த சனங்க துடி துடின்னு துடிக்கிது... கன்னுக்குட்டி.

இரண்டு மூனு வேளையா மாத்தி மாத்தி ஊத்திப் பார்த்தும் உள் புழு வெளிவந்த பாடில்ல. வேணாம் டா சாமி! இந்த வேப்பண்ண விவகாரமின்னு... வீட்ல விளைய வச்சிக் காய வச்சி அரச்சி வச்ச மஞ்சள கையில எடுத்து... அந்த மஞ்சளோட நாலு சூடத்தையும் கசக்கி நல்லா மாவு மாதிரி ஆன பின்ன அத எடுத்து அந்தத் துவாரத்துக்குள்ள திணித் திணித் திணினு திணிச்சா... செத்த நேரத்துல சன்ன சன்னமாக் கொட்டுது புழு.

பார்க்கவே தாங்கல, கன்னுப் போட்ட மூனே நாளுள்ள இம்புட்டுப் புழு, உள்ள இருந்து உபத்திரம் கொடுத்திருக்கேனு நினைச்சு நினைச்சு அழுகுறா மலரு.

இந்த சாக்குல மலரோட ஆத்தா, `போதும் ஆவுடைப்பா!! என் வீட்டுக் காளப் பிள்ளைக்கு ஒன்னும் ஆகாம உயிர்தப்பிச்சிருச்சினா... ஒன் கோயிலுக்குக் கூட்டியாந்து உனக்கே நேந்து விட்டுறன்`னு வேண்டிக்கிட்டா.

எந்தக் கன்னா இருந்தாலும் வீட்டுக்குத் தேவையான பாலு கறக்குறதுக்கு ஏழெட்டு மாசம் தேவ. மாடு அப்போதான் பால்சுரக்கும். அதுக்கப்பறம், மாடே கன்னுக்குட்டியக் கிட்ட விடாம ஒதைக்க ஆரம்பிச்சுரும். அடுத்த ஈத்துக்கு தயாராகிறதுனால...

காளப் போயிடுச்சுன்னா பாலு போய்டுமேங்கிற கவலைல நேந்துவிட்டுட்டா வீட்டுக் கன்ன... கோயிலுக்கு நேந்து விட்டுப் புண்ணியம் சேர்த்த மாதிரியும் ஆச்சு! உதவாத கன்னுக்குட்டிய ஓரங்கட்டுன மாதிரியும் ஆச்சுனு மனக்கணக்கு போட்டுட்டா... அம்மாவோட இந்த மனக் கணக்கெல்லாம் மலருக்குத் தெரியுமா பாவம். கன்னுக்குட்டிய காப்பாத்துனு அவளும் வேண்டிக்கிட்டா...

பெத்துப் போட்ட மாட்டோட வேல, பாலு கொடுக்கறதும் நக்கிக்கொடுக்கறதும் மட்டுந்தான். மத்தப்படி, சகலமும் செஞ்சுப் பாத்துக்கிட்டவ மலரு. மஞ்சவச்சி அப்பின நல்லெண்ணைக்கு, எள்ளு மாதிரி சிருசா இருந்த புழு இரண்டே நாள்ள உழுந்துக் கணக்கா உருமாறிப் போயி கீழ விழுந்து உருண்டு பொறளுது. மஞ்சளோட வீரியம் அப்பிடி... மஞ்சளும் சூடமும் உள்ள இருந்த கசடுகளையும், அங்க இங்க ஒட்டிக்கிட்டு இருந்த ஒன்னுரண்டு புழுவையும் உருட்டித் திரட்டி வெளிய கொண்டு வந்து விட ஒரு வாரம் ஆகிப்போச்சு...

அடிக்கடி சுடுதண்ணிய வச்சிக் கழுவி, ஆளும் பேருமா அரவணைச்சுப் பார்த்துகிட்டதுல ஏதோ தேறிக் கொஞ்சம் தெம்பா வருது கன்னுக்குட்டி. பாலு ஊட்டமும் பின்னாக்கு ஊட்டமும் சேர்ந்து பலப்படுத்தி வருது அந்த பச்ச மண்ண.

கூட்டியாந்து கட்றதும் குளிக்கக் கூட்டிட்டுப் போறதும் கூடச் சேர்ந்து கும்மாளம் போடுறதுமா போயிட்டு இருக்கு. தண்ணி வைக்கப் போனாத் தலயத் தூக்கிப் பாக்கிறதும் மலரு பக்கத்துலப் போயி உட்காந்தா வசமா அது தலய இவ மடியில வச்சிப் படுத்துக்கறதும் சொற சொறங்கற நாக்கப்போட்டு அவ கையயும் மூஞ்சயும் போட்டு நக்கறதும் ஒரே ரம்மியமா இருக்கு பாக்கிறதுக்கு... அம்மா பிள்ள மாதிரி இருக்கு இரண்டு சீவனும்.

ஆறு மாசம் ஆன பின்னும்... நல்ல ஆளா வளர்ந்த பொறவும் மலரையே சுத்திச் சுத்தி வருது. தலைக்கு மேல ரெண்டு பக்கமும் நீ முந்தியா நான் முந்தியானு முட்டி வளருதுங்க இரண்டு கொம்பு...

தை பிறக்க நாலு நாளிருக்க வேளையில, மூடிப்போட்டு வைச்சிருந்த ரகசியத்த அவுக்குறா மலரோட ஆத்தா. காணும் பொங்கலன்னைக்கு... காளைய ஆவுடயப்பா கோயிலுக்குக் கூட்டிப்போயிப் பொங்கவச்சி நேந்துவிட்டுட்டு வந்திரலாம்னு...

இவ என்னத்த சொல்லவறானு அப்போவும் புரியல மலருக்கு... மாட்டுப் பொங்கலுக்கு மறுநாள்தான் விளங்குது

அவளுக்கு.

“விடியலே வா... வெளஞ்சதெல்லாம் வீடுவந்து சேந்து நம்ப வாழ்க்க நல்லா விளங்க வா” னு சூரியன அழைச்சுக் கட்டிப்பிடிச்சிக் கொண்டாடித் தீக்குது ஊரு..

வீட்டுக்குள்ள ஒரு ஓரத்துள்ள ஒக்காந்து உரக்க உரக்கக் கத்திக்கிட்டு இருக்கா இந்த மலரு. தாயி மாறிப் பாத்தவளுக்கும் பிள்ளைனா பிள்ளைதான். எந்தப் பொம்பளைக்குப் பிள்ளைய விட மனசுவரும்? கோபத்தில், “வேண்டிக்கிட்டா கொண்டுப்போயி விட்டுட்டு வந்திடணும்னு எந்தச் சட்டப் புத்தகத்துல எழுதிருக்கு? என்னோட கன்னுக்குட்டிய என்கிட்டக் கேட்காம எப்படி நேந்து விட்ட...” என அலறித் தீக்குறா.

“நீ எதயாச்சும் ஒலறிக்கிட்டே கிட” என வீட்டுக்குள்ள நடக்கிற பொங்க வேலய ஓடிஓடிக் கவனிக்கிறா அவங்க ஆத்தா முணங்கியபடியே.

தொண்ட வறண்டு போற வரைக்கும் ஆத்தாவ வசப் பாடிட்டு அவக்கிட்டயே அடியும் வாங்கிக்கிட்டு மறுபடியும் கன்னுக்குட்டிக்காக வக்காலத்து வாங்கிட்டுத்தான் இருக்கா.. அவ்வளவு ஆத்திரம் அவளுக்கு.

“ஓடிப்போயிட்டு மொதப்பொங்கலு...

ஓடியாந்துட்டு காணும்பொங்கலு...”

கொட்டில்ல கட்டிப்போட்டிருந்த காளக்கன்ன அவுத்து அழுக்கு தேய்ச்சிக் குளிப்பாட்டிக் கழுத்துல புதுமால போட்டுக் கூட்டிக்கிட்டுப் போறாங்க அப்பாவும் அவுங்க அண்ணனும். மலரு அவங்கக்கூடப் போகல... சாக்குப் போக்கு காரணஞ்சொல்லி சண்ட போட்டுக்கிட்டு வீட்டிலயே இருந்திட்டா. `பொறந்த அன்னைக்கே அதுக்கும் சரி எனக்கும் சரி இந்த உலகம்தான் எழுதி வச்சுப்புடுச்சே! பொறந்த வீட்டுக்குச் சொந்தம் இல்லனு. மாட்டேனு நின்னாமட்டும் விட்டுருவாகளா! நா ஒரு பைத்தியக்காரி... எனக்கே இன்னும் கொஞ்ச வருசத்துல இங்க இடம் கிடையாது... இதுல நா வக்காலத்து வாங்குனா மட்டும் என்கூட இருக்க விட்ருவாங்களா! உன்ன விட்டுட்டேனு எம்மேல நொந்துக்காதடா! என் தங்கமே! என்னையும் ஒருநாள் யாருக்காவது நேந்துக்கிட்டு இப்படி அனுப்பிடுவாகடா! நல்லா இரு... நா ஆவுடையப்பாட்ட வேண்டிக்கிறேன்...` மலரு மனசுக்குள்ள நினச்சிக்கிட்டா...

ஊர்ல இருக்கிற உறவுக்காரங்களையும் கூட்டிக்கிட்டு, சொந்தக்காரங்களையும் சொல்லி அழைச்சிக்கிட்டு வரிச கட்டிப் போகுது வண்டிக. தெருமுக்க தாண்டுர வரைக்கும் வச்சக் கண்ண வாங்காம வாசல்லயே நின்னு வண்டிகட்டிப் போற சனங்களையும் வாக்கப்பட்டுப் போற காளக்கன்னயும் பாக்குறா மலரு.

அப்பாவோட ஆடி விளையாடி அழகா நடந்து போகுது அவக் காளக் கன்னு அசவப் போட்டுக்கிட்டே.... தான் காப்பாத்திக் கரசேத்த கன்னுக்குட்டி, இப்போ தன்னைய நட்டாத்துல விட்டுட்டு நடந்து போகுதேன்ற ஏக்கமும் ஆளோட அரவ சத்தத்த வச்சே அந்த ஆள அறிஞ்சு, அழகாப் பாக்குற கன்னுக்குட்டி இனிமே ஆவுடையார் கோயிலுக்குன்னு நினைக்கிறப்போ... அதோட காது அசையிற அழகப் பார்த்துப் பாத்துக் கானம் படிச்சவ அதோட அம்மான்ற குரல்ல கரஞ்சு போறா... கண்ணீர்ப் பெருக்கெடுக்கு... ஆத்தாளுக்கே புரியாதது இனி அழுதா அந்த ஆவுடையப்பாவுக்கா புரிஞ்சிடப்போவுது... அழுகையை அடக்கிக்கொண்டாள் மலர்.

***

கவிஞர் ஏகாதசி

உசுர அறுத்துப் போட்டுப் போற...

இந்தக் காதல் மட்டும் எப்படி நிலவைப் போன்று எப்போதும் புத்தம் புதிதாகவே இருக்கிறது என்று பல தருணங்களில் யோசித்திருக்கிறேன். மனிதனுக்கு அலுத்துப்போகாத ஒரு விசயம் எதுவென்றால் அது காதலென்றே சொல்லத் தோன்றுகிறது. காரணம் எத்தனையோ பாடுபொருட்களைப் பாடல் வரிகளாக்குகிறபோது ஒரு கட்டத்திற்கு மேல் நகர்தலின் வேகம் குறைந்துவிடுகிறது. சொல்லப்போனால் நின்றும் கூடப் போகிறது. ஆனால் காதல் பாடல் எழுதுகிறபோது மட்டும்தான் சொற்கள் பரிசலில் விழும் மீன்கள் போல் வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன. நான் 300 திரைப்படங்களுக்கு ஒரு 400 பாடல்கள் எழுதியிருப்பதாக வைத்துக்கொண்டால் அவற்றில் 390 பாடல்கள் காதல் பாடல்கள்தான். இருப்பினும் அதன் மீது எனக்குச் சலிப்பு ஏற்பட்டதில்லை. ஒவ்வொரு காதல் பாடலின்போதும் புதிய புதிய திறப்பின் வழியாகக் கற்பனையும் கவித்துவமும் கலந்து நின்று காதலையும் மொழியையும் குளிப்பாட்டுகின்றன.

இந்த மண்ணில் எத்தனை விதமான காதல், எத்தனை விதமான காதலர்கள், எத்தனை விதமான உணர்வுகள், எத்தனை விதமான அழகுகள் இருக்கின்றன. இந்தப் பூமிக்குள் இருக்கும் மண்ணையும் பாறையையும் தண்ணீரையும் வெளியே கொட்டிவிட்டு இந்தக் காதல் முழுவதையும் அள்ளி வைத்துவிட முடியுமா என்றால் போதாது, இன்னும் சில பூமிகள் காலியாகத் தேவைப்படக் கூடும். அதனால்தான் காதல் பூமியைச் சுற்றி எல்லைகளற்று விரிந்து கிடக்கும் இடங்களெல்லாம் நிரம்பிக் கிடக்கிறது. வயதும் வசதியும் கூட இதற்குத் தடையாக இருந்ததில்லை. இதயம் இருக்கிற ஜீவராசிகள்

அனைத்தும் காதலித்துக்கொண்டுதான் இருக்கின்றன. காதலிக்க ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணோ ஒரு பெண்ணுக்கு ஓர் ஆணோதான் வேண்டும் என்று அவசியமில்லை, அப்படி இருப்பதிலும் ஒன்றும் தவறுமில்லை. ஆனால் ஓர் உயிருக்கு ஓர் உயிரற்ற பொருள்கூட காதலிக்கப் போதுமானதுதான். இன்ன இன்ன உறவுகள்தான் காதலிக்க வேண்டும் என்கிற எந்த விதியுமில்லை. அப்பாவும் மகளும் அம்மாவும் மகனும் காதலிப்பதெல்லாம் மிக மிக அழகானது. என்னைப் பொறுத்தவரை நட்புகொள்ளலும் ஒருவிதக் காதல்தான்.

கையில் பாடப் புத்தகத்தை வைத்துக்கொண்டு மொட்டை மாடி டூ மொட்டை மாடி காதலிக்கும் இளைஞர்களும், நிறுவனங்களில் ஒரு கேபினிலிருந்து இன்னொரு கேபினுக்கு அம்புகளை விட்டு அலைபாயும் பணியாளர்களும், கண்கள் பார்க்க அல்லது கண்களை மட்டுமே பார்க்க இடமிருக்கும் பேருந்துக் கூட்டத்திலும் இதயத்தைக் கொடுத்து வாங்கும் பயணிகளும் கொண்ட நகரத்தின் நெரிசலில் முளைக்கிற காதலுக்கொரு அழகுண்டு.

நஞ்சை புஞ்சை நிலங்களில் நடவு செய்கிறபோதும், ஆணும் பெண்ணும் சேர்ந்து ஆடுமேய்க்கிறபோதும், ஊர்த் திருவிழாவில் கும்மி கொட்டுகிறபோதும், தெருக்குழாயில் தண்ணீர் பிடித்து வருகிறபோது தொடை தெரிய லுங்கி கட்டிக்கொண்டு பீடிப் புகையை வளைவு வளைவு விட்டு வக்கனை காட்டுவதுமென உருட்டும் கிராமத்துக் காதலுக்கு வேறோர் அழகு.

நகரத்துக் காதலுக்குக் கொஞ்சம் சுதந்திரம் இருக்கிறது. சாதி, மதம், பொருளாதாரம் உள்ளிட்ட அத்தனை பேதங்களும் எந்திர வாழ்வினாலும் பொதுக் குடியிருப்புகளாலும் மற்றும் கல்வி கற்போர் எண்ணிக்கை மிகுதியாலும் நசுங்கி முகம் தெரியாமல் போவது அதற்கு முக்கியக் காரணமாகும். ஆனால் கிராமங்களில் அப்படி இல்லை. அங்கே ஒரு ஆண் காதலிப்பது எளிது. ஏனெனில் அந்த ஆண் எப்போது வேண்டுமானாலும் அந்தக் காதலை நிறுத்திக்கொள்ளலாம். ஆனால் பெண்களுக்கு அங்கே சூழல் வேறுமாதிரி. ஒருத்தி காதலிப்பது நெருப்பாற்றில் நீந்துவது போன்றதாகும். இருப்பினும் மனம்தான் யார் சொல்லைக் கேட்கிறது. அது அதன் உன்னதத்தை அதன் வானத்தை அடையத்தானே விரும்பும். அதுதானே இயற்கையானது.

ஆனால் சில மனிதர்களின் அறியாமையால் மலர்கள் கருகத்தான் காண வேண்டியிருக்கிறது. காதலிப்பது ஒரு போராட்டம் போல் ஆகிப்போனது. ஆனாலும் பெண்களுக்குப் போராட்டம் பிடித்த ஒன்றுதான். கீழ்காணும் பாடல் கூட நாளை நடக்கப்போகின்ற எதனைப் பற்றியும் கவலை கொள்ளாமல் இன்றைய உணர்வைக் கொட்டிக் கவிழ்க்கும் ஒரு கிராமத்துக் கிளியின் காதல் ரீங்காரம்.

பல்லவி

உசுர அறுத்துப் போட்டுப் போற
கருதப் போல
மனச ஒடச்சுப் போட்டுப் போற
வளவியப் போல

கரு கரு நெறந்தான் – நெஞ்சக்
கூறு போடுது
கட்டாந் தரையிலதான் – ஆத்து
நீரு ஓடுது

ஏ மொரட்டுப் பயலே
அட கரட்டு முயலே
தெரியாப் பொருளத் திருடிப் போகும்
திருட்டுப் பயலே

சரணம் – 1

ஓரக்கண்ணால் என்ன மேஞ்ச
காப்பியில் உப்பப் போட்டேன்
ஏம்பேர நானும் மறந்து

அப்பங்கிட்டக் கேட்டேன்

அந்த காள மாட்டப் பாத்தேன்
ஒன்னப்போல கண்ணு – அந்த
கட்டுவிரியன் பாக்கும்
ஒன்னப் போல நின்னு
கண்ணுக்குத் தெரிவதெல்லாம்
ஒன்னப்போலத் தெரியுது – நான்
என்னடா பொண்ணு

ஏ மொரட்டுப் பயலே
அட கரட்டு முயலே
தெரியாப் பொருளத் திருடிப் போகும்
திருட்டுப் பயலே

சரணம் – 2

ஒன்னத் தானே நெனச்சுக்கிட்டு
கோவக் கொடியா எளச்சேன்
ஓ வீடு பக்கம் வரத்தான்
தெருவ நானும் வளச்சேன்

ஒரு மீச ஊசி தாடா
கிழிஞ்ச சீல தைக்க – ஓங்
கண்ணு செவப்பத் தாடா
போகித் தீயி வைக்க
போதுமே தாங்கல
மஞ்சப் பையி வாங்குடா
ஏ வெக்கத்த வைக்க

ஏ மொரட்டுப் பயலே
அட கரட்டு முயலே
தெரியாப் பொருளத் திருடிப் போகும்
திருட்டுப் பயலே

ஹேர் கட் செய்து, பேண்ட் சர்ட் ஷூ சகிதம் வரும் ஒரு சிவப்பான ஆணைத்தான் பெண்களுக்குப் பிடிக்கும் என்பதும், அவன் நுனி நாக்கில் ஆங்கிலம் சடுகுடு ஆடவேண்டும், கையில் பிரேஸிலெட் மினுங்கும் வசதி படைத்தவனாக இருக்க வேண்டும் என்பதெல்லாம் ஆண்களின் தவறான கற்பிதம். தன்னம்பிக்கை மிகுந்த ஓர் ஆண், பிறருக்கு ஓடி ஓடி உதவுகிற ஓர் ஆண், பெண்களைச் சமமாக மதிக்கிற ஓர் ஆண் பிச்சை எடுப்பவனாக இருந்தாலும் ஒரு பெண்ணுக்குப் பிடிக்கும் என்பது எனது ஆராய்ச்சியில் கிடைத்த கருத்து.

பெண்கள் உண்மையையும் நேர்மையையும் பெரிதும் விரும்புகிறார்கள். இவ்விரு குணங்கள் எல்லாருக்கும் இருக்க வேண்டும் என்பதோ இப்புவியை நேசிப்பவர்களின் விருப்பம். ஆனால் பெண்கள் அப்படியானவர்களைத் தேடி அடைகிறார்கள். அவர்கள் அழுக்காக இருக்கிறார்களா, பார்ப்பதற்குக் கரடு முரடாக இருக்கிறார்களா, வேற்று சாதி வேற்று மதத்தவர்களாக இருக்கிறார்களா என்பதைப் பற்றியெல்லாம் அவர்களுக்குக் கவலை இல்லை என்பதே நிதர்சனம்.

இந்தப் பாடலின் நாயகன் கூட இந்த வகை ஆள்தான், அதனால்தான் இவள் இப்படி மயங்கிப்போகிறாள்.

ஒன்றிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை என்னோடு பயின்ற என் பள்ளித் தோழன் காசிமாயனுக்கு ஒரு குடும்பம் இருந்தது. குழந்தைகளும்தான். அவன் வயல் கரைக்குக் கூலிக்குப் போகிறவன். அவன் பள்ளி நாட்களில் பாடத்தையும் படித்தலையும் விரும்பாதவன் அல்லது படிப்பு தலைக்குள் ஏறாத நல்லவன்.

நான் எங்கள் கிராமத்திற்குப் போயிருந்த நாளொன்றில் சாலையில் ஒரு மனப்பிறழ்வு அடைந்த இளம்பெண் ரோட்டில் செல்லக் கண்டேன். அவள் பேரழகியாக இருந்திருக்க வேண்டும். அதன் சுவடுகள் அவளிடம் இருந்தன. அழுக்காகியும் கிழிந்தும் போன

ஆடை. பேசும் பாஷை தமிழ் இல்லை. அருகிலுள்ள மாநிலங்களின் மொழிகளில் ஒன்றாகவும் அது இல்லை. அப்படி எனில் நமக்குத் தெரிந்த அனுமானம் அவள் வடநாட்டுக்காரியாக இருக்கலாம் என்பதுதான்.

நான் அவளைப் பார்த்துக்கொண்டிருந்த அதே நொடிகளில் என் அம்மா என்னிடம் சொன்னார்கள், அந்தப் பெண் என் பள்ளித் தோழன் காசிமாயனின் காதலியென்று. அப்போது என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

அவன் மண்வெட்டியை வைத்துக்கொண்டு கூலி வேலைக்குப் போகிற வழியில் இந்தப் பெண்ணைப் பார்த்திருக்கிறான். முதலில் அவளின் அழகில் மயங்கியவன் இப்படி ஒரு அழகி சோற்றுக்காக அலைவதையும், சமூகத் தொந்தரவுக்கு ஆளாவதையும் விரும்பாமல் அவள் மனப்பிறழ்வானவள் என்பதையும் தாண்டி தன் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டான். இவனது குடும்பம் இவனை மொய்த்து எடுத்தது. அதற்கு அஞ்சுகிற ஆள் அவன் இல்லை என்பது ஏற்கனவே அவர்கள் அறிந்திருந்ததால் ஒரு கட்டத்தில் அவனை விட்டுவிட்டார்கள்.

ஒரு குடிசையில் அவனும் அந்த வட நாட்டு அழகியும் வசித்துவந்தனர். சில வருடங்களில் அவள் நோயால் பெரிதும் பாதிக்கப்பட்டு மருத்துவம் பார்க்கும் வசதியின்றி இறந்துபோகிறாள். அவன் மட்டுமே காதலியின் பிணத்தைத் தூக்கிக்கொண்டு இடுகாட்டில் புதைத்திருக்கிறான். அதற்கடுத்து அவனால் வேலைக்குச் செல்ல முடியாமலும் ஒழுங்காகச் சாப்பிட முடியாமலும் அவள் நினைவால் துடித்துக் கிடந்திருக்கிறான். எப்பாடுபட்டோ சில மாதங்கள் கடந்திருந்த சூழலில் நடுக்காட்டில் இருந்த காசிமாயனின் குடிசையைக் கழுகு வட்டமடித்துக்கொண்டிருக்க ஊரார் உறவினர்கள் போய்ப் பார்த்தபோது செத்துப் பத்து நாட்களாக அழுகிய நிலையில் காசிமாயனின் பிணம் கிடந்ததாக அம்மா சொன்னார்.

ஒரு காதல் கதையின் நாயகர்கள் மன்னர்களாக இருக்க வேண்டும் என்று இல்லை. மாளிகையில் வசித்தவர்களாக இருக்க வேண்டும் என்றும் இல்லை. அல்லது ஐந்து வருடங்கள் காதலித்து இருந்திருக்க வேண்டும் என்றோ அரை நூற்றாண்டு காதலித்திருக்க வேண்டும் என்றோ இல்லை. ஓர் ஆகச்சிறந்த வார்த்தையைச் சொல்ல ஒரு நொடி போதுமானது. ஓர் உண்மையைச் சொல்ல ஒரு நொடி போதுமானது. ஒரு சிறந்த காதலை நிரூபிக்க ஒரு நொடி போதுமானது. அப்படித்தான் சில ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த இந்த காசிமாயன் வடநாட்டுப் பெண் காதலும் என்று சொல்லத் தோன்றுகிறது. இதில் காசிமாயன் தன் குடும்பத்திற்குச் செய்த காரியத்தைப் பற்றி இங்கே பேச எனக்குப் போதுமான தரவுகள் இல்லை. ஆனால் அவனின் காதல் எத்தனை ஈரமானது என்பதை அறியமுடிந்தது.

இந்தக் கதையில் காசிமாயன் ஒரு சராசரி மனிதன், அவன் அவள் மீது காதல் கொண்டதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஆனால் ஒரு மனப்பிறழ்வு கொண்டவள் இவனின் காதலைப் புரிந்துகொண்டு இவன் பின்னால் வந்ததுதான் எனக்குப் புதிர். இப்படித்தான் காதலை எழுத சூழலைப் பெற்றுக்கொள்கிறது என் எழுதுகோல். இதன் முற்பகுதி எழுதிய பாடல். பிற்பகுதி எழுதாத பாடலின் சூழல். ■

நிசப்தத்துக்கு உலகு
அத்தனை அஞ்சுகிறது
சப்தத்தின்
துடிப்பினால் மட்டுமே
உயிரோடு இருக்கிறது
காலம்
அது நிற்கும் நொடி
அங்கே ஒரு பிணம் விழுகிறது
மௌனமாயிருப்பதை
மயிருக்குச் சமானமாக
பார்க்கிறது உலகு
மௌனமாயிருக்கும்
ஓர் மென்மையான பூவை
பறித்துக் கசக்கிக் கொல்கிறது
மௌனக் குளத்தில்
குப்பையள்ளி வீசுகிறது
கடலைப்பார்
ஆங்காரமாய்க் கூக்குரலிட்டபடி
தூக்கியெறிந்த
அவன் செருப்பாலேயே
அவனை அடித்துத் துரத்துகிறது
மழையோ ஓங்கரித்தபடி
தன் ஆயிரம் விரல்களின்
குத்தூசிகள் கொண்டு
உலகை
எழமுடியாமல் சாய்க்கிறது
சப்தமே சக்தி
சப்தமே அற்புதம்
சப்தமே
அந்தகார அண்டவெளியில்
எறியப்பட்ட
உயிரின் அறைகூவல்.

✧ காயத்ரி ராஜசேகர்

மந்திரம் தந்திரம்
மயக்கும் இசைக்குறிப்பு
தேனொழுகும் சுவை
எதுவுமில்லை.
வணங்குதல் குழைதல்
பழித்தல் விலக்குதல் ஏதுமற்று
நூலறுந்து
சட்டையிலிருந்து நழுவிய
பட்டனைப் போல
எங்கோவொரு மூலையில்
கிடக்கிறது.
கால்களைக்
கைகளைப் போலத்
தேய்த்துக்கொண்டு
சண்டையிடத் தயாராய்
அதன் மேலேயே
அமர்கிறது ஓர் ஈ
கொஞ்சம் பருத்து
அவரை விதையைப் போலப்
பாய்க்கடியில் கிடந்தது.
மேலாகக் கிளறி ஊன்றி
மூன்றுநாள் கழித்துப் பார்க்க
இருவித்திலைத் தாவரமாக
முளைவிட்டிருக்கிறது.
எழுதிக்கொண்டிருக்கும்போதே
எங்கிருந்தோ
ஒரேயொரு சொட்டு வழிய
மாயமாகிவிட்ட அச்சொல்,
தன்னைத்தானே படர்த்திக்கொள்ள
ஒரு குச்சிதான் தேடுகிறது.
பெரிய மனது வைத்து
பந்தலே போட்டுத் தருகிறாய் நீ.

✧ மா. காளிதாஸ்

வானவில் வண்ண மின்னல் அடுத்த இதழில் வெளிவரும்.

படைப்பு நுவல் : கூடல் – 1
படைப்பாளி கோ. லீலா அவர்களின்
படைப்புகளைக் குறித்து
படைப்பு
கோ. லீலா
இடம்
டிஸ்கவரி புக் பேலஸ்
பிரபஞ்சன் அரங்கம்
சென்னை-78
நாள்
04 – Dec – 2022
மாலை 4 to 7 pm
தலைமை
கவிஞர் யூமா வாசுகி
கவிஞர் பிருந்தா சாரதி – வரையாட்டின் குளம்படிகள்
கவிஞர் மு.முருகேஷ் – ஷின்டோ
கவிஞர் தமிழ்மணவாளன் – ஹைக்கூ தூண்டிலில் ஜென்
கவிஞர் அமிர்தம் சூர்யா – சுகிமி
மறை நீர்
சூழலியலாளர்
கோவை சதாசிவம்
WATER AND
VIRTUAL WATER
ஏற்புரை
கோ. லீலா
வரவேற்புரை
ஜின்னா அஸ்மி